Registered as Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 36 கதிர் : 220 | ஞாயிற்றுக்கிழமை | ஆனி 20 நாள் 04 ஜூலை 2021 | வள்ளுவர் ஆண்டு 2052

பக்கங்கள்: 16+16 விலை : ரூ.40

செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

# தமிழ்க் கட்சிகளினது ஒற்றுமையை கூட்டமைப்பாக முன்னெடுக்க முடிவு

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளி கட்சித் தலைவர்கள் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜூலை 4

தமிழ்த் தேசியப் பரப்பில் இயங்கும் கட்சிகளை தேர்தல் கூட்டாக அல்லாமல் தமிழ் மக்களின் பிரச்சினைகளை ஒரே குரலில் பேசுவதற்காக ஒருங்கிணைக்கும் முயற்சியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக முன்னெடுப்பது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்கள் நேற்றுக் கூடி முடிவுசெய்துள்ளனர். இதனடிப்படையில் இன்றைய தினம் சந்திப்புக்கு வரக்கூடிய ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் பேசுவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள் 14 ▶ ளது.

## நேற்று 1,251 பேருக்கு கொரோனாத் தொற்று!

கொழும்பு, ஜூலை 4

நாட்டில்நேற்று1,251பேருக்குக்கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு 14 ▶

## சாவு 34

### மொத்தம் 3,191

கொழும்பு, ஜூலை 4

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மேலும் 34 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் நேற்று அறிவித்துள்ளது. அதன்படி நாட்டில் கொரோனாத் 14 ▶

## முடக்கம் தொடர்பில் இன்று தீர்மானம்

*இராணுவத் தளபதி தெரிவிப்பு*

கொழும்பு, ஜூலை 4

டெல்டா திரிபு வைரஸ் காரணமாக நாட்டை முடக்குவதா என்பது தொடர்பிலும், மாகாணங்களுக்கு இடையிலான பயணத் 14 ▶

## கொரோனாத் தடுப்பூசி இரண்டாம் கட்டம் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ் மாவட்டத்தில் இரண்டாவது கட்டமாகத் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் நாளைமுதல் இடம்பெறும் என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், 14 ▶

## இரண்டு டோஸும் போடாவிடின் டெல்டாவால் ஆபத்து அதிகம்!

*மருத்துவர் சந்திம ஜீவந்தர எச்சரிக்கை*

கொழும்பு, ஜூலை 4

கொரோனாத் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு டெல்டா திரிபு வைரஸால் பாதிப்பு அதிகம் என்று சிறி ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நீர்ப்பீடனம், உயிரணு தொடர்பான 14 ▶

கொழும்பில் முகாமிட்டு

## ராஜபக்ச குடும்பம் மந்திராலோசனை!

*பஸிலின் வருகையும் தாமதமாகும் அறிகுறி விமல் தரப்பை சமரசப்படுத்தவும் வியூகம்*

கொழும்பு, ஜூலை 4

ராஜபக்சக்களுக்கிடையிலான முக்கியத்துவமிக்க சந்திப்பொன்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் உத்தியோப்பூர்வ வதிவிடத்தில் நேற்று நடை 14 ▶

## விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

கிளிநொச்சி, ஜூலை 4

கிளிநொச்சியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். ஏ9 வீதியில் புனித திரேசா ஆலயத்துக்கு முன்பாக இந்த விபத்துச் சம்பவித்துள்ளது. 12 ▶

## மேல் மாகாணத்திலிருந்து பரவியது டெல்டா வைரஸ்

**திருமலை உட்பட 4 மாவட்டங்களில் தொற்றாளர்கள் நேற்று அடையாளம்**



கொழும்பு, ஜூலை 4

கொழும்பு, திருகோணமலை, காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 13 பேருக்கு 'டெல்டா' வைரஸ் திரிபு உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கொரோனா 14 ▶

## கொரோனா மீட்புப் பணிகளில் வடக்கு கவனிக்கப்படவில்லை

*கஜேந்திரகுமார் எம்.பி. குற்றச்சாட்டு*

முல்லைத்தீவு, ஜூலை 4

கொரோனாப் பெருந்தொற்றைத் தடுப்பதற்காக அதிகளவில் செலவு செய்யப்பட்டுள்ளது என்று அரசு தெரிவிக்கின்றது. ஆனால் இவ்வளவு பெரியதொகையில் 5 வீதம்கூட வடக்குக்கு வரவில்லை என்பதுதான் உண்மை. வடக்கு கிழக்கில் தடுப்பூசி நடவடிக்கைகள்கூட மிகவும் 14 ▶

## புலிகளை புகழ்ந்தாராம்: இளைஞனுக்கு மறியல்

திருகோணமலை, ஜூலை 4

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் அதன் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனையும் புகழ்ந்து முகநூல் மற்றும் 14 ▶

## கடலட்டைப் பண்ணைக்கு எதிராக மீனவர்கள் போர்!

கிளிநொச்சி, ஜூலை 4

கிளிநொச்சி வலைப்பாடு பாலாவி பகுதியில் தனிநபர் ஒருவர் அமைத்துள்ள கடலட்டைப் பண்ணைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பள் 14 ▶

## தாதியர் சங்கத்தினுடைய கோரிக்கைகளை நடைமுறைப்படுத்த மருத்துவர்கள் எதிர்ப்பு

***தொழிற்சங்கப் போராட்டத்தில் குதிப்போம் என்றும் அரசுக்குப் பகிரங்க எச்சரிக்கை***

கொழும்பு, ஜூலை 4

தாதிய உத்தியோகத்தர் சங்கத்தின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக ஜனாதிபதி கோத்தாபய உறுதியளித்துள்ளார். அந்தக் கோரிக்கைகளை தேசியக் கொள்கைகளை மீறி நடைமுறைப்படுத்த முயன்றால், அதற்கு எதிராக 11 ▶

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கில் அதிகரிக்கும் வன்முறை அரசின் நடவடிக்கைகள் என்ன?

## எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி



**கொழும்பு,ஜூலை 4**

**வடக்கு மாகாணத்தில் மீண்டும் வன்முறைகள் அதிகரித்துவரும் நிலையில், வன்முறையாளர்களுக்கு எதிராக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன? என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்பியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் குறிப்பாக வடக்கில் அமைதியை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்குமாறு அரசை கேட்டுக்கொள்கின்றோம். பலவீனமான இந்த அரசின் ஆட்சியில் மக்கள் பெரும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளனர். இந்த அரசுக்கு மனிதாபிமானம் இல்லை. நாட்டை நிர்வகிக்க முடியாமல் தள்ளாடிக்கொண்டிருக்கிறது.

தேசிய பாதுகாப்பு தொடர்பில் நிபுணத்துவம் பெற்றுள்ளோம் என்று கூறியவர்களே இன்று ஆட்சியில் உள்ளனர். தற்போது வடக்கில் கொலைகாரர்களால் மக்கள்மீது கடுமையான தாக்குதல்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அவர்களின் கைகளும் வெட்டப்பட்டுள்ளன.

இந்த கொலைக் கும்பலைக் கைது செய்ய முடியாமல் போயுள்ளதா என்று அரசிடம் கேட்க விரும்புகின்றேன். குறுகிய காலத்துக்குள் மக்களை பெரும் நெருக்கடிக்குள் அரசு தள்ளியுள்ளது. தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவோம் என்று வழங்கிய வாக்குறுதிகள் பொய்யாகியுள்ளன- என்றார். (ஒ,4)



## தாவடி தோட்டவெளியில் நான்கு வாள்கள் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ்ப்பாணம் தாவடி தோட்டவெளி பகுதியில், 4 வாள்கள் மீட்கப்பட்டுள்ளன என்று சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

வன்முறைக் கும்பலைச் சேர்ந்த நபர்கள் குறித்த வாள்களை அந்தப் பகுதியில் போட்டுவிட்டுச் சென்றிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் தெரிவித்தனர். (த-26)

## முற்றாக முடக்கப்பட்டது செம்மலை கிழக்கு

முல்லைத்தீவு, ஜூலை 4

முல்லைத்தீவில் செம்மலை கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் உள்ள நாயாற்று பகுதியில் தென்னிலங்கையைச் சேர்ந்த 5 மீனவர்களுக்குக் கொரோனாத் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதையடுத்து, செம்மலை கிழக்கு கிராம அலுவலர் பிரிவு முற்றாக முடக்கப்பட்டுள்ளது என்று கொவிட் தடுப்பு பாதுகாப்பு செயலணி அறிவித்துள்ளது.

நாயாற்று பகுதியில் புத்தளம், வென்னப்புவ, கறுக்குபனை பகுதியைச் சேர்ந்த ஆயிரக்கணக்கானவர்கள் பருவகால கடற்றொழில் நடவடிக்கைக்காக வந்துள்ளார்கள். இவர்கள் தொடர்பில் எந்தவித பதிவுகளும் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்திடமோ அல்லது வேறு அரச திணைக்களத்திடமோ இல்லை.

இங்கு வாடிகள் அமைத்து நெருக்கமாக வசித்து வருபவர்கள் சுகாதார விதிமுறைகளை கடைப்பிடிக்காது செயற்பட்டு வருகின்றமையை சுகாதார அதிகாரிகள் சென்றுபார்வையிட்டனர்.

ஆயிரக்கணக்கானவர்கள் வாழ்ந்து வரும் இந்தப் பகுதியில் 74 பேருக்கே பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஏனையவர்கள் பரிசோதனைக்கு ஒத்துழைக்கவில்லை என்று சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

எனவே, குறித்த பகுதியை முடக்க வேண்டும் என்று சுகாதாரத் தரப்பு நேற்றுமுன்தினம் பரிந்துரைத்திருந்தது. இந்தநிலையில், தேசிய கொவிட் 19 தடுப்பு பாதுகாப்பு செயலணியால் செம்மலை கிழக்கு பகுதி முடக்கப்பட்டுள்ளது. (த-19)

## சதொச பணியாளருக்கு கொவிட் தொற்று உறுதி

### வவுனியா கிளை மூடப்பட்டது!

வவுனியா, ஜூலை 4

கொவிட் தொற்றுப் பரவலையடுத்து வவுனியா நகர சதொச கிளை நேற்றுமுன்தினம்மாலை மூடப்பட்டது.

வவுனியா நகரில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளின்படி, வவுனியா நகர சதொச கிளையில் பணியாற்றும் ஊழியர் ஒருவருக்கு கொவிட் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த ஊழியரை கொவிட் இடைநிலைசிகிச்சை நிலையத்துக்கு அனுப்பிவைக்க சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அவருடன் தொடர்பிலிருந்த ஊழியர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அத்துடன் சதொச கிளையும் சுகாதாரப் பிரிவினரால் மூடப்பட்டுள்ளது. (த-18)



## கொரோனா சிகிச்சைக்குச்செல்ல மறுப்புத் தெரிவித்த நோயாளர்கள்


முல்லைத்தீவு. ஜூலை 4

முல்லைத்தீவு நாயாற்று பகுதியில் வாடி அமைத்து பருவகால தொழில்செய்து வருபவர்களில், 5 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டநிலையில், அவர்களை கொரோனா இடைநிலைச் சிகிச்சை மையத்துக்கு அழைத்துச்செல்ல முற்பட்டபோதும், நோயாளர்கள் அதற்கு மறுப்புத் தெரிவித்து அடாவடியில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

நீண்டநேர இழுபறியின் பின்னரே அவர்களை சிகிச்சை மையத்துக்கு அழைத்துச்செல்ல முடிந்தது என்று தெரிவிக்கப்பட்டது. (த-19)

# நாயாற்றில் கொவிட் கொத்தணி: சுகாதாரத்துறைக்கு அச்சுறுத்தல்

### பாகுபாடின்றி நடவடிக்கை எடுக்குமாறு கரைதுறைப்பற்று தவிசாளர் வலியுறுத்து



முல்லைத்தீவு, ஜூலை 4

நாயாற்றுப் பகுதியில் பருவகால கடற்றொழிலுக்காக வந்த மீனவர்கள், சுகாதாரத்துறைக்கு அச்சுறுத்தலையும் சவாலையும் ஏற்படுத்தியுள்ளனர். அதுமட்டுமன்றி, முல்லைத்தீவில் கொவிட் கொத்தணி உருவாகும் அபாய நிலையையும் தோற்றுவித்துள்ளது என்று கரைதுறைப்பற்று பிரதேச சபைத் தவிசாளர் க.விஜிந்தன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சபையின் எல்லைக்கு உட்பட்ட நாயாற்றுப் பகுதியில் பருவகால மீன்பிடித் தொழிலை மேற்கொள்வதற்காக வெளி மாவட்டங்களிலிருந்து வருவது வழமையாகிவிட்டது. இவர்களில் 5 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதைத் தொடர்ந்து கொவிட்- 19 இன் உச்சம் எங்கள் பிரதேசங்களை பாதிப்படைய வைக்கின்ற நேரங்களில் நாங்கள் பயணங்களை மேற்கொண்டுள்ளோம். ஆயிரம் வரையான சிறுவர்கள் தொடக்கம் பெண்கள் முதியவர்கள் வரை எந்த விதமான பதிவுகளும் இல்லாமல் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றார்கள். இவர்களிடம் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின்போது 5 பேருக்கு கொரோனாத்தொற்று ஏற்பட்டிருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சுகாதாரத் திணைக்களத்தினர் அங்கு சென்றபோதும், சுகாதாரத்துறைக்கு அச்சுறுத்தலான நிலைமையே காணப்படுகின்றது. அங்குள்ளவர்கள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு ஒத்துழைக்கின்ற நிலையும் காணப்படவில்லை. தனியாள் இடைவெளியும் காணப்படவில்லை. அங்கு பல்வேறுபட்ட மாவட்டங்களிலிருந்து, மாகாணங்களிலிருந்தும் வந்துசெல்கின்றமையைக் காணக்கூடியதாக உள்ளது. சுகாதாரத்துறையினரால் மாகாணங்களுக்கிடையிலான பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தநிலையில்கூட, குறித்த பகுதிக்கு வருபவர்களின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுகின்றது. இது முல்லைத்தீவில் கரைதுறைப்பற்று பிரதேசத்துக்கு பெரும் அச்சுறுத்தலாகக் காணப்படுகின்றது.

இதனைத் தடுப்பதற்கு அரசு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. சட்டவிரோத மீன்பிடி தொடர்கின்றது. அங்கு எந்தப் பாதுகாப்பும் அற்றநிலையில் நெருக்கமாக வாடிகள் அமைத்து வாழ்ந்து வருகின்றார்கள்.

எனவே, மீண்டும் ஒரு கொரோனாக் கொத்தணி ஏற்படாமல் இருக்க வேண்டும். அதற்கு பாகுபாடின்றி நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்- என்றார். (த-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவுப் பஞ்சத்தை ஏற்படுத்தும் அரசு

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 4

நாட்டில் உர நெருக்கடி ஆரம்பித்துள்ளதால், எதிர்காலத்தில் மக்கள் பஞ்சத்தை எதிர்நோக்க கூடும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், விவசாயிகளுக்கு உரம் கிடைக்காத போது, உற்பத்தி குறைவடையும். விவசாய உற்பத்தி குறையும் போது, நமது நாட்டில் உணவுப் பாதுகாப்பு மோசமடையும். அது போன்ற ஒன்று நடந்தால் உணவை இறக்குமதி செய்வோம் என்று அரசு கூறுகின்றது. உண்மையில், இந்த அரசுக்கு உணவு இறக்குமதி செய்ய பணம் இல்லை. அவ்வாறெனில் நாட்டில் பஞ்சம் ஏற்படும். உணவுப் பற்றாக்குறையால் மக்கள் வீதியில் மயங்கி விழக் கூடும். படிப்படியாக சேதன இயற்கை உரத்தை நோக்கிச் செல்ல ஒரு திட்டத்தை உருவாக்குங்கள். இந்த நாட்டு மக்களை வீணாக மரணத்தின் விளிம்புக்கு இழுக்க வேண்டாம் என்று நாங்கள் அரசைக் கேட்டுக் கொள்கிறோம். என்றார். (ஓ.4)

# மேலும் பல பொருள்களின் இறக்குமதிக்கு தடை விதிப்பு!

கொழும்பு, ஜூலை 4

பல ஆடம்பரப் பொருள்களின் இறக்குமதியையும், அத்தியாவசியமற்றதாகக் கருதப்படும் பிற பொருள்களையும் இறக்குமதி செய்வதை மேலும் குறைப்பதற்கு அரசு முடிவு செய்துள்ளது என்று கொழும்பு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

அரசு இறக்குமதி செய்வதை குறைப்பதற்கு திட்டமிட்டுள்ள பொருள்களில் அலைபேசி, தொலைக்காட்சிப் பெட்டிகள், குளிர்சாதனப் பெட்டிகள், வாசனைத் திரவியங்கள் என்பன உள்ளடங்கியுள்ளதாக அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையின் மூலம் நாட்டில் வீழ்ச்சியடைந்து வரும் வெளிநாட்டு இருப்புக்களை வலுப்படுத்துவதோடு, உள்நாட்டு சந்தையில் உள்ளூர் வர்த்தகர்களுக்கு வாய்ப்பை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரச தகவல் வட்டாரங்களை மேற்கோள்காட்டி அந்தச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. (ஓ.5.இ)

## விவசாயிகளுக்கு உதவி என்ற பெயரில் கடனாளியாக்குகிறீர்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 4

அரசின் நிபந்தனைகளுக்கு அமைவாக விவசாய கொட்டகை அமைக்கப்பட வேண்டும். அப்படி அமைத்தால்தான் மானியம் வழங்குவோம் என்கிறார்கள். ஆனால் அவர்களின் நிபந்தனைக்கு அமைவாக விவசாய கொட்டகை அமைத்தால், நாம் கடனாளியாக வேண்டிய நிலைமையில் உள்ளோம். தற்போதுள்ள நிலைமைக்கு ஏற்ப அதிகாரிகள் நிபந்தனைகளை மாற்றியமைக்க வேண்டும். இவ்வாறு பாதிக்கப்பட்ட விவசாயிகள் சிலர் யாழ்ப்பாண மாவட்டச் செயலரைக் கோரியுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் அரசின் மானியத்துடன் வெங்காயக் கொட்டகை அமைப்பதற்கு பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். வெங்காயக் கொட்டகை அமைப்பதற்கான அளவுப் பிரமாணங்கள் அரசால் வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரமே வெங்காயக் கொட்டகை அமைக்கப்பட வேண்டும் என்று விவசாயிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். அரசு மானியமாக 67 ஆயிரத்து 500 ரூபாவை மாத்திரமே வழங்கும் என்று தெரிவித்துள்ளது.

அரசின் நிபந்தனைகளுக்கு அமைவாக தற்போதைய காலத்தில் வெங்காயக் கொட்டகை அமைப்பதற்கு ஆகக் குறைந்தது 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவாவது செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே அரசு வழங்கும் மானியத் தொகை போதாது என்று தெரிவித்துள்ள விவசாயிகள், ஒன்றில் மானியத் தொகையை அதிகரிக்கவேண்டும் அல்லது நிபந்தனைகளை தளர்த்த வேண்டும் என்று கோரியுள்ளனர். (ஓ.5)

### மணிவண்ணன், மயூரனின் உறுப்புரிமை

# மாவட்ட நீதிமன்றின் கட்டளையை ஆட்சேபித்து உயர்நீதிமன்றில் மனு

யாழ்ப்பாணம், ஜூலை 4

**யாழ்ப்பாணம் மாநகர சபையின் உறுப்பினர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் மற்றும் மயூரன் இருவரையும் அந்தப் பதவியிலிருந்து நீக்கும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் தீர்மானத்துக்கு மாவட்ட நீதிமன்றம் வழங்கிய இடைக்காலத் தடைக் கட்டளையை ஆட்சேபனைக்கு உட்படுத்தி உயர் நீதிமன்றில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.**

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் முதலாவது மேன்முறையீட்டு அனுமதி விண்ணப்பங்களை யாழ்ப்பாணம் குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றில் தாக்கல் செய்தது.

அவை தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில் கட்சியின் இறுதி சந்தர்ப்பமாக உயர் நீதிமன்றில் மேன்முறையீட்டு அனுமதி விண்ணப்பங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் சார்பில் யாழ்ப்பாணம் மாநகர சபைக்குத் தேர்ந்து அனுப்பப்பட்ட வி.மணிவண்ணன், உள்ளிட்ட உறுப்பினர்கள் தமது பங்காளிக் கட்சியான தமிழ் தேசிய மக்கள் முன்னணியிலிருந்து நீக்கப்பட்டதால் மாநகர சபை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்குமாறு அந்தக் கட்சி, தொடர்ந்து சட்டப்போராட்டங்களை நடத்திவருகின்றது.

யாழ். மாவட்ட நீதிமன்றம், குடியியல் மேன்முறையீட்டு நீதிமன்றம் என்பன அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் கோரிக்கையை நிராகரித்துள்ள நிலையில், தற்போது உயர் நீதிமன்றில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. (ம-26)






# உரம் வழங்கக் கோரி விவசாயிகள் போராட்டம்

கொழும்பு, ஜூலை 4

உரம் வழங்கக் கோரியும், எரிபொருள் விலையேற்றத்தை குறைக்கக் கோரியும் விவசாயிகள் பல்வேறு இடங்களில் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பதுளை, எல்ல, பண்டாரவளை, வெலிமடை மற்றும் ஊவா பரணகம ஆகிய இடங்களில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

விவசாயிகளும், பொது மக்களும் இணைந்து ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்தனர். (ஓ.4)

### யாழ். போதனாவில்

## தாதியர் தொழிற்சங்க நடவடிக்கைக்கு அச்சுறுத்தல் விடுத்ததாக குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 4

தாதியர் தொழிற்சங்க நடவடிக்கையை தடுக்கும் வகையிலும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் அரச தாதி உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவர் மற்றும் செயலரை அச்சுறுத்தும் வகையிலும் மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் நடந்து கொண்டுள்ளார் எனக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

அரச தாதி உத்தியோகத்தர் சங்கத்தின் ஏற்பாட்டில் நாடு முழுவதும் கடந்த முதலாம் மற்றும் இரண்டாம் திகதிகளில் தாதி உத்தியோகத்தர்கள் சுகவீன விடுப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையிலும் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டிருந்தது. இந்த நிலையில், மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர், தாதி உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவர் மற்றும் செயலரை அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்டுள்ளதாக தாதி உத்தியோகத்தர் சங்கம் தெரிவித்துள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் தொடருமானால் தாதி உத்தியோகத்தர்கள் தொழிற்சங்க நடவடிக்கைக்குச் செல்ல நேரிடும் என்றும் தாதி உத்தியோகத்தர் சங்கம் குறிப்பிட்டுள்ளது. (ஓ.5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்குவாரியை அகற்றுமாறு கிராம மக்கள் ஆர்ப்பாட்டம்

**வவுனியா, ஜூலை 4**
**வவுனியா 'அக்போபர' கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட புதிய சின்னக்குள பகுதியில் உள்ள சிறிய மலைக்குன்றில் கல்லுடைப்பதால் (கற்குவாரி) பல்வேறு அசௌகரியங்கள் ஏற்படுகின்றன.**

எனவே, குறித்த பணியை நிறுத்துமாறுகோரி புதிய சின்னக்குள மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த கற்குவாரியில் கல்லுடைப்பதால் பொதுமக்களின் வீடுகளில் வெடிப்புக்கள் ஏற்படுகின்றன. எந்தவித அறிவித்தலும் இன்றி வெடிவைத்து கற்களை உடைக்கும்போது அங்கிருந்து சிதறிவரும் கருங்கல் துண்டுகள் அருகில் உள்ள தமது வீடுகளின் கூரையில் வீழ்கின்றன. தோட்ட காணிகளிலும் வீழ்கின்றன.

அத்தோடு கற்களை உடைக்க பயன்படும் வெடிமருந்து காரணமாக சுவாசப் பிரச்சினை ஏற்படுவதோடு குழந்தைகள் மயக்கமடையும் நிலையும் ஏற்படுகின்றது.

மேய்ச்சலுக்குச் சென்ற கால்நடைகளும் இறந்துள்ளன என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

குறித்த கல்குவாரியில் கல் உடைக்கும் நடவடிக்கைகளை தடுத்துநிறுத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கைவிடுத்தனர்.

குறித்த இடத்திற்கு வருகை தந்த வவுனியா மாமடு பொலிஸ் அதிகாரி வெடிபொருள்கள் பயன்படுத்தி கல் உடைப்பதை தற்காலிகமாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தொடர்ந்து விசாரணைகள் முன்னெடுக்கப்படும் எனவும் கூறி ஆர்ப்பாட்டத்தை கைவிடுமாறு விடுத்த கோரிக்கைக்கு அமைவாக ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது. (த-110)

# புதிய முதலாளி வர்க்கத்தையே சேதனப்பசளை உருவாக்கும்

## முசலி சபைத் தவிசாளர் குற்றச்சாட்டு



மன்னார், ஜூலை 4
அரசின் சேதனப்பசளை தயாரிப்பானது நாட்டில் புதிய முதலாளி வர்க்கத்தினரையே உருவாக்கும் என்று முசலி பிரதேச சபைத் தவிசாளர் சுபஹான் குற்றம் சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,
நாட்டில் தற்போது உரம் மற்றும் கிருமிநாசினிகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. இவை அதிக விலைக்கு விற்கப்பட்டு வருகின்றன என்று விவசாயிகள் தெரிவிக்கின்றார்கள்.

விவசாயிகளின் உற்பத்திப்பொருள்ளுக்கு உரிய விலைத் திட்டமிடல் இல்லை. இதனால் எந்த அரசு ஆட்சி செய்தாலும் அந்த நாடு அதல பாதாளத்துக்குள் தள்ளப்படும்.

இந்த நாட்டின் முதுகெலும்பாக இருப்பது நடுத்தர வர்க்க மக்கள் மற்றும் கூலித்தொழிலாளர்கள்.

இந்த அரசு சேதனப் பசளை உற்பத்தி செய்கிறோம் எனக் கூறி ஒரு முதலாளி வர்க்கத்திடம் கொடுத்து அந்த முதலாளிகள் மூலம் அடிமை சமூகத்தை உருவாக்குவதற்கு வழிவகுத்துக் கொண்டிருக்கிறது.

நாட்டிலுள்ள விவசாயிகளுக்கு முன்னுரிமை கொடுக்காவிட்டால் நாடு பின்னோக்கிப்போகும் சந்தர்ப்பம் இருக்கின்றது. அரசு எப்பொழுதும் திறந்த பொருளாதார கொள்கையை ஏற்படுத்த வேண்டும். அப்போதுதான் நாடு சுபீட்சமான வளர்ச்சியை நோக்கிச்செல்லும். எந்த ஒரு மாற்றத்தைக்கொண்டு வருவதற்கும் ஜனாதிபதிக்கு அதிகாரம் இருந்தாலும் ஜனாதிபதியின் திடீர் முடிவுகள் நாட்டின் தலைவிதியை மாற்றி விடும்.

திட்டமிடப்படாத விவசாய உற்பத்தித் திட்டம் இந்த நாட்டை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லுமேதவிர, ஒருபோதும் இந்த நாட்டுக்கு நன்மை தராது.

அரசு கடந்த காலத்தில் 40 வீதம் விலைக்கழிவில் வழங்கிய இரசாயன மருந்து கிருமிநாசினி இப்போது 40 வீதம் அதிகரித்துள்ளது. இந்த செயற்பாடுகள் முதலாளி வர்க்கத்தை மட்டுமே உருவாக்குவதற்கு உதவும்.

இந்த நாட்டில் எத்தனையோ விடயங்களை புலனாய்வு செய்து கண்டுபிடிக்கும் புலனாய்வாளர்கள் ஏன் இவ்வாறான செயற்பாடுகளை கண்டுபிடிக்கவில்லை? அவர்கள் முதலாளிகளுடன் ஒத்துப்போகின்றார்களா என்பது தெரியவில்லை- என்றார். (த-213)



# பொலிஸ்மா அதிபர்கள் எண்மருக்கு இடமாற்றம்

கொழும்பு, ஜூலை 4
பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண உள்ளிட்ட 7 சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் மற்றும் ஒரு பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஆகியோர் இடமாற்றப்பட்டுள்ளனர்.

வட மத்திய மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நந்தன முனசிங்க, பொலிஸ் நிர்வாகப் பிரி வுக்கும், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண குற்றங்கள் மற்றும் போக்குவரத்துக்குப் பிரிவுக்கும், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எல்.எஸ்.பத்தினாயக்க, சமூக மற்றும் சுற்றுச்சூழல் பிரிவுக்கும் இடமாற்றப்பட்டுள்ளனர்.

வடக்கு மாகாணத்துக்குப் பொறுப்பாக இருந்த சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பி.பி.எஸ்.எம் தர்மரத்னா, வடமேற்கு மாகாணத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

டபிள்யூ. கே. ஜெயலத் வடக்கு மாகாணத்துக்கும், ஆர்.எல். கொடித்துவக்கு சப்ரகமுவ மாகாணத்துக்கும் இடமாற்றப்பட்டுள்ளனர். சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எம்.டி. ஆர்.எல். தமிந்த தெற்கு மாகாணத்துக்கும், மட்டக்களப்பு மாவட்டத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஏ.என்.எல். விஜேசேன, அநுராதபுரம் மாவட்டத்துக்கும் இடமாற்றப்பட்டுள்ளனர். (ஒ.4)

# புறக்கணிப்பு போராட்டத்திலும் உயிர்காக்க உதவிய தாதி

கொழும்பு,ஜூலை 4
கடுமையான குருதிப்பெருக்கால் துடித்த கர்ப்பிணி, தாதியொருவரின் உதவியுடன், காப்பாற்றப்பட்டுள்ளார். சிசுவும் நலமுடன் பிரசவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் காலி கராப்பிட்டிய மருத்துவமனையில் நடந்துள்ளது.

குறித்த பெண், கடுமையான வலியுடன், மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவருக்கு குருதிப்பெருக்கு ஏற்பட்டது. அவருக்கு குழந்தை பிறக்கவுள்ளதை அறிந்த தாதியொருவர், தனது வேலை நிறுத்தப் போராட்டத்தையும் சிந்திக்காமல் தாயையும், சிசுவையும் காப்பாற்றுவதற்குத் தேவை யான நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

மருத்துவமனையின் சத்திரசிகிச்சை அறைக்குள் பிரசவம் நிகழ்ந்தது. தாயும், குழந்தையும் பாதுகாப்பாக காப்பாற்றப்பட்டனர் என்று தாதியர் சங்கத்தின் உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

மிகவும் ஆபத்தான நிலையில் இருந்த கர்ப்பிணி, தாதியின் உதவியுடன் காப்பாற்றப்பட்டமை மகிழ்ச்சி தருகின்றது என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ.4)

# துமிந்தவின் விடுதலை; அரசு தொடர் மௌனம்

## பாரத லக்ஸ்மனின் மனைவி விசனம்



கொழும்பு,ஜூலை 4
துமிந்த சில்வாவுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டமை தொடர்பில் அரசிடம் விளக்கம் கோரிய போதும், இதுவரை பதில் இல்லை என்று முன்னாள் அமைச்சரான பாரத லக்ஸ்மன் பிரேமசந்திரவின் மனைவி சுமனா பிரேமசந்திர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,
துமிந்தவின் விடுதலையின் பின்னர் பல சமூக அமைப்புகள் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான அமைப்புகள் என்பன அடுத்த கட்ட நடவடிக்கையாக என்ன செய்யப் போகிறீர்கள் என்று வினவுகின்றனர். அடுத்தக்கட்ட நடவடிக்கை குறித்து கொஞ்சம் நாம் சிந்திக்கின்றோம். சில சம்பவங்களால் நாட்டுக்கு சர்வதேசத்தில் அபகீர்த்தி ஏற்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் நாமும் இந்த சம்பவத்துடன் சர்வதேசத்துக்குச் சென்றால் இப்போது இலங்கைக்குப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள ஜி. எஸ்.பி.பிளஸ் சலுகை மற்றும் கடன் பிரச்சினை களுக்கு மேலும் பாதிப்பு ஏற்படுத்தலாம். அவ்வாறான பாதிப்பொன்று ஏற்படுமாயின், அதனை அனுபவிக்கப் போவது இலங்கை மக்களே தவிர இலங்கை ஜனாதிபதியோ அவர் சார்ந்தவர்களோ இல்லை. எனவே இந்த விடயம் தொடர்பில் எதிர்காலத்தில் எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்து நாம் சரியான முடிவுக்கு இதுவரை வரவில்லை. துமிந்தவின் பொது மன்னிப்புடன் எனக்கும், எனது மகளுக்கும் என்னைச் சார்ந்தவர்களுக்கும் ஏதாவது அழுத்தங்கள், உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படலாம். அவ்வாறு ஏற்பட்டால் ஜனாதிபதியே அதற்குப் பொறுப்புக் கூற வேண்டும். என்றார். (ஒ.4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## உரிமை அழிப்புத்தான் அமெரிக்க வெற்றியா?

இலங்கை உட்பட உலகெங்கும் பல சதியாட்டங்களை முன்னெடுத்த அமெரிக்கா, ஆப்கானிஸ்தானில் தலைகுனிந்து – படுதோல்வியடைந்துள்ளது. நேற்றுமுன்தினத்துடன் ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கப் படைகள் முற்றுமுழுதாக வெளியேறியுள்ளன. எனினும், தலிபான்களை அடக்கவோ அல்லது அல் குவைதாவை ஒழிக்கவோ முடியாமல்தான் 'இனி ஏலாது' என்ற கட்டத்தில் பக்ரம் படைத்தளத்தில் இருந்து பறந்து சென்றுள்ளன அமெரிக்கப் படைகள். அமெரிக்கப் படைகள் செய்ததெல்லாம் பயங்கரவாத அழிப்பை அன்றி உரிமை அழிப்பைத்தான்.

2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதி அல் குவைதா பயங்கரவாத அமைப்பு முன்னெடுத்த தாக்குதலில் அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்களும், இராணுவத் தலைமையகமான பென்டகனும் தாக்கப்பட்டன. இந்தத் தாக்குதல் உலகளாவிய ரீதியில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. அதாவது, 'பயங்கரவாதத்துக்கு எதிரான போர்' என்ற ஒரு 'கொள்கை' அமெரிக்காவின் தலைமையில் சில நோட்டோ நாடுகளின் பங்கெடுப்புடன் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டது. ஆனால், பயங்கரவாதத்துக்கும் உரிமைப்போருக்கும் இடையிலான வித்தியாசம் வல்லரசுகளின் கண்களுக்குப் புலப்படவேயில்லை. ஒரு நாட்டில் ஆட்சியமைத்திருக்கும் அரசுக்கு எதிராக ஆயுதம் தூக்கிய அத்தனை குழுக்களும் பயங்கரவாதக் குழுக்கள் என்பதுதான் இந்த சர்வ வல்லமை பெற்ற தரப்புகளின் இரும்பு இதயங்களுக்குப் புலப்பட்டது.

உலகின் பல்வேறு நாடுகளில் முன்னெடுக்கப்பட்ட உரிமைப் போராட்டங்கள் அமெரிக்காவால் நசுக்கப்பட்டன. இலங்கையில் விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டமைக்கும் அமெரிக்கா ஒரு முக்கிய காரணம். சிரியாவில் இட்லிப், பல்மைரா, டமஸ்கஸ் போன்ற நகரங்களில் செயற்பட்ட உரிமை மீட்புக் குழுக்கள் துடைத்தெறியப்பட்டமை அமெரிக்காவால்தான். பலஸ்தீனத்தில் ஹமாஸ் பலம்குன்ற வைக்கப்பட்டதும் அமெரிக்காவால்தான். ஆனால், இத்தனைக்கும் அழிக்கப்பட வேண்டிய தரப்புக்கள் எவையும் அமெரிக்காவால் அழிக்கப்படவேயில்லை.

குறித்த இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்கு பின்னர் அல் குவைதாவின் செயற்பாட்டுத் தளமாக ஆப்கானிஸ்தான் உள்ளது என்ற குற்றச்சாட்டை முன்வைத்த அமெரிக்கா, ஆப்கானிஸ்தானுக்குள் ஊடுருவியது. ஆட்சியில் இருந்து தலிபான்களை அகற்றிவிட்டு அஸ்ரப் கனி தரப்பினரை இருத்தியது. இதன் பின்னர் சுமார் 2 தசாப்தங்களாக தலிபான்களுக்கு எதிராக அமெரிக்கா போரிட்டாலும் எந்தவிதமான சொல்லிக்கொள்ளும் படியான வெற்றியையும் அமெரிக்காவாலோ நோட்டோப் படைகளாலோ பெற முடியவில்லை. மாறாக 2,000 பில்லியன் அமெரிக்க டொலர் நிதியையும், 2,500 அமெரிக்கச் சிப்பாய்களின் உயிர்களையும் இந்தப் போருக்கான விலையாக அமெரிக்கா செலுத்தியுள்ளது. அதுமட்டுமல்ல ஒசாமா பின்லேடனைக் கொன்றதைத் தவிர வேறு எந்தக் கனதியான வெற்றியையும் அல் குவைதாவுக்கு எதிராகவும் அமெரிக்காவால் பெற முடியவில்லை.

தற்போது ஆப்கானிஸ்தானில் ஆட்சியமைத்திருக்கும் அரசு மிகப்பலவீனமானது. இன்னும் சில மாதங்களில் ஆட்சி தலிபான்களிடம் வீழ்ந்தால்கூட அதில் ஆச்சரியத்துக்கு ஒன்றுமில்லை. அப்படியெனில் கடந்த இரு தசாப்தத் திட்டத்தில் அமெரிக்க வெற்றி எங்குள்ளது?. அமெரிக்காவின் கொள்கைதான் என்ன?

ஆக, உலகப் பயங்கரவாதம் என்ற ஒன்றை அழிப்பதாகக் கங்கணம் கட்டிக்கொண்டு எந்த இரு அமைப்புகளை முதன்மை இலக்குகளாகக் கொண்டு அமெரிக்கா களமிறங்கியதோ (அல் குவைதா, தலிபான்) அந்த இரு அமைப்புகளை கிஞ்சித்தும் நெருங்க முடியவில்லை. இந்தப் போரில் அமெரிக்கா செய்ததெல்லாம் தம் வாழ்வுரிமைக்காகவும் அரசியல் அபிலாஷைகளுக்காகவும் மக்களின் பேராதரவுடன் ஆயுதம் ஏந்திப் போராடிய போராளிகளை கொன்றுதள்ளியமைதான்.

உரிமைப்போராட்டத்துக்கும் பயங்கரவாதத்துக்கும் வேறுபாடு தெரியாத சர்வ வல்லமை பொருந்திய 'ஜாம்பவான்'களிடம்தான் நாம் நீதியைத் தேடிக்கொண்டிருக்கின்றோம் என்பதையும் இங்கு நினைவில் கொள்க!.




# பஸிலின் வருகையால் பதறும் அமைச்சர்கள்

**கொழும்பு, ஜூலை 4**

**பஸில் ராஜபக்சவின் நாடாளுமன்ற வருகையை முன்னிட்டு சில அமைச்சர்கள் கடும் அதிருப்தியில் உள்ளனரென அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.**

அனைத்து அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களில் பஸில் தலையீடு செய்வார் எனவும், இதனால் சுயாதீனமாக இயங்க முடியாத நிலை ஏற்படும் எனவும் அவர்கள் தம்க்கு நெருக்கமானவர்களிடம் உள்ளக் குமுறல்களை வெளிப்படுத்தியுள்ளனர்.

எனவே, ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் இது தொடர்பில் எடுத்துரைத்து, சுயாதீனமாக இயங்கக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்திக் கொள்வது தொடர்பில் இவர்கள் தற்போது கவனம் செலுத்தியுள்ளனர்.

அமெரிக்காவில் இருந்து நாடு திரும்பிய பஸில் ராஜபக்ச தற்போது சுயதனிமையில் உள்ளார். தனிமைப்படுத்தல் காலம் ஜூலை 7 ஆம் திகதி நிறைவுக்கு வருகின்றது. அதன் பின்னர் அவர் நாடாளுன்றம் வரவுள்ளார். ஜூலை மாதத்துக்குள் பொருளாதார விவகார மற்றும் நிதி அமைச்சு பதவியை ஏற்கவுள்ளார். முதலீட்டுச்சபை, துறைமுக நகரம் உட்பட முக்கிய திணைக்களங்கள் பஸில் வசம் கொண்டுவரப்படவுள்ளன.

அதேவேளை, பஸிலின் மீள்வருகை தொடர்பில் அமைச்சர்களான விமல், வாசு மற்றும் கம்மன்பில போன்றவர்களும் அதிருப்தி நிலையிலேயே உள்ளனர்.

(ஒ.44)

# நாடாளுமன்ற வருகை : பஸிலே தீர்மானிப்பார்

## மஹிந்த தெரிவிப்பு

கொழும்பு.ஜூலை 4

நாடாளுமன்ற வருகை தொடர்பில் பஸில் ராஜபக்சவே நிலையான தீர்மானத்தை வெளியிடுவார். எந்தவொரு நபர்களின் அவசரத்துக்காகவும் அவர் நாடாளுமன்றம் வர முடியாது என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பஸிலை நாடாளுமன்றுக்கு வரவைப்பதற்கு எந்தவொரு அமைச்சர்களுக்கோ, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கோ அவசியம் இருந்தாலும், அதற்கான நாள் இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை.

சிலர் பஸில் நாடாளுமன்றம் வரும் நாள்களை பெயரிடுகின்றனர். எனினும் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இராஜினாமா செய்த பின்னர், பஸில் நாடாளுமன்றத்தைப் பிரதிநித்துவம் செய்வது தொடர்பில் உத்தியோகபூர்வமாகக் கூற முடியும். இது தொடர்பில் பஸிலுடன் எதிர்வரும் நாள்களில் உத்தியோகபூர்வ கலந்துரையாடல் மேற்கொள்ளப்படும். அதன் பின்னரே நாடாளுமன்றுக்கு அவர் வரும் திகதி தொடர்பில் தீர்மானம் எடுக்க முடியும் - என்றார். (ஒ.4)

# பதவி துறப்பு அறிவிப்பு செவ்வாயன்று சபையில்

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ச நாடாளுமன்றம் வருவதற்காக, தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை துறக்கவுள்ளவர், நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை அந்த அரசியல் தியாகத்தை செய்வாரென மொட்டு கட்சி தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாடாளுமன்றம் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடவுள்ளது. இதன்போதே பஸிலுக்காக, நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை, தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் துறந்து, சிறப்புரையாற்றுவார் எனவும் அறியமுடிகின்றது.

அதேவேளை, பஸில் ராஜபக்சவுக்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சு பதவியுடன் நிதி இராஜாங்க அமைச்சு பதவியே வழங்கப்படவுள்ளது என்று முன்னதாக தகவல் வெளியாகியிருந்தாலும், நிதி அமைச்சையும் முழுமையாக வழங்குவதற்கு பிரதமர் இணக்கம் வெளியிட்டுள்ளார். இதன்படி நிதி மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராகவே பஸில் ராஜபக்ச பதவியேற்கவுள்ளார் - என்று கூறப்படுகின்றது.

(ஒ.44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெல்டா திரிபு வைரஸ் உலகுக்கே ஆபத்தானது

## சுகாதார அமைப்பு எச்சரிக்கை

**கொழும்பு,ஜுலை 4**

**இந்திய மாறுபாடான டெல்டா திரிபு வைரஸ், இனி வரும் மாதங்களில் உலகளவில் ஆபத்தாக மாற்றமடையும் என்று உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.**

கொரோனாத் தொற்று தொடர்பாக புதுப்பிப்பிக்கப்பட்ட அறிக்கையில், உலக சுகாதார அமைப்பு இதனைத் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

டெல்டா வைரஸ் பாதிப்பு 96 நாடுகளில் ஏற்பட்டுள்ளது. இதன் மாறுபாடுகளை அடையாளம் காணத் தேவையான வரிசைமுறை திறன்கள் குறைவாக இருப்பதால், பாதிப்பு குறைத்து மதிப்பிடப்படுகின்றது.

இந்த நோய்த் தொற்று, பல நாடுகளில் தொற்றுப் பரவல் அதிகரிப்புக்கும், மருத்துவமனைகளில் நோயாளிகள் சேர்க்கை அதிகரிப்புக்கும் காரணம் ஆகும்.

இந்த வைரஸ் பரிமாற்றத்தின் அதிகரிப்புக் காரணமாக டெல்டா வைரஸ் ஏனைய வகை வைரஸ்க்களுடன் போட்டியிட்டு, இனி வரும் மாதங்களில் ஆதிக்கம் செலுத்தும்.

கொரோனாத் தொற்றை எதிர்த்துப் போராடுவதற்கு தற்போது பயன்பாட்டில் உள்ள தடுப்பூசிகள், தனிநபர் இடைவெளி பராமரிப்பு, சமூக அளவிலான கட்டுப்பாடுகள் மற்றும் தொற்றின் தொடக்கம் முதல் இருந்துவரும் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் ஆகியவை கொரோனா வைரஸ் உள்ளிட்ட கவலைக்குரிய வகைகளுக்கு எதிராக வலுவாகச் செயற்படும்.

புதிய வகையான கவலைக்குரிய வைரஸ்க்களின் அதிவேக பரிமாற்றத்தன்மை என்பது நீண்ட காலத்துக்கு நடவடிக்கைகளை பராமரித்துவர தேவையாக இருக்கலாம். குறிப்பாக குறைந்த தடுப்பூசி பாதுகாப்புச் சூழலில், மேற்கூறிய பிற நடவடிக்கைகள் மீது கவனம் செலுத்தப்பட வேண்டும். என்றுள்ளது. (ஒ,4)



# தென்மராட்சி கிழக்கில்
## சர்வதேச கூட்டுறவுதின விழா

கொடிகாமம், ஜுலை 4

'ஒன்றுசேர்ந்து சிறப்பாக மீளக் கட்டியெழுப்புவோம்' எனும் தொனிப்பொருளில் 99 ஆவது சர்வதேச கூட்டுறவுதின விழா தென்மராட்சி கிழக்கு பல்நோக்கு கூட்டுறவு சங்க பணிமனையில் சங்கத் தலைவர் இ.அ.ஆனந்தராஜா தலைமையில் நேற்று முற்பகல் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பொதுமுகாமையாளர், இயக்குநர் சபைத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள், பணியாளர்கள் சுகாதார முறைப்படி கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் கூட்டுறவு கொடி ஏற்றப்பட்டு கூட்டுறவு கீதம் இசைக்கப்பட்டு மரநடுகை நிகழ்வும் நடைபெற்றது.

பிரதேசம் முடக்கப்பட்டு பயணத்தடை காலத்தில் கூட்டுறவு நகரிலும் கூட்டுறவு சிற்றுண்டியகத்திலும் பணியாற்றி தற்காலிகமாக நாளாந்த சம்பள அடிப்படையில் கடமையாற்றும் பணியாளர்களுக்கு விசேட கொடுப்பனவும் வழங்கப்பட்டது.

மேலும் தென்மராட்சி பிரதேசத்தில் கொவிட் தொற்றுக் காரணமாக உயிரிழந்த 3 குடும்பங்களுக்கான நிவாரணப் பொதிகள், சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில் கையளிக்கப்பட்டன. (த-159)

# சஜித் – கரு சந்திப்பு

கொழும்பு,ஜுலை 4

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய ஆகியோருக்கு இடையே விசேட சந்திப்பு இடம்பெற்றுள்ளது என்று கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தச் சந்திப்பு கடந்த புதன்கிழமை ஹேவ்லொக் டவுன் அமரசேகர அவென்யூவில் அமைந்துள்ள கரு ஜயசூரியவின் இல்லத்தில் இடம்பெற்றுள்ளது.

சந்திப்பில் பலதரப்பட்ட விடயங்களை இருவரும் நீண்ட நேரம் கலந்துரையாடினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ,4)





# சகலகலாவல்லி வித்திக்கு 2 தொலைக்காட்சிப் பெட்டிகள்

கொடிகாமம், ஜுலை 4

மறவன்புலவு சகலகலாவல்லி வித்தியாலயத்துக்கு இரண்டு தொலைக்காட்சிப் பெட்டிகள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன.

யாழ். நுழைவாயில் லயன்ஸ் கழகமும் யாழ். கோட்டஸ்ரார் லயன்ஸ் கழகமும் இணைந்து அவற்றை வழங்கின.

கொரோனா சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு மறவன்புலவு சகலகலாவல்லி வித்தியாலயத்தின் மாணவர்கள் இலத்திரனியல் சாதனங்களைப் பயன்படுத்தி கற்றலை மேம்படுத்துவதற்காக குறித்த இரண்டு தொலைக்காட்சிப் பெட்டிகளும் வழங்கப்பட்டன. வித்தியாலயத்தின் பிரதி அதிபர் ந.கிருபாகரனிடம் அவை கையளிக்கப்பட்டன. (த-159)

# தென்மராட்சியில் இன்று மின்தடை

யாழ்ப்பாணம், ஜுலை 4

தென்மராட்சியில் சில பகுதிகளில் இன்று ஞாயிற்றுக்கிழமை மின்சாரம் தடைப்படும் என்று மின்சார சபை தெரிவித்துள்ளது.

அத்தியாவசிய திருத்தப்பணிகளுக்காக இன்று முற்பகல் 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை மின் தடைப்படும் என்று தெரிவிக்கப்பட்டது

அதன்படி, சங்கத்தானை, அரசடி, மீசாலை, வங்களாவீதி, அல்லாரை, வெள்ளாம்போக்கட்டி, கெற்பேலி, கச்சாய், கச்சாய் துறைமுகம், பாலாவி, அம்மன் கோவிலடி, புத்தூர் சந்தி, இராமாவில், கொடிகாமம், வரணி, கரம்பைக்குறிச்சி, வாழைத்தோட்டம், வேம்பிராய், மந்துவில், தாவாழை, இயற்றாழை, கலைவாணி வீதி, மிருசுவில் வடக்கு, சுட்டிபுரம், எழுதுமட்டுவாள், உசன், விடத்தற்பளை, மிருசுவில் தெற்கு, தவசிக்குளம், நாவலடி உள்ளிட்ட பகுதிகளில் மின்தடை ஏற்படுத்தப்படவுள்ளது. (த)

# ஆள் கடத்தலை தடுப்பதில் இலங்கை பெரும் பின்னடைவு

## அமெரிக்க அறிக்கை கூறுகிறது

கொழும்பு,ஜுலை 4

அமெரிக்காவின் 2021 ஆம் ஆண்டுக்கான தனி ஆள் கடத்தல் தரப்படுத்தலில், 2 அடுக்கு கண்காணிப்புப் பட்டியலில் இலங்கை அடையாளப் படுத்தப்பட்டுள்ளது.

கடத்தலை ஒழிப்பதற்கான குறைந்தபட்ச தரங்களை இலங்கை அரசு முழுமையாக பூர்த்திசெய்யவில்லை என்று அமெரிக்காவின் இராஜாங்கத் திணைக்களத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அதிகரித்து வரும் முறைப்பாடுகள் மற்றும் அரசு நடத்தும் சிறுவர் இல்லங்களில் குழந்தைகளை பாலியல் ரீதியாகத் துன்புறுத்தும் குற்றச்சாட்டுகளை விசாரித்தல் ஆகியவை குறிப்பிடத்தக்க முன்னேற்ற முயற்சிகளில் அடங்கும்.

தனி ஆள் கடத்தல் தடுப்பு பயிற்சி மற்றும் விழிப்புணர்வு திரட்டுதல் குறித்து சர்வதேச அமைப்புகளுடன் இலங்கை அரசு தொடர்ந்து பணியாற்றி வருகின்றது. எனினும் முந்தைய அறிக்கையிடலுடன் ஒப்பிடும்போது ஒட்டுமொத்தமாக முன்னேற்ற முயற்சிகளை அரசு நிரூபிக்கவில்லை.

முன்னைய ஆண்டுகளில் சுமத்தப்பட்ட சில குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கான முயற்சிகளை அரசு தொடரவில்லை. அத்துடன் வெளிநாடுகளில் கட்டாயப் பணிகளால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளப்படுத்தும் செயற்பாடுகளை அரசு உரிய முறையில் முன்னெடுக்கவில்லை.

இந்தக் குறைபாடுகள் காரணமாக இலங்கை தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டாகவும் 2 அடுக்கு கண்காணிப்புப் பட்டியலில் உள்ளது.

இந்தத் தரப்படுத்தலில் முதலாம் அடுக்கு என்பது சிறந்த நிலையாக கருதப்படுகின்றது. 2 ஆம் அடுக்கு அல்லது 2 ஆம் அடுக்கு கண்காணிப்பு என்பது இடைப்பட்ட நிலையாகும்.

3 ஆம் அடுக்கு மோசமான நிலையாகும். இந்த 3 ஆம் நிலைப்படுத்தலில் ஆப்கானிஸ்தான், ஈரான் மற்றும் எரித்திரியா ஆகிய நாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன - என்றுள்ளது. (ஒ,4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# 4 மில்லியன் தென்னங்கன்றுகள் நாடு முழுவதும் பகிர்ந்தளிப்பு



**கொழும்பு,ஜூலை 4**

பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையை ஊக்குவிப்பதாக,எதிர்வரும் 10 ஆம் திகதி நாட்டின் அனைத்து தேர்தல் தொகுதிகளையும் உள்ளடக்கும் வகையில் தென்னங்கன்றுகள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

5 பிரதான நோக்கங்களை முன்னிலைப்படுத்தி, 4 மில்லியன் தென்னங்கன்றுகள் பகிர்ந்தளிக்கப்படும் என்று இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

விதை தேங்காய்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது மற்றும் காபனேற்றப்பட்ட உரத்தைப் பன்படுத்தி தென்னைப் பயிர்ச்செய்கையை முன்னேற்றுவது இதன் பிரதான நோக்கமாகும்.

ஜனாதிபதி பதவியேற்ற காலம் முதல் இதுவரை தேசிய தொழில்துறையை முன்னேற்றுவது, தேசிய உற்பத்திகளுக்கு முன்னுரிமை வழங்கி தேவையற்ற செலவுகளைக் குறைப்பது மற்றும் நாட்டிலிருந்து வெளியேறும் பணத்தின் அளவைக் குறைத்து, அந்நியச் செலாவணியைப் பெற்றுக் கொள்ளும் வழியை வலுப்படுத்துவது ஆகியவை தொடர்பில் கவனம் செலுத்தியிருந்தார். அதற்கான செயற்பாடுகளையும் ஆரம்பித்திருந்தார். கொவிட் 19 வைரஸ் பரவல் காரணமாக சுற்றுலாத்துறை வீழ்ச்சியடைந்துள்ளது. பணம் ஈட்டக்கூடிய தொழில் துறைகள் அனைத்தும் பாதிக்கப்பட்டுள்ளன. அந்நியச் செலாவணியை அதிகரிக்க வேண்டும். வைரஸ் பரவல் காரணமாக அந்தச் செயற்பாடுகளில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டிருந்தது.

அதேவேளை 'கிராம அபிவிருத்தி' 'தேசத்துக்கு மகுடம்' போன்ற வேலைத் திட்டங்களுக்கு மஹிந்த ராஜபக்சவுக்கு, பஸில் ராஜபக்சவே பெரும் சக்தியாக செயற்பட்டிருந்தார்.


இன்றும்கூட ஜனாதிபதி மற்றும் மஹிந்த ராஜபக்சவின் கொள்கைத் திட்டங்களை செயற்படுத்தவும், பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவும் வெளிக்களத்திலிருந்து மாபெரும் சக்தியாக செயற்பட்டு வருகின்றார். அதற்கமைய நாட்டின் பொருளாதார நிலைமையை முன்னேற்றுவதற்கு அவர் பெரும் சக்தியாக செயற்ப[illegible] கின்றோம்- என்றார். (ஐ.4)

# பி.சி.ஆர். அறிக்கை இருந்தாலே இலங்கைக்குள் நுழைய அனுமதி

## இராணுவத் தளபதி தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 4**

**வெளிநாட்டில் இருந்து இலங்கைக்கு வருபவர்கள் முறையான பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கையுடன் வருகைதந்தால் மட்டுமே, இலங்கைக்குள் பிரவேசிக்க இடமளிக்க முடியும் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.**



கொவிட்-19 தடுப்புச் செயற்பாடுகள் தொடர்பான மீளாய்வு கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கைக்கு அழைத்துவரப்படுவோர் சிலர் அண்டிஜென் பரிசோதனைகளை மாத்திரமே செய்துள்ளனர். இனிவரும் நாள்களில் அவர்கள் முறையான பி.சி. ஆர். அறிக்கையுடனேயே இலங்கைக்கு வர முடியும்.

அரசால் அங்கீகரிக்கப்பட்ட பகுதிகளில் மாத்திரமே பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் நாடளாவிய ரீதியில் தடுப்பூசி ஏற்றும் திட்டமும் சுமுகமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது- என்றார்.

கூட்டத்தில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவிக்கையில், கடந்த 6 நாள்களில் நாளொன்றுக்கு 2 ஆயிரத்துக்கும் குறைவான தொற்றாளர்களே இனங்காணப்பட்டுள்ளனர். எனினும் டெல்டா மாறுபாடு வைரஸ் நாட்டில் பரவுவதால் மக்கள் மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும்- என்றார். (ஐ.4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 100ஆவது கல்வி வலயமாக கிளிநொச்சி வடக்கு உதயம்

கொழும்பு, ஜூலை 4

கிளிநொச்சி வடக்கு தனி கல்வி வலயமாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இதுவரை 99 கல்வி வலயங்கள் இயங்கிவந்த நிலையில் 100ஆவது கல்வி வலயமாக கிளிநொச்சி வடக்கு பிரிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி வடக்கு தனி கல்வி வலயமாக அறிவிக்கப்பட வேண்டும் என்று நீண்டகாலமாக மக்கள் கோரிக்கை விடுத்துவந்த நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

பருத்தித்துறையில்

# எழுமாற்றுச் சோதனையில் ஆறு பேருக்கு கொரோனா

**யாழ்ப்பாணம், ஜூலை 4**

**பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் எழுமாற்றாக 100 பேரிடம் பெறப்பட்ட மாதிரிகளில் ஆறு பேருக்கு கொரோனாத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.**

அத்துடன், மந்திகை பகுதியில் வேறு 6 பேருக்கும் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என்று சுகாதாரத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

பருத்தித்துறை நகரில் எழுமாறாக 100 பேரிடம் நேற்று பெறப்பட்ட மாதிரிகள் பி.சி. ஆர் பரிசோதனைக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

அவர்களில் 6 பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. 6 பேரில் ஐவர் பருத்தித்துறை கடற்கரை வீதியில் வசிப்பவர்கள். ஒருவர் பருத்தித்துறை நகர்ப் பகுதியில் வசிப்பவர்.

அத்துடன் மந்திகையில் பெறப்பட்ட மாதிரிகளில் வர்த்தகர்கள் மூவர், வெளிநாட்டில் இருந்து வருகை தந்த இருவர் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் என ஆறு பேருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ம-26)

# நாட்டை மீட்பதாயின் முடக்கம் வேண்டாம்

*நிதி இராஜாங்க அமைச்சர் ஆலோசனை*

கொழும்பு,ஜூலை 4

கொரோனாத் தொற்று நிலைமைக்கு மத்தியில் நாட்டின் பொருளாதாரத்துக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பைக் குறைத்து மீண்டும் துரித அபிவிருத்தியை ஏற்படுத்த வேண்டுமாயின் முடக்கம் அவசியமற்றது என்று நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் வழமையான நிலையை ஏற்படுத்த வேண்டுமாயின், தற்போதுள்ள முடக்க நிலை நீக்கப்பட வேண்டும்.

அதேவேளை எரிபொருள் விலை அதிகரிப்பால் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அரசு நன்கு அறிந்துள்ளது.

எதிர்காலத்தில் உலக சந்தையில் எரிபொருள் விலை குறைவடைந்தவுடன், அதன் நிவாரணத்தை உடனடியாக மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார். (ஓ.4)

# குடும்பத் தலைவர் சடலமாக மீட்பு!

வவுனியா, ஜூலை 4

வவுனியா, கணேசபுரம் பகுதியில் தூக்கில் இருந்து இளம் குடும்ப தலைவர் ஒருவர் நேற்று மாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார். வவுனியா, செட்டிகுளம், கணேசபுரம் பகுதியில் வசித்து வந்த 20 வயதுடைய இளம் குடும்பத் தலைவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

வீட்டுக்கு வந்த தயார் குறித்த நபர் தூக்கில் தொங்கிய நிலையில் இருப்பதை அவதானித்து அயலவர்களின் உதவியுடன் மீட்டு மருத்துவமனைக்குக் கொண்டு சென்ற போதிலும் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. சம்பவம் தொடர்பில் பறயனாலங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-18)

**உடனடி வேலைவாய்ப்பு**

* அலுவலக உதவியாளர், தொடர்பாடல் உத்தியோகத்தர் தேவை.
* கடை வாடகைக்கு உண்டு. (கிளிநொச்சி)

**தொடர்பு : 077 302 0874**

# மரண அறிவித்தல்



## நடேசு சண்முகம்

நீராவியடியை பிறப்பிடமாகவும், வீரபத்திரர் கோயில் வீதி, கல்வியங்காட்டை வதிவிடமாகவும் கொண்ட நடேசு சண்முகம் நேற்று (03.07.2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடேசு மாணிக்கம் தம்பதியரின் மகனும், நாகம்மாவின் அன்புக் கணவரும், புஸ்பகாந்தி (லண்டன்), தனலட்சுமி (ஜேர்மன்), சந்திரகாந்தி (லண்டன்), பத்மாவதி (கல்வியங்காடு) ஆகியோரின் அன்புத் தந்தையும், குமரேசன் (லண்டன்), சிவநேஸ் (ஜேர்மன்), யோகலிங்கம் (கல்வியங்காடு), சிவரூபன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கஜன், கஜனி, சிவகணன், அஜய், அபினா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.07.2021) ஞாயிற்றுக் கிழமை அன்னாரின் இல்லத்தில் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்:
மருமகன் - யோகலிங்கம்
077 464 9074

# மரண அறிவித்தல்

## வினாசித்தம்பி முத்துலிங்கம்

சாவகச்சேரி வடக்கு மீசாலை ஐயாகடையடியை சேர்ந்த குஞ்சர் வினாசித்தம்பி முத்துலிங்கம் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வினாசித்தம்பி நாகமுத்து அவர்களின் மகனும் மகேஸ்வரியின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற கந்தையா தெய்வானப்பிள்ளையின் மருமகனும் காலஞ்சென்ற அன்னம்மா(குணம்) கு.வி.மகாலிங்கம், கனகலிங்கம், சுந்தரலிங்கம் ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற மார்க்கண்டு சோமசுந்தரம், சுந்தரி நாகராஜா, கமலம், ரஞ்சிதமலர் ஆகியோரின் மைத்துனரும் கனடாவைச் சேர்ந்த மகேந்திரன், மனோகரன், மகேஸ்வரன்(இலங்கை), காலஞ்சென்ற தேவபாலன்(இலங்கை), கனடாவைச் சேர்ந்த மனோரஞ்சினி, சுகதாஸ், ஜெகதாசன் ஆகியோரின் தந்தையும் சாந்தம்(இலங்கை), கனடாவைச் சேர்ந்த சந்திரவதனா, நவறஞ்சிதம்(இலங்கை), நிர்நாளினி(இலங்கை), விஜயரட்ணம் (கனடா), கனடாவைச் சேர்ந்த ரஞ்சிதமலர், பச்சலாதேவி(சுதா) ஆகியோரின் அன்பு மாமனாரும் சுரேந்திரன், சுதாகரன், சுதர்சினி, சசிகரன், கஜீவன், தர்சிகன், நுயிக்கா, கார்த்தீபன், கயன், நிதர்சன், சஞ்சீவன், சர்நாளன், அருளினி, வகிர்தா, ரேசிகா, வினோதினி, அமலன், வஜித்தா, மசிஷா, மதுசன், டிசான், பிரியங்கா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (04.07.2021) ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனம் செய்வதற்காக சாவகச்சேரி கண்ணாபிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு
கஜன்(பேரன்) : 077 355 7742
சசிகரன் (பேரன்) : 077 324 9085

தகவல்
மு. மகேஸ்வரன் (மகன்)
(வவி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 29 லட்சம் பேருக்கு இதுவரை தடுப்பூசி

கொழும்பு.ஜுலை 4
நாட்டில் இதுவரை 29 லட்சத்து 16 ஆயிரத்து 330 பேருக்கு கொரோனாத் தடுப்பூசியின் முதலாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளது என்று தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய நேற்றுமுன்தினம் மாத்திரம் 26 ஆயிரத்து 192 பேருக்கு சைனோஃபோர்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸும், 58 ஆயிரத்து 141 பேருக்கு இரண்டாவது டோஸும் செலுத்தப்பட்டd.

இதேவேளை 3 லட்சத்து 83 ஆயிரத்து 329 பேருக்கு கொவிஸீல்ட் தடுப்பூசியின் இரண்டாவது டோஸும், ஒரு லட்சத்து 14 ஆயிரத்து 795 பேருக்கு ஸ்புட்னிக் வி தடுப்பூசியின் முதலாவது டோஸும் செலுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, இலங்கையில் அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்டுள்ள சீனப் பிரஜைகள் 2 ஆயிரத்து 865 பேருக்கு சைனோஃபோர்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸும், 2 ஆயிரத்து 435 பேருக்கு இரண்டாவது டோஸும் செலுத்தப்பட்டுள்ளன என்று தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது. (ஒ,4)

# ஊடகவியலாளருக்கு மறைமுக அச்சுறுத்தல்

பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு எதிராக முறைப்பாடு

கொழும்பு.ஜுலை 4
ஊடகவியலாளர் ஒருவர் முகப்புத்தகம் ஊடாக பகிர்ந்த செய்தியொன்றுக்கு, கருத்து பதிவிட்டு மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், மறைமுக அச்சுறுத்தல் விடுத்துள்ளார். இது தொடர்பில் ஊடக அமைப்புக்கள், பொலிஸ்மா அதிபர் சந்தன விக்கிரமரத்னவுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளன.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனுடைய மறைமுக அச்சுறுத்தல் தொடர்பில் உரிய விசாரணைகளை முன்னெடுத்து, ஊடகவியலாளரின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்று குறித்த ஊடக அமைப்புக்கள் பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் வலியுறுத்தியுள்ளன.

குறித்த ஊடகவியலாளர் பொய்யான செய்தியை வெளியிட்டுள்ளார். அதற்கு இயற்கை தண்டனையளிக்கும். பிரபாகரன் மற்றும் ஏனைய குற்றவாளிகளுக்கு என்ன நடந்தது என்பதை அவதானிக்குமாறு அவர் கருத்து பதிவிட்டுள்ளார்.

எனினும் குறித்த ஊடகவியலாளர் தான் எழுதிய பொய்யான செய்தி எது என வினவியுள்ளார். அதற்கு உறுதியான பதிலொன்று தேசபந்து தென்னக்கோனால் அளிக்கப்பட்டிருக்கவில்லை. ஒரு இடத்தில் மட்டும் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பான செய்தியொன்று தொடர்பில் அவரால் குறிப்பிடப்பட்டிருந்தது.

பொய்யான செய்தியை பிரசுரித்தனர் என்று குற்றம் சுமத்தி கைதுசெய்யப்பட்டு, தற்போதும் தடுப்பில் உள்ள பெரும்பாலானோருக்கு எதிராக முறையாக நீதிமன்றங்களில் குற்றச்சாட்டுக்கள் கூட முன்வைக்கப்பட்டிராத பின்னணியில், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், ஊடகவியலாளருக்கு அளித்துள்ள பதில் கருத்துக்கள் தொடர்பில் மிக்க அவதானம் செலுத்துமாறு கோருகின்றோம் என்று அமைப்புக்கள் கடிதத்தில் வலியுறுத்தியுள்ளன. (ஒ.4)

நிதி அமைச்சு
ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை
ETF அறிவித்தல்

2020 ஆம் ஆண்டில் க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தியடைந்த ETF அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் வழங்குவதற்காக விண்ணப்பங்களை கோரல்

2020 ஆம் ஆண்டில் க.பொ.த.(உ/த) பரீட்சையில் சித்தியடைந்த ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய அங்கத்தவர்களின் **5,000 பிள்ளைகளின்** கல்வி நடவடிக்கைகளுக்காக ஒவ்வொரு பிள்ளைக்கும் தலா பன்னிரெண்டாயிரம் **(ரூ.12,000/-)** நிதி உதவி வழங்குவதற்கு ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபையானது தீர்மானித்துள்ளது.

**விண்ணப்பங்களை எப்படி பெற்றுக்கொள்ளலாம்**

- நடைமுறையில் உள்ள கோவிட்-19 சூழ்நிலை காரணமாக எங்கள் வலைத்தளத்திலிருந்து விண்ணப்பத்தைப் பதிவிறக்கம் செய்ய முடியும் – **www.etfb.lk**
- 2021.07.06 ஆம் திகதியிலிருந்து பின்வரும் அலுவலகங்களிலிருந்து அலுவலக நேரங்களில்

**பிராந்திய அலுவலகங்கள்:**

**தலைமையகம்: புலமைப்பரிசில் பிரிவு, இல. 92, கிருள வீதி, நாரஹேன்பிட்ட, கொழும்பு-05.**

01. கம்பஹா
இல.58/B, மேரி பிசோ மாவத்தை, கம்பஹா
தொ.இல. 033-2234520 / 033-5922530

02. கண்டி
இல.79, வீடமைப்பு செயலகம், யட்டிநுவர வீதி, கண்டி.
தொ.இல. 081-2233793

03. இரத்தினபுரி
இல.53/1/2, சேனநாயக்க மாவத்தை, இரத்தினபுரி.
தொ.இல. 045-2222529 / 045-2222530

04. காலி
இல.301/1, ஸ்ரீ தேவமித்த வீதி, காலி.
தொ.இல. 091-2245814 / 091-2231129

05. அனுராதபுரம்
இல.87/25, முதலாம் ஒழுங்கை, தர்மபால மாவத்தை, அனுராதபுரம்.
தொ.இல. 025-2222185 / 025-2222150

06. மாத்தறை
இல.63/02, காளிதாச மாவத்தை, மாத்தறை.
தொ.இல. 041-2231877 / 041-2237607

07. களுத்துறை
இல.294, காலி வீதி, களுத்துறை வடக்கு.
தொ.இல. 034-2237722 / 034-2223040

08. கேகாலை
இல.247/1, கொழும்பு வீதி, கேகாலை.
தொ.இல. 035-2222991

09. குருநாகல்
இல.27, செஞ்சிலுவை கட்டிடம், கச்சேரி வீதி, குருநாகல்.
தொ.இல. 037-2228194 / 037-2056394

10. ஹம்பாந்தோட்டை
இல.57, வில்மட் வீதி, ஹம்பாந்தோட்டை.
தொ.இல. 047-2222460 / 047-2222462

11. ஹற்றன்
இல.01/ A, கினிகத்ஹேன வீதி, ஹற்றன்.

12. பதுளை
இல.9B, கங்கபட வீதி, பதுளை.
தொ.இல. 055-2225357 / 055-2224482

13. அம்பாறை
இல.693, மல்வத்த வீதி, அம்பாறை.
தொ.இல. 063-2222645

14. யாழ்ப்பாணம்
இல.86, 1/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.இல. 021-2220010

15. வவுனியா
இல.69/1, மில் வீதி, வவுனியா.
தொ.இல. 024-2228225

16. திருகோணமலை
இல.455, ஆண்டான்குளம், கண்டி வீதி, திருகோணமலை.
தொ.இல. 026-2056606 / 026-2056607

17. நுவரெலியா
இல.56, லோசன் வீதி, நுவரெலியா.
தொ.இல. 052-2224457 / 052-2224475

விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி : 2021/08/31

**பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் இறுதித் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் எந்த காரணத்தையும் முன்னிட்டும் பெற்றுக்கொள்ளபடமாட்டாது.**

உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பின்வரும் முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

**புலமைப்பரிசில் அலுவலர், புலமைப்பரிசில் பிரிவு. ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம், 'மஹெவர பியச' 19 வது மாடி, நாரஹேன்பிட்ட, கொழும்பு 05.**

தலைவர்/பிரதான நிறைவேற்று அலுவலர்,
ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை.

மேலதிக விபரங்களுக்கு : புலமைப்பரிசில் அலுவலர் - 011-7747281, 011-7747282

# இராணுவ பொறியியல் படையணி முன்னேற்றம்

## தளபதி சமரகோன் பாராட்டு

கொழும்பு.ஜுலை 4
இலங்கை இராணுவத்தின் இயந்திர பொறியியல் படையணி, இராணுவ மற்றும் கடற்படை வாகனங்களைப் பழுது பார்க்கும் பணிகளில் முன்னேற்றம் கண்டுள்ளது என்று படையணியின் தளபதி மேஜர் ஜெனரல் இந்து சமரகோன் தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் நிலைகொண்டுள்ள பல்வேறு இராணுவ அமைப்புகளில் தனித்துவமான தரங்கள், வர்ணம் ஆகியவற்றைக் கொண்டிருக்கும் வகையில் [illegible] காணப்பட்ட வாகனங்கள் இயக்கக்கூடிய வகையில் திருத்தப்பட்டுள்ளன.

கடந்த ஆறு மாதங்களில் மட்டும் இலங்கை இராணுவ மின்சார இயந்திர பொறியியல் படையணி வேலைத்தளத்தில், கைவிடப்பட்ட இலகுரக வாகனங்கள், விளையாட்டு பயன்பாட்டு வாகனங்கள் (எஸ்யூவி), இரட்டை வண்டிகள் மற்றும் ஜீப் வண்டிகள் உள்ளடங்கலாக சுமார் 50 வாகனங்கள் வீதிகளுக்கு தகுதியுடையவையாகவும், இராணுவம் மற்றும் நாட்டின் நலன்களுக்காக மாதம் 10 வாகனங்களும் பழுதுபார்த்து, புதுப்பிக்கப்பட்டன.

அதற்கமைவாக அந்நிய செலாவணியைச் சேமிக்கும் வகையில் கட்டுபெத்தை, உடவளவ, அநுராதபுரம், கிளிநொச்சி மற்றும் யாழ்பாணம் உள்ளடங்கலான அனைத்து மாவட்டங்களிலும் இலங்கை இராணுவ மின்சார இயந்திர பொறியியல் படையணியின் வேலைத்தளங்களில் வாகனங்கள் பழுது பார்க்கப்பட்டு, வர்ணம் பூசப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தாதியர்கள் போராட்டம் வெற்றி

# கோரிக்கைகளை நடைமுறைப்படுத்த ஜனாதிபதி கோத்தாபய இணக்கம்

கொழும்பு, ஜூலை 4

**அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கம் முன்வைத்த ஏழு கோரிக்கைகளில் ஐந்து கோரிக்கைகளுக்கு உடனடி தீர்வுகளை வழங்க, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நடவடிக்கை எடுத்துள்ளார். எஞ்சிய இரண்டு கோரிக்கைகளுக்கும், அடுத்த வரவு செலவுத் திட்டத்தின் ஊடாகத் தீர்வுகளை வழங்கவும் ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார்.**

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அரச தாதியர் சங்கம் கடந்த 1ஆம் மற்றும் 2ஆம் திகதிகளில் நாடு முழுவதும் சுகவீன விடுமுறைப் போராட்டத்தை மேற்கொண்டிருந்தது.

இந்த நிலையில், அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கத்துடன் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் சந்திப்பை மேற்கொண்டார். இதன்போது பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன. அதற்கு அமைவாக எடுக்கப்பட்ட தீர்மானங்கள்,

தாதியர் பல்கலைக்கழகத்தை ஆரம்பித்தல்.

நல்லாட்சி அரசின் காலத்தில் 2017.12.07ஆம் திகதிய 32/2017ஆம் இலக்க சுற்றறிக்கை ஊடாக இடைநிறுத்தப்பட்ட பணிக்குழாம் நிலையை மீண்டும் வழங்குதல்.

இடைநிறுத்தப்பட்டுள்ள தரம் மூன்றிலிருந்து தரம் இரண்டுக்கான பதவி உயர்வை 5 ஆண்டுகளிலும் தரம் இரண்டிலிருந்து தரம் ஒன்றுக்கான பதவி உயர்வை 7 ஆண்டுகளிலும் வழங்குதல்.

சீருடைக் கொடுப்பனவாக ஆண்டுதோறும் 20 ஆயிரம் ரூபாவை வழங்குதல்.

வாரத்தில் தற்போது 36 மணி நேர வேலையை (6 வேலை நாள்கள்) 30 மணி நேர வேலையாக (5 வேலை நாள்கள்) குறைப்பதை விசேட குழு ஊடாக ஆய்வுக்கு உட்படுத்துதல் ஆகிய 5 விடயங்களையும் உடனடியாகச் செயற்படுத்த இணக்கம் காணப்பட்டுள்ளது.

மேலும், 10 ஆயிரம் ரூபா கொடுப்பனவு மற்றும் 2014.12.24 ஆம் திகதியன்று நிதி அமைச்சு வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை சம்பளத்தின் நூறில் ஒரு பங்கு மேலதிக சேவைக் கொடுப்பனவு ஆகியவற்றை எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக வழங்க, ஜனாதிபதி இணக்கம் தெரிவித்தார்.

அரச சுகாதாரத்துறை மீது அரசுக்கு மிகுந்த நம்பிக்கை இருப்பதாகவும் தாதியர் சேவைக்கு கூடிய அங்கீகாரத்தை அளிப்பதாகவும், தாதித் தொழில் வல்லுநர்களுக்கு உரிய இடத்தை வழங்குவதாகவும், ஜனாதிபதி இதன்போது வலியுறுத்தியுள்ளார். (ஒ,5)

# ஊழலற்ற ஆட்சியை நடத்திக்காட்டுவோம்

அமைச்சர் ஜோன்ஸ்டன் தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை 4

ஊழலற்ற ஆட்சியை ஏற்படுத்துவோம் என்று நாம் தேர்தலின்போது வாக்குறுதியளித்தோம். அதனை அவ்வாறே செயற்படுத்தி வருகின்றோம். ஜனாதிபதியும், பிரதமரும் எமக்குத் துணையாக உள்ளனர். இது தான் உண்மை. ஆனால் இந்த உண்மையை வெளிப்படுத்தாது மூடி மறைக்க பலர் முயல்கின்றனர். இவ்வாறு நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் கபுதுவ பரிமாற்ற நுழைவாயிலைத் திறந்து வைக்கும் நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாம் ஆட்சியைப் பொறுப்பேற்று ஓராண்டுக்குள் பல தடைகளுக்கு முகங்கொடுத்தோம். கடந்த அரசால் வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை எவ்வாறு மீளக் கட்டியெழுப்புவது என்பது முதலாவது தடை.பொருளாதாரத்தை வீழ்ச்சியடையச் செய்தவர்கள் இன்று ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட எமது அரசுக்கு பொருளாதாரத்தை கட்டியெழுப்புவது தொடர்பில் ஆலோசனை வழங்கி வருகின்றனர்.

முழு உலகுக்கும் சவாலாகவுள்ள கொரோனா வைரஸே இரண்டாவது சவாலாகும். இத்தகைய சவால்களையும் நாம் எதிர்கொண்டோம். இன்றும் அதற்கு முகங்கொடுத்து வருகின்றோம். அவ்வாறு முகங்கொடுத்த வண்ணமே நாம் அபிவிருத்திச் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றோம். கொரோனாவைக் காரணம் காட்டி அரசதுறையில் உள்ளவர்களுக்கு ஊதியம் வழங்க முடியாது என்றோ, கடன்களை மீளச் செலுத்த முடியாது என்றோ நாம் கூறவில்லை. அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்க வழியில்லை. மிகக் கடினமாகவே கடந்து செல்கிறோம் என நாம் ஒருபோதும் கூறவில்லை. எமது அரசு மிகவும் திறமையான வகையில் திட்டமிட்டு அதற்கு முகங்கொடுத்தோம். இதுதான் யதார்த்தம். - என்றார். (எ-4)

பேஸ்புக் பதிவால்

# கொடூரமாகச் சித்திரவதை: பிரதான சந்தேகநபர் கைது

கொழும்பு,ஜூலை 4

பேஸ்புக்கில் பதிவிட்டமைக்காக அவதூறாக மனிதாபிமானமற்ற முறையில் இருவர் கடத்தப்பட்டு, சித்திரவதைசெய்யப்பட்ட சம்பவம் தொடர்பில், பிரதான சந்தேகநபர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

சட்டத்தரணிகள் ஊடாக பல கொல்ல பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த பின்னர் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரைக் கைதுசெய்ய ஐந்து பொலிஸ் குழுக்கள் சேவையில் ஈடுபட்டிருந்தன. எனினும் அவர் கடந்த ஆறு நாள்களாக தலைமறைவாகியிருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சந்தேகநபர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்படவுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பேஸ்புக்கில் அவதூறு பதிவிட்டனர் என்று கூறப்படும் இருவரையும் எட்டுப் பேர் சேர்ந்து, சிலுவைத் தளம் ஒன்றில் அறைந்து சித்திரவதை செய்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஒ,4)



# விமர்சனங்களுக்கு அச்சப்பட்டு அபிவிருத்திகளை நிறுத்தோம்

மஹிந்த தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை 4

நாட்டில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பில், எவர் விமர்சனங்களை முன்வைத்தாலும், அவற்றை நிறுத்தப்போவதில்லை. மக்களுக்கானது எமது அரசு. அவர்களது பலம் எங்களுக்கு எப்போதும் கிட்டும் என்று எதிர்பார்க்கின்றோம். இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் கபுதுவ பரிமாற்ற நுழைவாயில் மற்றும் பேராதனை போதனா மருத்துவமனைக்கு முன்னால் சுரங்க வழி பாதசாரிகள் கடவை ஆகியவற்றைத் திறந்து வைக்கும் நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் அபிவிருத்திகளை முன்னெடுக்கும்போது உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வீதி அமைப்பு ஆகியவற்றில் விசேட கவனம் செலுத்துவோம்.

உள்நாட்டு உற்பத்திப் பொருளாதாரத்தைப் பலப்படுத்த வேண்டுமாயின், வீதிகளை அபிவிருத்திசெய்ய வேண்டும்.

அதிவேக நெடுஞ்சாலை மாத்திரமன்றி நாட்டின் பிற கிராம வீதிகளை அபிவிருத்தி செய்வதற்காக, ஒரு லட்சம் கிலோமீற்றர் வீதி நிர்மாணப்பணிகள் வேலைத்திட்டத்தை ஆரம்பித்து தொடர்ந்து செயற்படுத்தி வருகின்றோம்.

கொழும்பு நகரில் காணப்படும் வாகன நெரிசலுக்குத் தீர்வு வழங்கும் வகையில் நாம் அண்மையில் தூண்களின் மேல் அமைக்கப்படும் நெடுஞ்சாலைத் திட்டமொன்றை ஆரம்பித்தோம். தற்போது அதன் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேலும் மேம்பாலங்களை நிறுவவும் நடவடிக்கை மேற்கொண்டோம்.

கொழும்பில் மாத்திரமல்ல கண்டியிலும் வாகன நெரிசல் அதிகம். அதற்குத் தீர்வு காண நாம் பல திட்டங்களை ஆரம்பித்தோம்.

எனவே எமது அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் எதிர்க்கட்சி பல்வேறு விமர்சனங்களை மேற்கொள்கின்றது. கொரோனாப் பிரச்சினை முடியும் வரை அபிவிருத்திகளை செய்யாதிருக்குமாறு சிலர் கூறுகின்றனர். வீதிகளை நிர்மாணிக்க வேண்டாம் என்கின்றனர்.

கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக நாம் இதுவரை 262 பில்லியன் ரூபாவைச் செலவிட்டுள்ளோம். நாட்டு மக்களை பாதுகாப்பதற்காகவே அனைத்து செயற்பாடுகளையும் முன்னெடுத்தோம். அவர்களது வாழ்க்கையின் முக்கியத்துவம் அறிந்த காரணத்தால் தடுப்பூசி வழங்கும் செயற்பாட்டை தொடர்ந்து முன்னெடுத்து வருகிறோம். அதனை நாம் நிறுத்தமாட்டோம்.

கொவிட் தொற்றைக் காரணம் காட்டி நாம் இல்லை, முடியாது என்றிருந்தால் மக்கள் இதனை விட பெரும் இன்னல்களுக்கு முகங்கொடுக்க நேரிடும். நாம் எமது மக்களைப் பாதுகாத்துக்கொள்வோம். அதற்கான பலத்தை நீங்கள் எமக்கு அளிக்க வேண்டும். தொற்றிலிருந்து பாதுகாப்புப் பெறும் அதேவேளை உங்கள் பலத்தை நாட்டுக்கு வழங்குங்கள். அனைவரும் ஒன்றிணைந்தால் நம்மால் செய்ய முடியாதது எதுவும் இல்லை - என்றார். (ஒ,4)

தென்மராட்சியில்

# தலா 2 லட்சம் ரூபா செலவில் 766 வேலைத்திட்டங்கள்

சமுர்த்தி பயனாளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் சமுர்த்தி திணைக்களத்தால் தென்மராட்சி பிரதேசத்தில் தலா இரண்டு லட்சம் ரூபா செலவில் 766 வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இவற்றில் 179 விவசாய கருத்திட்டங்கள், 33 மனைசார் கைத்தொழில், 23 மீன்பிடி அபிவிருத்தி, 37 சந்தைப்படுத்தல் நடவடிக்கை, 350 கால்நடை சார்ந்த அபிவிருத்தி, 5 தச்சுத் தொழில் சார்ந்த அபிவிருத்தி, 135 கைத்தொழில் அபிவிருத்தி, 4 ஏனைய வேலைத்திட்டங்கள் என 766 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு வாழ்வாதார மேம்பாட்டுக்குரிய பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை வீட்டுடன் வியாபார நிலையங்களை நடத்த இளவயது பெண் தொழில் முயற்சியாளர் தெரிவுக்கு குறைந்த அளவு விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன.

பிரதேசத்தில் கிராம அலுவலர் பிரிவுக்கு தலா இருவர் வீதம் 120 இளவயது பெண் தொழில் முயற்சியாளர்கள் தெரிவுசெய்யுமாறு சமுர்த்தி திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் இதுவரை 71 பெண்களே விண்ணப்பித்துள்ளனர் - எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறைவு

மூச்சு உங்களுக்கு உயிரைக் கொண்டு வருகிறது. அதில் கவனம் செலுத்துங்கள். அதை உணர முடியும் போது அது ஒரு ஆறுதலையும் ஒரு நிறைவையும் கொண்டுவரும். இந்த வாழ்நாள் முழுவதுமே உங்களுடன் இருப்பது அது ஒன்று தான்.

மேலும் அறிந்து கொள்ள :
ஒவ்வொரு ஞாயிறும் மாலை 5.30 - 6.00 மணி வரை வசந்தம் (இலங்கைச்சனல்) தொலைக்காட்சியினைப் பாருங்கள்.

**தொடர்பு இலக்கம் : 076 818 3883**
**தொடர்பு நேரம் : பி.ப 5.00 - 8.00 மணி வரை**
**திங்கள் - ஞாயிறு வரை**

## வேலை வாய்ப்பு அறிவித்தல்

**துணை கிளை செயற்பாட்டாளர் (ஆண்/ பெண்)**
**யாழ்ப்பாணக் கிளை**

தகைமைகள் : க.பொ.த சாதாரண தர சித்தி
: ஆங்கில மொழியில் சிறந்த தொடர்பாடல் திறன்
: சிறந்த கணிணி அறிவு
: மோட்டார் சைக்கிள் Licence பெற்றிருத்தல்
வயது : 25க்கு குறைவு

**உங்களது சுய விபரக் கோவையை 10 நாட்களுக்குள் அனுப்பவும்.**

info@tradefirst.lk

**தொடர்புகளுக்கு 077 485 0077**

## பெண் பராமரிப்பாளர் தேவை

ஊரிக்காடு வல்வெட்டித்துறையில் நான்கு வருடங்களுக்கு மேலாக இயங்கி வருகின்ற வல்வை முதியோர் இல்லத்திற்கு பெண் பராமரிப்பாளர் தேவை. உணவு, தங்குமிட வசதி இலவசம். தகுந்த சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். எமது இல்லத்தில் புதிதாக ஆண்கள், பெண்கள் இணைய விரும்புவோர் இணைந்து கொள்ளலாம். கட்டணம் குறைவான நிலையில் அறவிடப்படும்

**தொடர்புகளுக்கு 077 810 6857, 077 154 2067, 021 226 5551**

## துயர் பகிர்கின்றோம்



தோற்றம் 08.09.1946 மறைவு 30.06.2021

சாவகச்சேரி கல்விக்கோட்டத்தில் 1990 தொடக்கம் எழுதுநராகவும், தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகத்தில் 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2006 செப்ரம்பர் வரை நிர்வாக உத்தியோகத்தராகவும் எம்முடன் பணியாற்றி ஓய்வு பெற்ற

**சீனிவாசகம் பத்மநாதன்**
(ஓய்வு பெற்ற நிர்வாக உத்தியோகத்தர்)

அவர்கள் 30.06.2021 அன்று இறைபதமடைந்தார் அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்தின்கின்றோம்.

**சக ஓய்வு பெற்ற மற்றும் உத்தியோகத்தர்கள்**

### தாதியர்....

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தனது பலத்தை தொழிற்சங்க நடவடிக்கை ஊடாக அரசுக்கு காண்பிக்க நேரிடும். இவ்வாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அரசுக்கு மிரட்டல் விடுத்துள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் நாளாந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று நடைபெற்றது. இந்தச் சந்திப்பின் போது அந்தச் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினரும் ஊடகக் குழு உறுப்பினருமான மருத்துவர் வாசன் ரட்ணசிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தாதியர்கள் கடந்த முதலாம் மற்றும் இரண்டாம் திகதிகளில் நாடு முழுவதும் சுகவீன விடுப்புப் போராட்டத்தை மேற்கொண்டிருந்தனர். இதனையடுத்து ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தாதியர் சங்கத்துடன் நேற்று முன்தினம் பேச்சுக்களை முன்னெடுத்திருந்தார். இதன்போது தாதியர்கள் சங்கம் முன்வைத்த 7 கோரிக்கைகளில் 5 கோரிக்கைகளை உடனடியாகவும் எஞ்சிய 2 கோரிக்கைகளை எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தின் போதும் நிறைவேற்ற உறுதியளித்தார். குறிப்பாக தாதியர்கள் பதவி உயர்வு, சம்பளம் மற்றும் கொடுப்பனவுப் பிரச்சினைகளுக்கு இதன் போது தீர்வு காணப்பட்டிருந்தது. இந்த நிலையில் இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம், அரச சேவையில் சம்பளத்தை தீர்மானிக்கும்போது சேவைக் கட்டமைப்பு, சம்பளக் கொள்கையுடன் கூடிய தீர்மானம் அவற்றின் பிரகாரமே அரச சேவையில் உள்ள ஊழியர்களின் சம்பளம் தீர்மானிக்கப்படுகின்றது. அவர்களின் கொடுப்பனவுகள் தீர்மானிக்கப்படுகின்றன. இந்த விடயங்களில் கவனம் செலுத்தியே கடந்த கால அரசுகளும், அமைச்சரவையும் முடிவுகளை எடுத்திருந்தன.

இந்த அரசு உருவாக்கப்படும்பொழுது, ஜனாதிபதி பதவிக்கு வரும் முன்பாக தேசிய கொள்கை ஊடாகவே தனது சேவைகளை முன்னெடுப்பதாகவும், அதேபோன்று தேசியக் கொள்கைகளை மீறாமல் தங்களது ஆட்சியை நடத்துவோம் என்று உறுதிபட தெரிவித்திருந்தார். ஆனால் இந்தச் சந்திப்பில் ஒரு சாரருக்கு பல்வேறுபட்ட கொள்கைகளை மீறி அவர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் இதனை வன்மையாகக் கண்டிக்கின்றது. எதிர்க்கின்றது. தொழிற்சங்கங்கள் ஊடாக கோரிக்கை முன்வைக்கப்படும்பொழுது சம்பந்தப்பட்ட அமைச்சர் ஆராய்வார். அமைச்சரவை ஆராயும். அதில் சம்பளம் தொடர்பான கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தால் அது தொடர்பில் தேசிய சம்பளக் கொள்கை ஆணைக்குழு கலந்துரையாடி சம்பள அதிகரிப்பு, கொடுப்பனவு கொள்கையின் ஊடாக அதிகரிக்கப்பட கூடியதாக அல்லது கொடுக்கப்படக் கூடியதாக இருக்கின்றதா? என்பன ஆராயப்படும். சுகாதாரத்துறையில் உள்ள ஏனைய தரப்பினருக்கு இது பாதிப்பை ஏற்படுத்துமா என்பது பற்றி பகுப்பாய்வு செய்தன் பின்னர் தேசிய சம்பள கொள்கை ஆணைக்குழு முடிவு எடுக்கும்.

இந்த முடிவுகள் பொதுநிர்வாக அமைச்சுக்கு அனுப்பப்படும். அவர்கள் சகல விடயங்களையும் ஆராய்ந்து முடிவு எடுப்பார்கள். குறிப்பாக சுகாதாரத்துறையில் ஒரு பிரிவினருக்கு சம்பளம் அதிகரிக்கப்படும்போது அவர்களை விட கூடிய தரத்தில் உள்ள பிரிவினர், அவர்களுக்குச் சமாந்தரமாக உள்ள பிரிவினர், அவர்களுக்கு கீழேயுள்ள பிரிவினர் ஆகியோருடன் முரண்பாடுகள் ஏற்படுகின்றதா என்பதையும் ஆராய்வார்கள்.

இவை எல்லாம் ஆராய்ந்த பின்னர் நிதி அமைச்சுக்கு அனுப்பப்படும். இவற்றை வழங்குவதற்கான வல்லமை நிதி அமைச்சுக்கு இருக்கின்றதா என்பதை ஆராய்ந்த பின்னர் நிதி அமைச்சு அமைச்சரவைக்கு அதனைச் சமர்ப்பிக்கும்.

ஆனால் தாதியர் தொழிற்சங்கத்துடன் நடந்த கலந்துரையாடலில் இந்தப் படிமுறைகள் மீறப்பட்டு சம்பள அதிகரிப்பு உட்பட அவர்களது கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இதனை நிறுத்தவேண்டும். இல்லாவிடின், அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எங்களுடைய தொழிற்சங்கப் பலத்தை காட்டுவதற்கு தயாராக உள்ளது. தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டு அவர்களுடைய சம்பளத்தை அதிகரிக்க முடியுமானால், அதற்கு எதிராக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தங்களின் முழுமையான தொழிற்சங்கப் பலத்தைக் காண்பிக்கத் தயாராக இருக்கின்றது.

முழு சுகாதார சேவையினர் மற்றும் அரச சேவையினரை அவமரியாதை செய்வதாகவே தாதியர் சங்கத்தின் கோரிக்கை நிறைவேற்றத்தை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கருதுகின்றது. அரசு சரியான முறையில் கவனம் செலுத்தி, மேலே நாம் குறிப்பிட்ட படிமுறை ஊடாகவே சம்பள அதிகரிப்பு வழங்கப்பட வேண்டும். இல்லையேல், நாளை திங்கட்கிழமை எமது மத்திய குழுக் கூட்டத்தைக் கூட்டியுள்ளோம். இதன்போது தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்வதற்கான தீர்மானம் எடுக்கப்படலாம்- என்றார். (ஓ.5)

## காணி விற்பனை

யாழ்ப்பாணம் நல்லூர் செட்டித் தெரு வீதியில் வரிமதிப்பு எண் 10 கொண்டதும் விஸ்தீரணம் நில.பர 01 1/2 யும் வீடும் விற்பனைக்கு உண்டு.

**076 702 3565**

## On-line Free Classes (Batch - IV)

Diploma in English/ Spoken English
Diploma in ICT
Diploma in Sinhalam
காலம் : 03 மாதங்கள் சான்றிதழ்

IPS *to your future*

On-line Education Center,
Jaffna.
Email : degreeinfo21@gmail.com

**021 424 0229**
**076 685 2529**

## பணியாளர் தேவை

1) கேபில் TV திருத்துனர்
2) கணக்காளர்
3) கொங்கிறீற் கல், தூண், அரிவு, லூகாஸ் கல் அரிவதில் அனுபவமுள்ளவர்கள்
4) கூலி வேலையாட்கள்
5) சாரதி
6) வெல்டர்.

**தொடர்பு 077 457 3580**

## சிறுநீரகம் தேவை

32 வயதுடைய A+ குருதி வகையைச் சேர்ந்த ஆண் சிறுநீரக நோயாளி ஒருவருக்கு A+ அல்லது A- அல்லது O+ அல்லது O - GROUP வகையைச் சேர்ந்த சிறுநீரகத்தைத் தானமாக வழங்கக் கூடியவர் தொடர்பு கொள்ளவும்.

**தொடர்பு: Sanju 076 531 4995 075 576 0264**

ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமஹ

## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 03.03.1957 இறப்பு 30.06.2021

இருபாலையைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட

**பொன்னையா சத்தியகுணசேகரன் (சேகர்)**

அவர்களின் மறைவினால் துயரடைந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**செ.யோகேஸ்வரன் (லோகன்)**
**தாவடி**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 17 - 07 - 1943



மறைவு 15 - 06 - 2020

அமரர்
**பவளரத்தினம் சின்னத்துரை**
( ஏழாலையை பிறப்பிடமாகவும், கடைாவை வசிப்பிடமாகவும் கொண்டவர் )

ஓராண்டு நகர்ந்தாலும்
நம்மை விட்டு அகலாது உங்கள் நினைவு
நினைவுகள் வருகையில்
நிலை குலைந்து போகின்றோம் அம்மா.!
உங்களை நினைக்காத நொடிகளில்லை.
உங்கள் ஆத்மா சாந்திபெற
இறையருளை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி.!!!

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமண சேவை

### மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1990 ஆம் அண்டு பிறந்த அரச தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.

**077 887 8446**

### திருமண சேவை

உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் தெரிவுகளுக்கு எமது திருமண சேவையை நாடுகள் விரைவாக நிறைவேற்றி கொடுக்கப்படும்.

**077 078 3832**

### மணமகள் தேவை

1983. யாழ். இந்து. கௌரவ குடும்பம் சூரியன் செவ்வாய். பாவக் கிரகம் குறைந்த வரனுக்கு ம்ணப்பெண் தேவை.

**+49 176 724 903 28, +94 77 162 6279**

### மணமக்கள் தேவை

யாழ் இந்து 1995 பிறந்த உத்தியோக மண மகளுக்கும் 1983 இலண்டனில் இருந்து வருகை தந்துள்ள மணமகனுக்கும் 1989 பிரான்ஸ் சூரியன் செவ்வாய் மணமகனுக் கும் 1985 பிறந்த சூரியன் செவ்வாய் தாதிய மணமகளுக்கும் 1988 முகாமைத்துவ அலுவலர் மணமகனுக்கும் பொருத்தமான மணமக்கள் தேவை.

**077 6040373**

### மணமகன் தேவை

1991. இந்து. ரேவதி. Development Officer சொந்த இடம்: வேலணை. பதிவு: 6112. தரகர் கூலி இல்லை. Unlimited குறிப்புகள். பதிவுக் கட்டணத்தில் 20% கழிவு.

**Ensured Quality Lanka, Colombo 04, (கிளைகள் கிடையாது) ww.EQMarriageService.com**

**076 664 9401**

### மணமகன் தேவை

1994. கத்தோலிக்கம். அஸ்வினி. Doctor சொந்த இடம்: யாழ்ப்பாணம். பதிவு: 6108. தரகர் கூலி இல்லை. Unlimited குறிப்புகள். பதிவுக் கட்டணத்தில் 20% கழிவு.

**Ensured Quality Lanka, Colombo 04, (கிளைகள் கிடையாது) ww.EQMarriageService.com**

**076 664 9401**

### மணமகன் தேவை

1990. இந்து. பரணி. Teacher சொந்த இடம்: யாழ்ப்பாணம். பதிவு: 6208. தரகர் கூலி இல்லை. Unlimited குறிப்புகள். பதிவுக் கட்டணத்தில் 20% கழிவு.

**Ensured Quality Lanka, Colombo 04, (கிளைகள் கிடையாது) ww.EQMarriageService.com**

**076 664 9401**

### மணமகள் தேவை

1982. இந்து. பூரட்டாதி. Accountant Canada சொந்த இடம்: கொழும்புத்துறை. பதிவு: 6151. தரகர் கூலி இல்லை. Unlimited குறிப்புகள். பதிவுக் கட்டணத்தில் 20% கழிவு.

**Ensured Quality Lanka, Colombo 04, (கிளைகள் கிடையாது) ww.EQMarriageService.com**

**076 664 9401**

### மணமகன் தேவை

1995. கத்தோலிக்கம். மிருகசீரிடம். Quantity Surveyor சொந்த இடம்: பண்டத்தரிப்பு. பதிவு: 6130. தரகர் கூலி இல்லை. Unlimited குறிப்புகள். பதிவுக் கட்டணத்தில் 20% கழிவு.

**Ensured Quality Lanka, Colombo 04, (கிளைகள் கிடையாது) ww.EQMarriageService.com**

**076 664 9401**

### மணமகள் தேவை

1988. இந்து. கார்த்திகை. Mechanical Engineer சொந்த இடம்: காரைநகர். பதிவு: 6176. தரகர் கூலி இல்லை. Unlimited குறிப்புகள். பதிவுக் கட்டணத்தில் 20% கழிவு.

**Ensured Quality Lanka, Colombo 04, (கிளைகள் கிடையாது) ww.EQMarriageService.com**

**076 664 9401**

### மணமகள் தேவை

1989. இந்து. ரோகிணி. Doctor சொந்த இடம்: மானிப்பாய். பதிவு: 5701. தரகர் கூலி இல்லை. Unlimited குறிப்புகள். பதிவுக் கட்டணத்தில் 20% கழிவு.

**Ensured Quality Lanka, Colombo 04, (கிளைகள் கிடையாது) ww.EQMarriageService.com**

**076 664 9401**

### மணமகள் தேவை

1983. இந்து. புனர்பூசம். Network Engineer சொந்த இடம்: உடுவில். பதிவு: 6114. தரகர் கூலி இல்லை. Unlimited குறிப்புகள். பதிவுக் கட்டணத்தில் 20% கழிவு.

**Ensured Quality Lanka, Colombo 04, (கிளைகள் கிடையாது) ww.EQMarriageService.com**

**076 664 9401**

# வாடகைக்கு

### வீடு வாடகைக்கு

யாழ் பிறவுன் வீதி நீராவியடியில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.

**தொடர்பு : 077 990 6867, 074 039 9017**

### வீடு வாடகைக்கு

கிளிநொச்சியில் விவேகானந்தா நகரில் வீடு ஒன்று வாடகைக்கு உண்டு.

**தொடர்பு : 077 711 1716, 076 860 4501**

### கடைகள் வாடகைக்குண்டு

யாழ் பல்கலைக்கழக சூழலில் Mobile phoneshop. Restaurant (உணவகம்) வாடகைக்குண்டு.

**தொடர்புகட்கு : 077 602 1794**

### வீடு வாடகைக்கு

யாழ் பரமேஸ்வரா கல்லூரி வீதி, 1ம் ஒழுங்கையில் (தபாற் பெட்டி சந்தி) 3 அறைகள், வரவேற்பறை, சமைய லறை, உள்ள வீடு வாடகைக்கு வாகனத் தரிப்பிட வசதி உண்டு.

**மாத வாடகை 22 000/-**

**தொடர்பு 077 773 9185**

### வீடு வாடகைக்கு

யாழ் இந்து கல்லூரிக்கு முன்பாக K.K.S வீதியில் வீடு வாடகைக்குண்டு.

**தொடர்பு 077 020 4276, 077 522 2533**

# ஏனையவை

### சேவை

நீங்கள் அடகுவைத்து மீட்டெடுக்கமுடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்திற்கு வருகை தந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும் நாடளாவிய ரீதியில் சிநேக பூர்வமான சேவை.

**AAA Gold Center**

**076 568 4346**

### பணிநிலை வெற்றிடம்

1) காப்புறுதி துறையில் 1 வருடத்திற்கு குறையாத அனுபவம். 2) நிதி சேகரிப்பாளர் (Collection officer) 3) தூய்மை பணியாளர் (Cleaning)

**076 711 2102**

### DEWMAS JOB BANK

வேலையாட்கள் தேவையா? 074 138 3368

யாழ் வேலை வாய்ப்புகளுக்கு dewmasweb.com

**51, Amman Road, Nallur**

### பணி நிலை வேண்டுகை

1) கணக்காளர்
2) கணக்குப்பதிவாளர் தேவை. (கணினி அறிவு தேவை) இருபாலரும்
3) விற்பனைப் பிரதிநிதி (அனுபவம் தேவை)

**சிவகுரு காட்வெயார், கிளிநொச்சி 077 772 2305**

### அடைவு சேவை

உங்கள் அடைவு நகைகளை மீட்டு விற்பதற்கு இதுதான் சரியான சந்தர்ப்பம். உங்களுக்கு உதவி புரிய நாம் காத்திருக்கின்றோம்.

அழையுங்கள்:

**077 866 1605**

### விளம்பர தொடர்புக்கு

**021 493 1111**

# விற்பனைக்கு

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் காங்கேசந்துறையில் 9, 12, 17 பரப்பு காணிகள் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு : 074 014 7422**

### ஊர் கோழி முட்டை

தீவக ஊர் கோழி முட்டை யாழ் நகரில் பெறலாம். ஒன்றின் விலை 25 ரூபாய்

**தொடர்பு 077 613 8964**

### விற்பனைக்கு

தானியங்கி கல் அரிவு இயந்திரமும் அதற்கான அச்சுக்கள் உட்பட கல் அடுக்கும் பலகை தட்டுக்கள், கைவண்டில்கள் என்பன விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: 077 711 0287**

# தேவை

### காணி தேவை

இராசவீதி, கோப்பாய், இருபாலை, பரந்தன் ஆகிய இடங்களில் 3 பரப்பு காணி விலைக்கு/வாடகைக்கு தேவை.

**தொடர்பு : 077 457 0267**

### தேவை

வீட்டு வேலைக்கு ஆட்கள்தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

**தொடர்பு 076 923 7686**

### வீடு வாடகைக்கு அல்லது விலைக்குத் தேவை

சுன்னாகம்- தெல்லிப்பளை- மல்லாகம் பகுதியில் ஒரு சிறிய வீடு வாடகைக்கு அல்லது விலைக்கு தேவைப்படுகின்றது.

**077 314 4861, 077 711 8348**

### வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் நல்லூரில் அமைந்துள்ள பிரபல SUPER MARKET ஒன்றில் தங்கி நின்று வேலை செய்வதற்கு ஆண் வேலையாட்கள் தேவை:

வயது : 22 – 40 உட்பட்டவர்கள்
சம்பளம் 25 000/–
(தங்குமிடம், சாப்பாடு வழங்கப்படும்)

**077 477 3481**

### பெண் வேலையாட்கள் தேவை

சுன்னாகத்தில் இயங்கும் வியாபார நிலையம் ஒன்றிற்கு பெண் வேலையாட்கள் தேவை.

**தொடர்புகளுக்கு 076 700 7999, 077 791 0958**

### பணியாளர் தேவை

யாழ் நகரில் உள்ள Phone Shop ஒன்றிற்கு பணியாளர்கள் தேவை. (விற்பனையாளர், கணக்காளர், உதவியா ளர்). **தகைமை - O/L, A/L**

தொடர்புகளுக்கு:

**077 3611 282**
**077 0877 723**

---

விபத்தில்....

விபத்தில் 25 வயதுடைய கிரிதரன் சந் திரசேனன் என்பவரே உயிரிழந்தார். கிளிநொச்சி நகர் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் கப் ரக வாக னத்தை முந்திச்செல்ல முற்பட்டபோது இந்த விபத்து நேர்ந்தது என்று தெரி விக்கப்படுகின்றது.

மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-113)

## பேர்ள் கப்பல் விபத்து

# இந்தியக்கப்பலின் சோதனை நிறைவு

கொழும்பு,ஜூலை 4

இலங்கைக் கடற்பரப்பில் தீப்பற்றிய எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால், கொழும்புக்கு அப்பாலுள்ள கடற்பரப் பில் ஏற்பட்டிருக்கும் தாக்கங்களைக் கணிப்பிடும், இந்தியக் கடற்படைக்கப் பலின் ஒரு கட்ட சோதனை நிறைவ டைந்துள்ளது.

இந்தியக் கடற்படைக் கப்பலான சர் வேக்ஷாக் 558 மைல்கள் சைட் ஸ்கான்சோனர்சோதனையை நிறைவு செய்துள்ளது என்று கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்தியக் கடற்படையின் ஆய்வுக் கப்ப லான சர்வேக்ஷாக் கடந்த மாதம் 24 ஆம் திகதி கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது. கொழும்பு துறை முகத் துக்கு அப்பால் உள்ள கடற்பரப்பில் கடற்பயணங்களின் பாதுகாப்பை உறு திப்படுத்துவதற்காக இலங்கை அரசால் விடுக்கப்பட்டிருந்த உத்தியோகபூர்வ மான கோரிக்கையின் அடிப்படையில் ஐ.என்.எஸ் சர்வேக்ஷாக் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அமைப்பு (நாரா), இலங் கைக் கடற்படை மற்றும் இந்தியக் கடற் படை ஆகியவற்றின் ஒன்றிணைவில் இந்த கூட்டு ஆய்வுப்பணிகள் முன்னெ டுக்கப்படுகின்றன.

ஒபரேஷன்சாகர் ஆரக்ஷா 2 இன் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் இந்தக் கூட்டு நடவடிக்கை பாதுகாப் பான கடற்பயணத்துக்கு உறுதுணை யாக இருக்கும் அதேநேரம், இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் ஏற்படும் இதுபோன்ற அனர்த்தங்களை தணிப் பதற்கு ஆதரவை வழங்குவதற்கான கொள்கையை மேலும் வலுப்படுத் தும் என்றும் தூதரகம் குறிப்பிட்டுள் ளது. (ஓ.4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# 31ஆம் நாள் நினைவு அஞ்சலி



மண்ணில் 03.09.1940 — விண்ணில் 04.06.2021

## அமரர் திரு. சிதம்பரப்பிள்ளை குலசேகரம்

ஓய்வுநிலை பிரதி அதிபர் யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி

அமரர் திரு. சிதம்பரப்பிள்ளை குலசேகரம் கொடிகாமம் திருநாவுக்கரசு நாயானார் மடாலய தர்மகத்தா சபை தலைவராக இருந்து அரும் பணியாற்றி 04.06.2021 ஆம் திகதி அமரத்துவம் அடைந்த தலைவர் சிதம்பரப்பிள்ளை குலசேகரம் அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக.

கொடிகாமம் திருந்நாவுக்கரசு நாயனார்,
மடாலய தர்மகத்தா சபை,
கச்சாய் வீதி,
கொடிகாமம்

சி.ஏகாம்பரநாதன்
செயலாளர்

# மரண அறிவித்தல்

பிறப்பு 29 12 1940



இறப்பு 01 07 2021

## திரு. சிவசம்பு ஞானசுந்தரம்

(நொதேன் சார்ஜேஸ் உரிமையாளர்)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் யாழ். கொக்குவில் பொற்பதி வீதி. பிறவுண் வீதி மற்றும் கொழும்பு வெள்ளவத்தை ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திரு.சிவசம்பு ஞானசுந்தரம் (நோதேன் சார்ஜேஸ் உரிமையாளர்) அவர்கள் கடந்த (01.07.2021) வியாழக் கிழமை அன்று கொழும்பில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசம்பு அன்னமுத்து தம்பதிகளின் அன்பு மகனும். காலஞ் சென்றவர்களான நவரத்தினம். இரத்தினம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் .இராஜராஜேஸ்வரியின் ஆருயிர்க் கணவரும். சுகாந்தன். சுதாகர். சுபாஸ்கர் ஆகியோரின் அன்புத் தந்தையும். தர்சினி. சித்திராதேவி. துசிதா ஆகியோரின் அன்பு மாமனாரும். காலஞ் சென்றவர்களான கனகசபை. சோமசுந்தரம். சிவபாக்கியம். ராஜசுந்தரம். சரஸ்வதி. மீராவதி மற்றும் அன்னபூரணம். பாலசுந்தரம். கனகசுந்தரம். ஜெயசுந்தரம். சிவசுந்தரம். பிறேமாவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும். உதயகுமாரன். கணநாதன். இரத்திமலர். ஆகியோரின் அன்பு மைத்துனரும். சந்தோஷ். ஆகாஷ். ஹரிணி. கவின். அருண் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் இன்று (04.07.2021) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிமுதல் கல்கிசை .மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு முற்பகல் 11.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பிற்பகல் 1.00 மணியளவில் கல்கிசை பொது மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் : சுதாகர் (மகன்)
Tel: 0094 714409123

# 1ஆம் ஆண்டு சிரார்த்த நினைவு

தாயின் மடியில் • 02 • 02 • 1949



நாராயணன் அடியில் • 15 • 06 • 2020

## சிவகுருநாதன் இரங்கராஜா (B.A, B.com, M.Sc)

இணைந்த வடக்கு கிழக்கு மாகாண சபையின் முன்னாள் இறுதி பிரதம செயலாளர், வடக்கு மாகாண சபையின் முதலாவது பிரதம செயலாளர், வடக்கு கிழக்கு மாகாண சபையின் ஆளுநரின் முன்னாள் செயலாளர், வடக்கு மாகாண ஆளுநரின் முன்னாள் செயலாளர், யாழ் பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேரவை உறுப்பினர்)

172, கோவில் வீதி, நல்லூர்.

தகவல்: சிவகுருநாதன் குடும்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்க்...

யாழ்ப்பாணத்தில் நேற்றுக் கூடிய மூன்று கட்சிகளின் தலைவர்களும் இந்த முடிவை எடுத்தனர். இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் தலைவர் த.சித்தார்த்தன், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர், நேற்றுக் காலை 11.30 மணியளவில் மார்ட்டின் வீதியிலுள்ள இலங்கை தமிழ் அரசுக் கட்சி அலுவலகத்தில் சந்தித்தனர். சுமார் ஒரு மணித்தியாலம் இந்த சந்திப்பு நடந்தது.

6 தமிழ் கட்சிகளுக்கு இடையிலான சந்திப்புக்கு தமிழ் ஈழ விடுதலை இயக்கம் விடுத்த அறிவிப்பு தொடர்பில் இதில் கலந்துரையாடப்பட்டது. ஏற்கனவே 9 கட்சிகளின் கூட்டுப் பேச்சு இடை வழியில் நிற்கும் போது, ரெலோ திடீரென விடுத்த கோரிக்கையை அடுத்து இது தொடர்பில் ஆராயப்பட்டது. ஏற்கனவே 9 கட்சிகள் கூட்டுப்பேச்சு நடந்திருப்பதால், அந்த கட்சிகளையும் இணைத்து தமிழ் தேசிய கூட்டமைப்பு புதிய ஒற்றுமை முயற்சியை மேற்கொள்வதென தீர்மானிக்கப்பட்டது.

தமிழ் ஈழ விடுதலை இயக்கம் ஏற்கனவே இன்றைய தினம் சந்திப்புக்கு அழைப்பு விடுத்திருந்தது. இந்தச் சந்திப்பை கூட்டமைப்பாக நடத்துவது என்று நேற்றைய கலந்துரையாடலில் முடிவு செய்யப்பட்டது. (ம-ஒ,5)

## நேற்று...

அறிவித்துள்ளது. நீண்ட நாட்களின் பின்னர் நாளொன்றில் குறைந்தளவான கொரோனாத் தொற்றாளர்கள் எண்ணிக்கை நேற்று பதிவாகியுள்ளது.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 64 ஆயிரத்து 46ஆக அதிகரித்துள்ளது. கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 31 ஆயிரத்து 394ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 29 ஆயிரத்து 461ஆக அதிகரித்துள்ளது எனவும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-22)

## சாவு....

தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 191ஆக உயர்வடைந்துள்ளது. நேற்றுமுன்தினம் சாவடைந்த 34 பேரில் 21 ஆண்களும், 13 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

அதன்படி 30 முதல் 59 வயதுக்கு இடைப்பட்ட 3 பெண்களும், 3 ஆண்களும் உயிரிழந்துள்ளனர். அதேவேளை, 60 வயதுக்கு மேற்பட்ட 10 பெண்களும், 18 ஆண்களும் சாவடைந்துள்ளனர் என்றும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-22)

## இரண்டாம்....

வடக்கு மாகாணத்துக்கு இரண்டாம் கட்டமாகத் தடுப்பூசி வழங்குவதற்கு 50 ஆயிரம் தடுப்பூசிகள் இன்று (நேற்று) கிடைத்துள்ளன. இந்தப் பணிகள் ஜுலை 5ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை இடம்பெறும்.

இரண்டாம் கட்டத் தடுப்பூசி வழங்கும் பணிகள் சுகாதார அமைச்சின் வழிகாட்டல்களுக்கு அமைவாக முதியோர் இல்லங்களில் உள்ளவர்களுக்கும், 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும், 18 வயதுக்கு மேற்பட்ட ஆபத்துநிலையுடைய கர்ப்பிணி தாய்மார்களுக்கும், 35 வயதுக்கு மேற்பட்ட அனைத்து கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் வழங்கப்படும். அத்துடன் தொழிற்சாலைப் பணியாளர்களுக்கும் முன்களப் பணியாளர்களுக்கும் முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படும்.

60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குத் தடுப்பூசி ஏற்றும் நிலையங்கள், திகதிகள் பற்றிய விபரங்கள் அந்தந்த பிரதேசங்களுக்குரிய சுகாதார மருத்துவ அதிகாரிகளால் அறியத்தரப்படும் - என்றார். (ம-26)

## இரண்டு...

கற்கை நிறுவனத்தின் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி சந்திம ஜீவந்தர நேற்று தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் 'டெல்டா' வைரஸ் தொடர்பான ஆபத்து இன்னும் குறைவடையவில்லை. மிகவும் வேகமாகப் பரவும் இந்த வைரஸானது இதுவரை தடுப்பூசி ஏற்றாதோருக்கும் ஒரு தடுப்பூசியை மாத்திரம் பெற்றுக்கொண்டவர்களுக்கும் மிகப் பெரிய அச்சுறுத்தலானது. இது தொடர்பில் சகல தரப்பினரும் மிகவும் அவதானத்துடனும் பொறுப்புடனும் நடக்க வேண்டும்.

இலங்கையில் கணிசமான மக்கள் தடுப்பூசி ஏற்றிக்கொள்ளும் வரை பாதுகாப்பு நடவடிக்கைகள் பின்பற்றப்பட வேண்டும். பயணக் கட்டுப்பாடுகளை முழுமையாக நீக்கக்கூடாது. வெவ்வேறு மாகாணங்களைச் சேர்ந்த நான்கு மாவட்டங்களில் இதுவரை 'டெல்டா' வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். எனவே, மாகாணங்களுக்கு இடையிலான பயணக்கட்டுப்பாடு தொடர்ந்து நடைமுறையில் இருக்க வேண்டும்.

இதேவேளை, நாட்டில் கொரோனா பிறழ்வு குறித்த உயிரணு பகுப்பாய்வு அறிக்கை இன்று (நேற்று) சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது, என்றார். (ஒ,5,22)

## ராஜபக்ச...

பெற்றுள்ளது என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ச, பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ச, அமைச்சர்களான சமல் ராஜபக்ச, நாமல் ராஜபக்ச, இராஜாங்க அமைச்சர் சஷிந்த ராஜபக்ச, நாடாளுமன்ற உறுப்பினர் நிபுண ரணவக்க ஆகிய ராஜபக்ச குடும்ப உறுப்பினர்கள் மாத்திரமே இந்தச் சந்திப்பில் பங்கேற்றுள்ளனர்.

பஸில் ராஜபக்சவின் நாடாளுமன்ற வருகை, அரசின் அடுத்தகட்ட நகர்வுகள் உட்பட அரசியல் ரீதியிலான குழப்பங்கள் தொடர்பிலும் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

பஸில் ராஜபக்சவால்தான் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்ற மொட்டு கட்சி உறுப்பினர்களின் வாதத்தால், கோத்தாபய பெயில் என்ற எதிரணியின் பிரச்சாரம் உண்மையாகின்றது என கோத்தாபய ராஜபக்சவுக்கு நெருக்கமானவர்கள் சுட்டிக்காட்டிவருகின்றனர். இந்த விடயம் குறித்தும் இந்தச் சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. சந்திப்பு நீண்டநேரம் இடம்பெற்றிருந்தாலும் காத்திரமான முடிவுகள் எதுவும் எடுக்கப்படவில்லை என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

அதேவேளை, பஸில் ராஜபக்ச எதிர்வரும் 8ஆம் திகதி நாடாளுமன்றம் வரமாட்டார் என தெரியவருகின்றது. பஸில் ராஜபக்ச நாடாளுமன்றம் வருவதற்காக எம்.பியொருவர் பதவி விலக வேண்டும். அதன்பின்னர் புதியவரின் பெயர் முன்மொழியப்பட்டு அது வர்த்தமானியில் வெளியாக வேண்டும். இவ்வாறான நடைமுறைகள் இருப்பதால் பஸிலின் நாடாளுமன்ற வருகை சற்று தாமதமாகலாம் என தெரியவருகின்றது. இதற்கிடையில் தமது நாடாளுமன்ற பிரவேசம் தொடர்பில் அதிருப்தியில் இருக்கும் அமைச்சர் விமல் வீரவன்சவுடன், பஸில் ராஜபக்ச தனிப்பட்ட ரீதியில் கலந்துரையாடியுள்ளார் எனவும் கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-44)

## முடக்கம்...

தடையை நீக்குவதா என்பது தொடர்பிலும் நாளை (இன்று) நடைபெறும் கலந்துரையாடலில் முடிவு எடுக்கப்படும். இவ்வாறு இராணுவத் தளபதியும் கொரோனா கட்டுப்பாட்டுச் செயலணியின் தலைவருமான சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

டெல்டா வைரஸ் திரிபு காரணமாக நாளை முதல் நாடு முடக்கப்படும் என்று சில ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன. அதேபோன்று மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்து நாளை திங்கட்கிழமையிலிருந்து தளர்த்தப்படும் என்றும் செய்திகள் வெளியாகியிருந்தன. இது தொடர்பில் இராணுவத் தளபதியைக் கேட்டபோதே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்துத் தடையை ஜுலை 5ஆம் திகதி திங்கட்கிழமையிலிருந்து நீக்குவதா? அல்லது தொடர்ந்து நீடிப்பதா? என்று நாளைய (இன்று) தினமே இறுதி முடிவெடுக்கப்படும்.

'டெல்டா' திரிபு வைரஸ் அபாயம் காரணமாக நாடு தழுவிய ரீதியில் பொது முடக்கம் வேண்டும் என்ற பரிந்துரையும் கொரோனாத் தடுப்புச் செயலணியிடம் முன்வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பிலும் ஆராய்ந்து வருகின்றோம்.

பொதுமுடக்கத்தால் மக்களுக்கு ஏற்படும் நன்மைகளையும் பார்க்க வேண்டும், பாதகங்களையும் பார்க்க வேண்டும். தற்போதைய நிலைமையில் பொது முடக்கம் அவசியமற்றது என்பது எனது தனிப்பட்ட கருத்தாகும்.

புதிய சுகாதார வழிகாட்டல்கள் மூலமும் 'டெல்டா' வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த முடியும். ஏனெனில் இந்தத் திரிபு வைரஸ் இன்னமும் சமூகத் தொற்றாக மாறவில்லை. மக்கள் அனைவரும் சுகாதார வழிகாட்டல்களை உரியவாறு கடைப்பிடித்து சமூகத்தின் நன்மை கருதி பொறுப்புணர்வுடன் செயற்பட்டால் அனைத்து வைரஸ்களையும் நாட்டிலிருந்து விரட்டியடிக்கலாம், என்றார். (ம-ஒ,5,22)

## மேல்...

வைரஸால் பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து எடுக்கப்பட்ட மாதிரிகள் குறித்த பரிசோதனை அறிக்கை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் நேற்று ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதிலேயே 13 பேருக்கு 'டெல்டா' வைரஸ் திரிபு உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. சிறி ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை மற்றும் நோய் எதிர்ப்பு மற்றும் நுண் உயிரியல் துறை இந்தப் பரிசோதனைகளை மேற்கொண்டது.

கடந்த வாரம் எடுக்கப்பட்ட 141 மாதிரிகள் பற்றிய அறிக்கையே சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது என அதன் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி சந்திம ஜீவந்தர தெரிவித்தார். (ஒ,22)

## கொரோனா...

தாமதமான நிலையில்தான் உள்ளன என்று நாடாளுமன்ற உறுப்பினரான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பில் நேற்று இடம்பெற்ற உதவித்திட்ட நிகழ்வின் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் வாழ்வாதாரம் தற்போது இந்த கொரோனாப் பெருந்தொற்றாலும் பாதிக்கப்பட்டுள்ளது. இதுபோதாதென்று யாழ்ப்பாணம், கிளிநொச்சிப் பகுதிகளில் தமிழ் மக்களின் வாழ்வாதாரத்தைச் சுரண்டும், பறித்தெடுக்கும் நடவடிக்கைகளில் சீன நாட்டவர்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். அவர்களிடம் இருந்து தம் பொருளாதாரத்தை காப்பாற்றுமாறு மக்கள் எம்மிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கொரோனா பெருந்தொற்றுக்கு எதிரான மீட்பு நடவடிக்கைகளுக்குப் பெருந்தொகை பணத்தை செலவிட்டுள்ளோம் என்று அரசு தெரிவிக்கின்றது. ஆனால் அந்தப் பணத்தில் வெறும் 5 சதவீதம்கூட வடக்குக்கு வரவில்லை என்பதுதான் உண்மை. எனவே அரசுக்கு உதவிகளை வழங்கும் தரப்புக்கள் அந்த உதவிகள் நாட்டு மக்கள் அனைவருக்கும் சமமாகப் பகிரப்படுகின்றதா என்பதை உறுதி செய்ய வேண்டும் -என்றார். (ம-19)

## புலிகளை...

வட்ஸ்அப் போன்ற சமூக ஊடகங்களில் பதிவுகளை எழுதியமைக்காக திருகோணமலையில் 24 வயதான இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார். திருகோணமலை பொலிஸ் பிரிவின் குற்றத் தடுப்பு பிரிவினரால் அவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

கைதான இளைஞன் முச்சக்கரவண்டிச் சாரதியாகப் பணியாற்றி வருபவர் என்றும் பொலிஸ் பேச்சாளர் குறிப்பிட்டார். (ம-ஒ)

## கடலட்டைப்...

ளிக்குடா மீனவர்கள் நேற்றுக் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

பள்ளிக்குடா கடற்கரைப் பகுதியில் இந்தப் போராட்டம் நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்டது.

மேற்படி கடலட்டைப் பண்ணை அனுமதிக்கப்பட்ட நியமங்களை மீறி அமைந்துள்ளது. அதனால் எங்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது. குறித்த பகுதிக்குச் சென்று மீன்பிடிக்க முடியாத நிலையும் காணப்படுகின்றது என்று போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் தெரிவித்தனர். (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
08 . 09 . 1956



மறைவு
04 . 06 . 2021

### அமரர் சுப்பிரமணியம் பவானந்தராசா

கடந்த 04.06.2021 அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் மரணச் செய்தி அறிந்து ஓடோடி வந்து இறுதிக்கிரியைகளுக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்த உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவருக்கும் அத்துடன் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த அன்புள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (04.07.2021) ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கும் அந்தியேட்டிக் கிரியைகளுக்கு அனைவரையும் அழைக்க முடியாமைக்கு மிகவும் வருந்துகின்றோம்.

பருத்தித்துறை வீதி
நல்லூர்

குடும்பத்தினர்
(குமரேஸ்வரி சுப்பிரமணியம் சகோதரி)

## 31ஆம் நாள் நினைவு அஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
03 . 09 . 1940



மறைவு
04 . 06 . 2021

### அமரர் திரு. சிதம்பரப்பிள்ளை குலசேகரம்

ஓய்வுநிலை பிரதி அதிபர் யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி

**திதி : அபரபக்க தசமி**

*ஐயா, நீங்கள் பட்ட வேதனைகள் கண்டு*
*உள்ளம் எல்லாம் குமுறுதையா ஏங்கித் தவிக்குதையா*
*எமக்கு அன்னையாய், தந்தையாய், ஆசானாய், ஆறுதல் தந்தீரே*
*அன்போடு அரவணைத்து ஆதரித்து வந்தீரே*
*சிட்டுக்குருவி போல சிதறடித்துப் பறந்த நீர்*
*சிறகொடிந்த பறவையாய் நித்தம் கலங்கி நின்றீரே*
*காலங் கடந்தோடி விட்டதையா - மாதமொன்று*
*ஆகியதோ மறக்கவில்லை உம் சிரித்த முகம்*
*இறுதி மூச்சதனில் எம் தோளில் சாய்ந்தீரே - இனி*
*என்னால் முடியாது எடுத்து விடும் என்னை என்றீர்*
*உம் குரல் கேட்டு இரங்கியதே உள்ளமது*
*எடுத்து விட்டான் ஒரு நொடியில் எம்மை இங்கு தவிக்க விட்டு*
*எங்கு நீர் சென்றாலும் எம்மை விட்டுப் பிரிந்தாலும்*
*சென்ற இடம் சிறப்புறவே சீர் பெற நீர் வாழ்ந்திடுவீர்*

**உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை வேண்டுகின்றோம்.**

அன்னாரின் பிரிவுச் செய்தி கேட்ட நேரம் முதல் எம் அருகில் இருந்து ஆறுதல்படுத்திய அன்பு உள்ளங்களுக்கும் தேவார, திருவாசகங்களை ஓதிப் பிரார்த்தித்தோருக்கும், மலர் வளையம், கண்ணீர் அஞ்சலி அனுதாபம் தெரிவித்தோருக்கும் இறுதிக் கிரியைக்கான சகல ஒழுங்குகளைச் செய்தோருக்கும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள், புலம்பெயர் உறவினருக்கும் சிறப்புற நடாத்திய அந்தணர் குருமாருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அல்லாரை வடக்கு,
கொடிகாமம்

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

## பொது அறிவித்தல்




### திரு. S. துஷானதன்

இல.04, பேரின்பநாயகம் ஒழுங்கை,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்
தேசிய அடையாள அட்டை இல: 862562828 V

இத்தால் எமது சகல வாடிக்கையாளர்களுக்கும் பங்குதாரர்களுக்கும் அறியத்தருவதாவது, மேற்படி படத்தில் விபரிக்கப்பட்டுள்ளவர் 16.02.2020 ஆம் திகதியிலிருந்து எமது சேவையில் இல்லை என்பதுடன் எம் சார்பில் எந்த விதமான வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடவோ பணங்கொடுக்கல் வாங்கல்களிலோ ஈடபட எந்த வித அதிகாரமும் இல்லை. இதன் பின்னர் இவரால் அல்லது இவருடன் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு நாம் பொறுப்பாளிகள் அல்ல.

**மஸ்கன்ஸ் பிரைவட் லிமிட்டட்**
த.பெ.இல. 826, இல 175,ஸ்ரீ சுமனதிஸ்ஸ மாவத்தை, கொழும்பு - 12.
தொலைபேசி இல. + 94 11 232 5561 - 3, + 94 11 234 4672,
ஃபெக்ஸ்: + 94 11 244 9537,
www.mascons.com




### நீங்களும் சட்டத்தரணி ஆகலாம்!!!

சட்டத்துறைக்கான ஒரு அங்கீகாரத்தைப் பெற வேண்டுமானால் எங்கள் IDM நிறுவனம் அதற்கான சந்தர்ப்பத்தினை வழங்கவுள்ளது. இத்துறையில் 08 வருட அனுபவத்தைக் கொண்டதாக எமது நிறுவனம் காணப்படுகின்றது. வெட்டுப்புள்ளி அடிப்படையில் சட்டத்துறைக்கான அனுமதி கிடைக்காத மாணவர்கள் எமது நிறுவனத்தின் ஊடாக சட்டத்தரணி ஆவதற்குரிய அனைத்து வழிகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் உடைய பட்டப்படிப்பு சான்றிதழைப் பெற்றுக்கொள்ளலாம். இலங்கையில் நம்பிக்கையான, தரம் வாய்ந்த கல்விச் சேவையினை வழங்கி பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட சட்ட வல்லுநர்களை உருவாக்கிய பெருமை IDM Nations Campus ஐ சாரும். உரிய காலத்தில் சட்டமாணி பட்டப்படிப்பை முடித்து சட்டக்கல்லூரி நுழைவினைப் பெற்றுக்கொள்ளலாம்.

**இணையவழியின் (Online) ஊடாகவும் நேரடியாகவும் வகுப்புக்கள் நடைபெறும்.**

**அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் உங்கள் விண்ணப்பங்களுக்கு இன்றே அழையுங்கள்.**

**தொடர்புகளுக்கு : 076 097 0955**

**IDM Nations Campus**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரையிறுதிக்குள் ஸ்பெய்ன்



மட்ரிட், ஜூலை 4

யூரோ கிண்ணத் தொடரில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் சுவிட்சர்லாந்தைத் தோற்கடித்து அரையிறுதிக்குள் நுழைந்தது ஸ்பெய்ன்.

ஆட்டத்தின் 8ஆவது நிமிடத்தில் சுவிற்சர்லாந்து வீரர் டெனிஸ் சக்கரியா ஒன்கோல் பதிவுசெய்ய ஸ்பெய்ன் அணி முன்னிலை பெற்றது.

வேறெந்தக் கோலும் முதல் பாதியில் பதிவாகவில்லை. முதல் பாதியின் முடிவில் 1:0 என்று ஆதிக்கம் செலுத்தியது ஸ்பெய்ன்.

இரண்டாவது பாதியின் 68ஆவது நிமிடத்தில் சாகுரி கோலைப் பதிவுசெய்ய கோல் கணக்கு 1:1 என்று சமநிலையானது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோலையே பெற்றிருந்தன. மேலதிக நிமிடங்களிலும் கோல் கணக்கில் மாற்றமில்லை. இதனால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. பெனால்டியில்வைத்து 3:1 என்ற கோல் கணக்கில் வென்றது ஸ்பெய்ன்.

(ம)


## மருந்தாளர் தேவை

புதிதாக ஆரம்பிக்கவுள்ள மருந்தகம் ஒன்றிற்கு (Pharmacist) மருந்தாளர் தேவை சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு 077 081 2893

## Vacancy

Work from Home (Accounts) Female, Data Entry, Waiter, Salesman, Salesgirl, Designer

074 138 3368 dewmasweb.com

## வீடு வாடகைக்கு

யாழ் மாநகர சபைக்கு உட்பட்ட முருகேசர் வீதியில் சகல வசதியும் உடைய வீடு வாடகைக்கு விடப்படவுள்ளது.

தொடர்பு : 076 434 4254
077 143 5795

## பணிநிலை வெற்றிடம்

Photoshop, Designing, Typing
மிகவும் திறம்படத் தெரிந்த பெண்கள் எமது நிறுவனத்திற்கு தேவை.
காலை 9.30 - 4.00 வரை
எமது நிறுவனத்திற்குத் தொடர்பை ஏற்படுத்தி சமூகம் தரவும்

தொடர்பு : G.N Printer
T.P : 077 031 2313, 072 474 1687, 077 017 2701
28A பிறவுன் வீதி, கலட்டி யாழ்ப்பாணம்.
( தொழில்நுட்பக் கல்லூரிக்கு முன்பாக )

## வகுப்புகள்

க.பொ.த. உயர்தர உயிரியல் மற்றும் பௌதிகவியல் பாடங்கள் தனிப்பட்ட முறையிலும் குழுவாகவும் Zoom ஊடாகவும் கற்பிக்கப்படும்.

T.P -076 6867 099, 076 4989 961

## வகுப்புகள்

க.பொ.த. தொழிற்நுட்பப் பிரிவுக்குரிய தொழில்நுட்பத்திற்கான விஞ்ஞானம் தனிப்பட்ட முறையிலும் குழுவாகவும் Zoom ஊடாகவும் கற்பிக்கப்படும்.

T.P -077 074 7906

## Individual English Classes

Grade 7 - பட்டதாரிகள், English Medium Courses செய்பவர், தொழில் புரிவோர், அடிப்படையில் இருந்து.

Ganesh BA 077 766 8725 Jaffna.

## English Classes

Zoom மூலம்
Gr - 05 To O/L
Grammar with syllabus

T.P.No : 077 331 4608

## அந்தியேட்டி சேவை

அமரர் கிரியை, அந்தியேட்டி கிரியை செய்வதற்கு தொடர்பு கொள்ள வேண்டியது.

077 230 5789
074 061 8739

## கடைகள் விற்பனைக்கு

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை முன்பாக உள்ள காணியில் அமைய உள்ள மூன்று கடைத் தொகுதிகள் விற்பனைக்கு உண்டு.

K.S. அஜித்குமார்
K.S.Y. அம்பாள் கட்டட ஒப்பந்தகாரர்

077 47 47450

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெருவில் இயங்கிக் கொண்டிருக்கும் பாமசி & சிறு பிள்ளைகளுக்கான விளையாட்டுப் பொருட்கள் விற்பனை செய்யும் நிலையத்திற்கு வேலைக்கு ஆட்கள் தேவை. பாமசியில் பணிபுரிவதற்கு முன்னனுபவம் அவசியம்.

தொடர்புகளுக்கு
021 221 3223, 076 264 8766

## ஒலிம்பியாட் வகுப்புக்கள்

தரம் 6 - 9 வரையான மாணவர்களிற்கான ஒலிம்பியாட் மற்றும் கணித போட்டிகளிற்கான தயார்படுத்தல் வகுப்புக்கள் Zoom ஊடாக நடைபெற்றுக் கொண்டுள்ளது.
மேலதிக தகவலிற்கு தொடர்பு கொள்ளவும்

Mr. S. Tharshan சனி 8.30 - 9.30p.m
077 454 0529 ஞாயிறு 8.30 - 9.30p.m
(Whatsapp)

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு உட்பட்ட ஓட்டுமடம் சந்தி மானிப்பாய் வீதியில் 1 ஆம் ஒழுங்கையில் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும். யாழ் நகரிலிருந்து 1½ km தூரம் (பரப்பின் விலை 5 லட்சம் ரூபா)

தொடர்பு: 076 221 2037, 076 734 1023, 077 064 2661


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில் 29 . 11 . 1946



விண்ணில் 04 . 06 . 2021

கடந்த 04.06.2021 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தவலைவர்

### அமரர் சிதம்பரன் திருஞானசிவம்

சிதம்பரன் களஞ்சியம் (கைதடிச் சந்தி) உரிமையாளரும்
ஓய்வு பெற்ற நீர்ப்பாசனத் திணைக்கள உத்தியோகத்தரும்

அவர்களின் சிவபதப் பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் வெள்ளிக்கிழமை 02.07.2021 அதிகாலை 5.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (04.07.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் மறைவுச் செய்தி அறிந்து நேரில் வருகை தந்தும் தொலைபேசி வாயிலாகவும் சமூக வலையத்தளங்களினூடாகவும் ஆறுதல் கூறியவர்களுக்கும் அனுதாபச் செய்திகள் தெரிவித்தவர்களுக்கும் உணவு வழங்கியவர்களுக்கும் மற்றும் எம் பெருந்துயர் வேளையில் பல்வேறு வழிகளில் பேருதவிகள் புரிந்த அனைத்து உற்றார். உறவினர்கள். நண்பர்கள் மற்றும் அன்பான ஊர்மக்கள் அனைவருக்கும் எமது சிரம் தாழ்ந்திய நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

திருத்தணிகை,
கைதடி சந்தி, கைதடி

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம் 31 . 10 . 1936



மறைவு 17 . 06 . 2021

### சங்கரி கந்தசாமி

யாழ்ப்பாணம் திருநெல்வேலியை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சங்கரி கந்தசாமி (முன்னாள் CN 822 வாகன உரிமையாளர்) கடந்த (17.06.2021) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரி சின்னத்தங்கத்தின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான நாகமுத்து அன்னலக்ஷ்மி தம்பதியரின் அன்பு மருமகனும், இராசம்மாவின் அருமைக் கணவரும், சுதாகர் (France) அமரர் கிரிஜா (ராஜினி) ஆகியோரின் ஆசை அப்பாவும், ஜெயந்தியின் (நந்தினி - France) பாசமிகு மாமனாரும், காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் குணரத்னம் (CTB), சிவானந்ததேவி, நித்தியானந்ததேவி, மல்லிகாதேவி, நவரட்ணம் (Mechanic) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ரோஜினி (இந்தியா), இளந்தீபன் (கண்ணன்-France), சுதர்சிகா, சுவேதன், அஸ்விகா (France) ஆகியோரின் அன்பு மிகு பேரனும், ரேவந்தின் (இந்தியா) அருமைப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.07.2021) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

சுதாகர் (மகன்) - 0033651314093
0094762645480
கண்ணன் (பேரன்) - 0033782033415
0725275890
நவரட்ணம் (சகோதரர்) - 0778116535

தகவல்:
குடும்பத்தினர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.07.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பசில் வந்திட்டால் பஞ்சம் பறந்து போகுமென்று
விசிலடிச்சான் கூட்டமொன்று விதந்தோதிட – பசியால்
பரிதவிப்போரை மீட்க வழியேதும் தேடாமல்
பரிசுகெட்டத்தனமாக காசை அச்சடிக்கும் அறிவைப் பார்!
– ஒட்டுக்குழு சுவாமிகள்

பக்கங்கள்: 16

# சஞ்சீவி

Registered as a Newspaper

மலை 33: ...ள்ளுவர் ஆண்டு : 2052 | ஆனி: 20 | ஞாயிற்றுக்கிழமை (04.07.2021) | சிகரம் : 54






# அருண்டவன் கண்களுக்கு இருண்டதெல்லாம் சீனா?

○ நிலாந்தன்

வடமராட்சி கிழக்கில் வீதித் திருத்தப் பணிகளில் ஈடுபட்டிருந்த மங்கோலிய முகச்சாயலைக் கொண்ட ஒருவரைக் கண்ட சுமந்திரன் அவரைச் சீனர் என்று கருதி ருவிற்றரில் ஒரு குறிப்பைப் பதிவிட்டிருந்தார். உள்நாட்டில் வீதித் திருத்த பணிகளிலும் சீனர்கள் வேலைக்கமர்த்தப் படுகின்றனர் என அந்தப்பதிவில் உள்ளது. ஆனால் அவர் சீனர் அல்லர் கிழக்கை சேர்ந்த ஒரு முஸ்லிம் என்பது தெரியவந்ததும், சுமந்திரன் தான் வெளியிட்ட தகவலுக்காக வருத்தம் தெரிவித்திருந்தார். மேலும் கொழும்பில் உள்ள சீனத் தூதரகம் சுமந்திரனுக்கு ஒரு பதில் குறிப்பையும் பதிவிட்டிருந்தது.

வழமையாகத் தான் என்ன கதைக்கிறேன் என்பதை நன்கு சிந்தித்து பிடி கொடாமல் கதைக்கும் சுமந்திரன் இந்த விடயத்தில் அவசரப்பட்டு ஏன் அப்படியொரு குறிப்பை ருவிற்றரில் போட்டார்? சீனர்கள் நாடு முழுவதும் பரவிவிட்டார்கள் என்ற பிரமை அவருக்கு ஏற்பட்டுள்ளதா? ஒரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினருக்கு அவ்வாறு ஒரு பிரமை ஏற்படக் காரணம் என்ன? கௌதாரிமுனை கிராமசேவகர் பிரிவுக்குள் வரும் கல்முனை பந்தலடி என்ற பகுதியில் அமைந்திருக்கும் கடலட்டைப் பண்ணையில் சீனர்கள் காணப்பட்டமையும் அதற்கு ஒரு காரணமா?

அந்தக் கடலட்டைப் பண்ணை பற்றிய விவரத்தை முதலில் வெளிப்படுத்தியது கிளிநொச்சியைச் சேர்ந்த ஒரு செய்தியாளர்தான். அப்பகுதியில் சீனர்கள் கடந்த இரண்டரை மாதங்களாக கடலட்டை வளர்ப்பில் ஈடுபட்டு வருவது தொடர்பான தகவல்கள் அந்தச்செய்தியாளருக்கு கிடைத்தன. மீனவர் சங்கத்தின் சில முக்கியஸ்தர்கள் சீனர்களோடு இணைந்து செயற்படுகின்றனர் எனவும் சந்தேகிக்கப்படுகிறது. தனக்குக் கிடைத்த தகவலை உறுதிப்படுத்துவதற்காக கல்முனை பந்தலடிக்கு மேற்படி செய்தியாளர் சென்றிருக்கிறார். அங்கிருந்த சீனர் கடல் வழியாகப் படகின் மூலம் அந்த இடத்தை விட்டு நீங்கிச் செல்வதை கண்டிருக்கிறார். அந்த படகில் கியூலன் (Guilan (Pvt) Ltd )பிரைவேட் லிமிடெட் என்று எழுதப்பட்டிருக்கிறது.

அரியாலை கிழக்கில் ஏற்கனவே இயங்கி வரும் கடலட்டைக் குஞ்சுகளை உற்பத்திசெய்யும் பண்ணையிலிருந்து அவர்கள் படகுகள் மூலமாகவே கல்முனை பந்தலடிக்கு வந்து போகிறார்கள். ஊடகங்களில் அந்த இடம் கௌதாரிமுனை என்று குறிப்பிடப்பட்டாலும் அது கல்முனை பந்தலடி என்பதே சரி.கல்முனைக் கடலில் வெற்று பிளாஸ்டிக் பரல்களை பரப்பி அவற்றின்மீது குடில் ஒன்றை அமைத்து சீனர்கள் அதில் தங்கியிருக்கிறார்கள். அவர்கள் பூநகரிப் பகுதியூடாக அதாவது தரை வழிப் பாதை ஊடாக அந்தப் பகுதிக்கு செல்வதில்லை. மாறாக கடல் வழிப் பாதை ஊடாக அரியாலை கிழக்கில் இருந்து அங்கே வருகிறார்கள். கல்முனை பந்தலடியிருந்து கிழக்கு அரியாலை இருபது நிமிடங்களுக்கு குறையாத கடற்பயணத் தூரம்.

அரியாலை கிழக்கில் ஏற்கனவே கடலட்டைக் குஞ்சு உற்பத்திப் பண்ணை ஒன்று இயங்கிவருகிறது. அந்தப் பண்ணை 2011ஆம் ஆண்டு ஒரு தென்னிலங்கையைச் சேர்ந்த சிங்களக் குடிமகனின் பெயரில் பதியப்பட்டுள்ளது. அவர்தான் 2018 இல் சீனர்களை அங்கே கொண்டுவந்தார். சீனர்களோடு தமிழர்களும் வேலை செய்கிறார்கள். முகாமையாளராக இருப்பவர் ஒரு தமிழர். உதவியாளர்களாகவும் தமிழர்கள் உண்டு. அந்தப் பண்ணை கடற்கரையில் ஒரு தனியாருக்கு சொந்தமான காணியில் அமைக்கப்பட்டிருக்கிறது. கடற்கரையில் 16 சீமெந்துத் தொட்டிகளை உருவாக்கி அந்த தொட்டிகளில் கடற் சூழலை செயற்கையாக ஏற்படுத்தி அதற்குள் கடலட்டைக் குஞ்சுகளை உற்பத்தி செய்கிறார்கள். இந்த கடலட்டைக் குஞ்சுகளைத்தான் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் உட்பட பெரும்பாலான கடலட்டை வளர்ப்பவர்கள் விலைக்கு வாங்குகிறார்கள். அந்தப்பண்ணையைத்தான் கல்முனை கடலை நோக்கி அவர்கள் விஸ்தரிக்க முயன்றனர் என கருதப்படுகிறது.

ஆனால் சம்பந்தப்பட்ட துறைசார் அதிகாரிகள் அதற்கு அனுமதி வழங்கவில்லை. அதைத்தொடர்ந்து கல்முனை பந்தலடி பகுதியைச் சேர்ந்த விநாயகர் கடற்றொழிலாளர் சங்கத்தின் பெயரால் இரண்டு ஏக்கர் காணியில் கடலட்டைப் பண்ணை ஒன்றை உருவாக்குவதற்கு பிரதேச செயலரிடம் அனுமதி கோரப்பட்டிருக்கிறது. எனினும் அனுமதி இதுவரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை. ஆனால் சீனர்கள் கடற்றொழிலாளர் சங்கத்தின் முக்கியஸ்தர்கள் சிலருடைய அனுசரணையோடு அங்கே கடலட்டை வளர்ப்பை தொடங்கிவிட்டார்கள் என்று கூறப்படுகிறது. 2009 க்குப் பின் கடந்த ஏழெட்டு ஆண்டுகளாக தமிழ்க் கடற்பகுதிகளில் கடலட்டை பண்ணைகள் அதிகரித்த அளவில் உருவாக்கப்பட்டு வருகின்றன. ஒரு கிலோ கடலட்டை (சுமார் 15 கடலட்டைகள்) கிட்டத்தட்ட 20,000 ரூபாவுக்கு போகிறது. இது சீனாவில் கிட்டத்தட்ட இரண்டு லட்சத்துக்கு விற்கப்படுமாம். இவ்வாறு உற்பத்திசெய்யப்படும் கடலட்டையில் பெரும்பகுதியை சீன நிறுவனங்களே கொள்வனவு செய்கின்றன.

அரியாலை கிழக்கில் சீனர்கள் தங்கியிருக்கும் பண்ணை அமைந்திருக்கும் இடம் யாழ். குடாநாட்டின் வரைபடத்தில் குடாக்கடலை நோக்கி துருத்திக்கொண்டு தெரியும் ஒரு நிலத்துண்டு ஆகும். அப்படித்தான் கல்முனைப் பந்தலடியும். பெரு நிலப்பரப்பிலிருந்து கடலை நோக்கி துருத்திக்கொண்டு தெரியும் ஒரு நிலத்துண்டு அது. இவ்விரண்டு நிலத்துண்டுகளிலும் நிலை கொண்டிருப்பவர்கள் குடாக் கடலின்மீதும் தமது கண்காணிப்பை வைத்திருக்கலாம்.

சர்ச்சைக்குரிய கடல் அட்டைப் பண்ணையில் இருந்து கிட்டத்தட்ட ஒன்றரை கிலோ மீற்றர் தொலைவில் ஒரு கடற்படை முகாம் உண்டு. கல்முனையில் இருந்து குறுக்காக கிட்டத்தட்ட 48 கிலோ மீற்றர் தொலைவில் நெடுந்தீவு காணப்படுகிறது. நெடுந்தீவில் இருந்து குறுக்காக ஏறக்குறைய 50 கிலோ மீற்றர் தொலைவிலேயே தமிழகம் காணப்படுகிறது. நெடுந்தீவு உட்பட யாழ். குடாநாட்டின் மூன்று தீவுகளில் சீனா மீளப் புதுப்பிக்கப்படும் எரிசக்தித் திட்டம் ஒன்றை நிறுவ இருக்கிறது. அதற்குரிய காணிகள் சுவீகரிக்கப்பட்டு வேலியிடப்பட்டு அவற்றில் " இது மின்சார சபைக்கு சொந்தமான இடம். இதற்குள் யாரும் நுழையக்கூடாது" என்று அறிவித்தல்

15





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அ.நிக்ஸன்



# டில்லிக்கான அமெரிக்க நிதியுதவியும் ஈழத்தமிழர்களும்!

சீனா - ரஷ்ய நட்புறவு ஒப்பந்தம் மேலும் ஐந்து வருடங்களுக்கு கடந்தவாரம் புதுப்பிக்கப்பட்டுள்ள நிலையில், சீனாவுடன் தொடர்ச்சியாக மேற்கொள்ளவுள்ள வர்த்தக செயற்பாடுகள் மற்றும் இராணுவ உதவிகள் தொடர்பாக பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் 'குளோபல் ரைம்ஸ்' என்ற சீன ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு சென்ற புதன்கிழமை கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

சீனா - பாகிஸ்தான் வர்த்தக உடன்படிக்கையின் (China Pakistan Free Trade Agreement CPFTA) பிரகாரம் வர்த்தகச் செயற்பாடுகளை விரிவாக்குவது குறித்தும் அந்தக் கடிதத்தில் இம்ரான் கான் கூறியிருக்கின்றார் என்று 'குளோபல் ரைம்ஸ்' தனது ஆசிரியர் தலையங்கத்தில் கூறியுள்ளது.

இந்தவொரு நிலையில் இந்தியாவில் ஜம்மு விமானப்படை தளத்தில் ட்ரோன்கள் மூலம் 27 ஆம் திகதி தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதல் பாகிஸ்தானிலிருந்து நடத்தப்பட்டது என இந்தியா குற்றம் சுமத்தியுள்ளது.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமை அலுவலகத்தில் 'பயங்கரவாதத்தால் உலகம் சந்திக்கும் சவால்கள்' என்ற தலைப்பில், கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கருத்தரங்கில் உரையாற்றிய இந்திய மத்திய உள்துறை அமைச்சின் உள்நாட்டுப் பாதுகாப்புக்கான சிறப்பு செயலாளர் வி.எஸ்.கே. கமுடி, பாகிஸ்தான்மீது இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளார்.

### சீனாவை மறந்த இந்தியா

அதேவேளை, கிழக்கு லடாக்கின் எல்லையில் இந்தியாவும், சீனாவும் பரஸ்பரம் தத்தம் படைகளை, கடந்த ஏழு மாதங்களுக்கு மேலாக நிறுத்தி வைத்துள்ளன. இன்னமும் இந்தப் படைகள் விலக்கப்படாத நிலையில், மற்றுமொரு எல்லைப் பகுதியான ரேசாங்க் லா, ரேசின் லா, முகோஸ்ரி ஆகிய பகுதிகளில், சீனா சென்ற புதன்கிழமை முதல் 35 பீரங்கிகளை தயார்நிலையில் நிறுத்தி வைத்துள்ளது என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஆனால் ஐ.நா.வில் உரையாற்றிய கமுடி, தப்பித்தவறியும் இந்திய- சீன எல்லைப் பிரச்சினை குறித்து பிரஸ்தாபிக்கவில்லை. ஜம்மு விமானப்படை தளத்தில் நடந்த தாக்குதலுக்கு மாத்திரமே பாகிஸ்தான் மீது அவர் வசைபாடியிருந்தார்.

நவீன தொழில்நுட்பங்கள் தவறான செயல்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றன எனவும் இதற்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் எச்சரிக்கை விடுத்த கமுடி, பாகிஸ்தான் மீது ஐ.நா. தடைவிதிக்க வேண்டும் என்ற தொனியில் கருத்துக்களை முன்வைத்திருக்கிறார்.

ஏனெனில் அமெரிக்கா, பாகிஸ்தான் இராணுவத்துக்கு 2004 ஆம் ஆண்டில் இருந்து வழங்கிவந்த நிதியுதவியை 2018 ஆம் ஆண்டு நிறுத்தியது. எனினும் அந்த நிதியுதவியை ஜோ பைடன் தலைமையிலான அமெரிக்கா இந்த ஆண்டு வழங்குமென பாகிஸ்தான் நம்பியிருந்தது. ஆனால் ஜோ பைடன் நிர்வாகமும் அந்த நிதியை நிறுத்தியுள்ளது.

ஜோ பைடனின் இந்தச் செயற்பாட்டில் நம்பிக்கை வைத்து பாகிஸ்தான் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற தொனியில் கமுடி ஐ.நா.வில் பேசியிருக்கலாம். 2004 ஆம் ஆண்டு பாகிஸ்தானைக் கூட்டாளி நாடென காங்கிரஸில் அதிகாரபூர்வமாக அறிவித்த அமெரிக்கா, தற்போது பாகிஸ்தான் சீன உறவு நெருங்கி வருவதாலேயே அந்தக் கூட்டாளி உறவைக் கைவிடும் நிலைக்கு வந்துள்ளது. ஆனாலும் இந்தோ- பசுபிக் பிராந்திய விவகாரத்தில் அமெரிக்க நலன்சார்ந்து இந்தியாவோடு இன்னும் பேரம் பேச வேண்டிய தேவையிருப்பதால், பாகிஸ்தானைக் கூட்டாளி உறவில் இருந்து விலக்குவதாக அதிகாரபூர்வமாக காங்கிரஸில் அறிவிக்காமல் அமெரிக்கா இழுத்தடிக்கிறது.

### இந்தியாவை நெருங்கும் அமெரிக்கா

ஏனெனில் ரஷ்யா சீனாவுடன் உறவைப் பேணும் உடன்படிக்கையில் கடந்த வாரம் கைச்சாத்திட்டாலும், இந்தியாவுடனும் உறவைப் பேண ரஷ்யா கடந்த பல ஆண்டுகளாக விரும்புகின்றது. ஆனால் ரஷ்யாவோடு இந்தியா உறவைப் பேண அமெரிக்கா விரும்பவில்லை. இதன் காரணத்தாலேதான் பாகிஸ்தான் இராணுவத்துக்கு அமெரிக்கா நிதியுதவியை அப்போது வழங்கியதெனலாம்.

ஆனால் டொனால்ட் ட்ரம்ப்பின் காலத்தில் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியுடன் இருந்த நெருக்கமான உறவினால் 2018 ஆம் ஆண்டு அந்த நிதியுதவி நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. எனினும் ஜோ பைடன் நிர்வாகமும் அந்த நிதியை வழங்காமல் மேலும் அந்தத் தடையை நீடித்திருக்கிறது.

பயங்கரவாதத்துக்கு எதிரான செயற்பாடுகளில் பாகிஸ்தானிடம் மாற்றம் இருப்பதாகத் தெரியவில்லையெனவும் அதனால் இராணுவ நிதியுதவி நிறுத்தத்தை இந்த ஆண்டும் தொடர முடிவு செய்யப்பட்டுள்ளது எனவும் அமெரிக்க இராணுவத் தலைமையகமான, பென்டகனின் செய்தி தொடர்பாளர் ஜான் கிர்பி கடந்த வாரம் கூறியிருக்கிறார்.


ஆக இந்தோ- பசுபிக் பிராந்தியத்தில் இந்தியாவின் உறுதியான பங்களிப்பு உள்ளிட்ட பல்வேறு அணுகுமுறைகளில் இந்தியாவுடனான உறவு மேலும் நெருக்கமாக வேண்டுமென அமெரிக்கா விரும்புவதையே இது காட்டுகின்றது. ஆனாலும் 2009 ஆம் ஆண்டு மே மாதத்துக்குப் பின்னரான சூழிலில் ஈழத்தமிழர் விவகாரத்தில் இந்தியாவைக் கடந்து அமெரிக்கா இலங்கையோடு நேரடியாக உறவைப் பேண வேண்டுமென்ற சிங்கள ஆட்சியாளர்களின் உணர்வுக்கும் அமெரிக்கா மதிப்பளித்திருப்பதை சமீபகால நகர்வுகள் கோடிகாட்டுகின்றன.

### இலங்கையும் சீனாவும்

சீன- ரஷ்ய உறவு, சீன - பாகிஸ்தான் உறவு என்பவை வளர்ச்சியடைந்து வரும் நிலையில், அதன் நீட்சியாக சீன - இலங்கைப் பொருளாதார மற்றும் கலாசார உறவுகளும் நாளுக்கு நாள் புதுப்பிக்கப்படுகின்றன. எதிர்க்கட்சிகள் மற்றும் பௌத்த குருமார் அதற்கு எதிர்ப்பு வெளியிட்டாலும், இலங்கையின் ஒற்றையாட்சித் தன்மை மற்றும் பௌத்த மரபுகள் பேணப்பட்டவொரு நிலையிலேயே சீன -இலங்கை உறவு பலமடைய வேண்டுமென எதிர்க்கட்சிகள் அறிவுரை கூறுகின்றன.

இதன் பின்னணியில், கோத்தாபய ராஜபக்சவின் ஆட்சி மாறினாலும் சீன -இலங்கை உறவுக்குத் தடையிருக்காதென்பது கண்கூடு. ஆகவே தமிழ்த்தேசியக் கட்சிகள் இலங்கையில் அதுவும் வடக்கு, கிழக்கில் சீன ஆதிக்கம் அதிகரித்து வருகின்றன என கூறி சீனாவுடன் பகைமையைச் சம்பாதித்து விடக்கூடாதென்பதையே மேற்படி புவிசார் அரசியல் சூழல் கற்பிக்கின்றது.

ஏனெனில் இந்துமா சமுத்திரத்தில் தன்னையும் அங்கத்துவ நாடாகச் செயற்கையான முறையில் வடிமைத்து நிறுவிக் காண்பித்துள்ள சீனாவுடன், இந்தியா உலகில் முதன்மையான பொருளாதார உறவை வளர்த்துள்ளது.



இந்திய அயல் நாடுகளான நேபாளம், பாகிஸ்தான், பங்களாதேஷ், மாலைதீவு மற்றும் இலங்கை போன்ற நாடுகளில் பொருளாதாரத் திட்டங்களைப் பலப்படுத்தியுள்ள சீனா தனது முக்கியத்துவம் வாய்ந்த துறைமுகங்களை சர்வதேச வர்த்தகத்துக்குப் பயன்படுத்தவும் அனுமதியளித்துள்ளது.

ரஷ்யாவுடன் மேலும் ஐந்து ஆண்டுகளுக்குச் சீனா கைச்சாத்திட்டுள்ள ஒப்பந்தத்தில், ஆசிய நாடுகளில் வர்த்தகச் செயற்பாடுகளுக்கும் இராணுவ மூலோபாயங்களுக்கும் எந்த அடிப்படையில் ஒத்துழைப்பு வழங்குவதென்பது குறித்த விடயங்கள் உள்ளடங்கியிருப்பதாக குளோபல் ரைம்ஸ் என்ற சீன ஆங்கில செய்தித் தளம் கூறுகின்றது.

இதன் காரணத்தினாலேதான் அவசர அவசரமாக இலங்கையில் கூடுதல் முதலீடுகளை மேற்கொள்ளும் பேச்சுக்களை இலங்கை முதலீட்டுச் சபையோடு ஜூன் மாதம் ஒன்பதாம் திகதியில் இருந்து இந்தியா உரையாடி வருகிறது.

இலங்கையில் சீன முதலீடுகளை இந்தியா ஒருபோதும் எதிர்க்காதென இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் கடந்த [illegible] மாதம் கொழும்பில் வைத்துக் கூறியிருந்தார்.

ஆனால் சீனாவின் ஆளுகைக்குள் இலங்கையின் இறைமை செல்வதை அனுமதிக்க முடியாதெனவும் அவர் அடித்துக் கூறியிருந்தார். இதே கருத்தையே அமெரிக்காவும் வெளியிட்டிருக்கிறது. இலங்கையின் இறைமை ஆள்புல ஒற்றுமை பாதுகாக்கப்பட வேண்டுமென அமெரிக்காவின் முன்னாள் இராஜாங்க செயலாளர் மைக் பொம்பியோ கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் கொழும்பில் வைத்து வலியுறுத்தியிருந்தார். அதாவது சீனாவிடம் இலங்கை அரசு முழுமையாக அடிபணிந்து விடக்கூடாதென்ற எச்சரிக்கையும், ஈழத்தமிழர்களும் இலங்கை ஒற்றையாட்சிக்குள் அரசியல்தீர்வை ஏற்க வேண்டுமென்ற கோணத்திலுமே மைக் பொம்பியோ அவ்வாறு கூறியிருந்தார் என்பதை எவரும் புரிந்து கொள்ள முடியும்.

ஆகவே 2009 ஆம் ஆண்டுக்கு மே மாதத்துக்குப் பின்னரான பூகோள மற்றும் புவிசார் அரசியல் அணுகுமுறையில், இலங்கை சீனாவிடம் அதிகளவு கடன்களை பெற்றாலும், அதிகளவு பொருளாதாரத் திட்டங்களுக்கு சீனாவுக்கு முன்னுரிமை கொடுத்தாலும் அமெரிக்காவுக்கு அது பிரச்சினை அல்ல.

### அள்ளி வழங்கப்படும் உதவிகள்

ஆனால் இந்தோ -பசுபிக் பாதுகாப்பு விவகாரத்தில் அமெரிக்க - இந்தியா நலன் சார்ந்து இலங்கை நிற்க வேண்டுமென்ற அழுத்தங்களும் அதற்கேற்ப ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை குறித்த பேச்சுக்களை அப்படியே கைவிட்டுவிடுகின்ற போக்கையுமே அமெரிக்கா தற்போது கையாளுகின்றது. இதே உத்தியைத் தான் இந்தியாவும் கடந்த மாதத்தில் இருந்து கையாள ஆரம்பித்திருக்கின்றது.

அடுத்த வாரம் இந்தியப் பெறுமதியில் 307 கோடி ரூபாவை கொரோனாத் தடுப்பு செயற்பாட்டுக்காக அமெரிக்கா வழங்கவுள்ளது. இது தொடர்பாக அமெரிக்காவின் சர்வதேச மேம்பாட்டு அமைப்பு சென்ற புதன்கிழமை வெளியிட்ட அறிக்கையில் ஏற்கனவே 150 கோடி ரூபா வழங்கப்பட்டது எனவும் இந்த ஆரம்ப உதவி அமெரிக்க - இந்திய உறவுக்கு வலுச்சேர்க்குமென்றும் கூறப்பட்டுள்ளது. அமெரிக்க ஆதரவுடன் கடந்த ஆண்டு மே மாதம் இரண்டு பில்லியன் அமெரிக்க டொலர் நிதியை உலக வங்கி வழங்குவதாக உறுதியளித்தது. அதில் ஒரு பில்லியன் வழங்கப்பட்டிருக்கிறது. இந்தியாவுக்கு கடந்த ஆண்டு ஏப்ரல் ஆறாம் திகதி ரூ.21.75 கோடி நிதியுதவியை அமெரிக்காவும் வழங்கியிருந்தது. கடந்த 16 மாதங்களில் ரூ.44.25 கோடி நிதியுதவி அமெரிக்காவால் வழங்கப்பட்டிருக்கிறது. கொரோனா தடுப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளுக்காக இந்த உதவி வழங்கப்பட்டதென புதுடில்லியில் உள்ள அமெரிக்கத் தூதுவர் கூறியிருந்தார். ஆனால், சென்ற ஜூன் மாதம் ஜி7 மாநாட்டில் இந்தியாவுக்கு அதிகளவு நிதியை வழங்குவதென அமெரிக்கா எடுத்த முடிவு இந்தோ -பசுபிக் பாதுகாப்பை நோக்கமாகக் கொண்டது.

ஆகவே இந்தோ - பசுபிக் விவகாரம் அமெரிக்க - சீன மோதலாகவே மாறியுள்ளது. சீன- இந்திய மோதல் வெறுமனே எல்லைப் பிரச்சினை மாத்திரமே. இதனால் தமிழ்த்தேசியக் கட்சிகள் இந்த நகர்வுகளை அறிவுபூர்வமாக உணர்ந்தே கருத்துக்களை வெளியிட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"பயங்கரவாதத் தடைச்சட்டம் ஹிட்லரின் ஆட்சிக்கு வழிவகுக்கும். அத்துடன் 1979 டிசம்பர் 31 க்கு முன் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு காலக்கெடு விதித்துள்ளமை ஹிட்லர் யூதர்களை ஒழிப்பதற்கு காலக்கெடு விதித்தமைக்கு ஒப்பானது" மைத்திரிபால சேனநாயக்க



# எதிர்க்காததன் எதிரொலி!

○ ந.பரமேஸ்வரன்

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசாங்கம் பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்க வேண்டுமென தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. சர்வதேச மன்னிப்புச்சபை உட்பட பல்வேறு மனித உரிமை அமைப்புகள் பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கவேண்டுமென இலங்கை அரசாங்கத்தை நீண்டகாலமாக வலியுறுத்தி வருகின்றன. அமெரிக்க காங்கிரசிலும், இலங்கை அரசாங்கம் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கவேண்டுமென தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஐரோப்பிய ஒன்றியம் பயங்கரவாததடைச் சட்டம் நீக்கப்படாவிட்டால் தாம் ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகையை ரத்துசெய்யப்போவதாக அறிவித்துள்ளது. இதையடுத்து பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு ஜனாதிபதி கோத்தாபய உடனடியாகவே வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் ஒரு குழுவை நியமித்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் பல்லாயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு பல்வேறு சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இன்னும் பலர் தொடர்ந்து எதுவித விசாரணைகளுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். பலர் மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் தொடர்ந்தும் சிறைகளில் வாடுகின்றனர். பலர் மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இந்தக் கொடிய பயங்கரவாதத் தடைச்சட்டம் 1979 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆரால் கொண்டுவரப்பட்டது. அப்போது நாடாளுமன்றில் இருந்த தமிழ்ப் பிரதிநிதிகள் என்ன செய்தார்கள் என்பது பற்றி வாசகர்கள் அறிந்துகொள்வது அவசியம். பயங்கரவாதத் தடைச்சட்டம் அறிமுகமான போது இடதுசாரிகள், இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம் (MIRJE) என்பன பயங்கரவாதத் தடைச்சக்சட்டத்துக்கு எதிராக வீதியில் இறங்கிப் போராடின. அருட்தந்தை போல் கஸ்பேர்ஸ் (Paul Casperz) இந்தப் போராட்டங்களுக்குத் தலைமை தாங்கினார்.

தமிழ் இளைஞர்களின் ஆயுதப்போராட்டம் கருக்கட்டிய காலம் என்று இந்தக் காலப்பகுதியைச் சொல்லலாம். வடபகுதியிலிருந்து பயங்கரவாதத்தை பூண்டொடு ஒழிக்கப் போகிறேன் எனக் கூறியே ஜே. ஆர் இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்தார். இந்த கொடிய பயங்கரவாதத் தடைச்சட்டம் நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது அப்போது எதிர்க்கட்சியாக இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. ஆனால் அப்போது இந்தச் சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்த ஒரேயொரு நாடாளுமன்ற உறுப்பினர் மைத்திரிபால சேனநாயக்க மட்டுமே. பயங்கரவாத தடைச்சட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றிய மைத்திரிபால சேனநாயக்க பின்வருமாறு கூறினார்.

"இந்தச் சட்டம் ஹிட்லரின் ஆட்சிக்கு வழிவகுக்கும். அத்துடன் 1979 டிசம்பர் 31 க்கு முன் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு காலக்கெடு விதித்துள்ளமை ஹிட்லர் யூதர்களை ஒழிப்பதற்கு காலக்கெடு விதித்தமைக்கு ஒப்பானது" ஆனால் வடக்கு கிழக்கிலிருந்து 22ஆசனங்களைப் பெற்று தமிழ்மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் நாடாளுமன்றம் சென்று எதிர்க்கட்சி பதவியை அலங்கரித்த தமிழர் விடுதலைக் கூட்டணி பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்காமல் நாடாளுமன்றத்திலிருந்து வெளிநடப்புச் செய்தது. வாக்கெடுப்பு நடப்பதற்கு முன்னர் அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினரான அமிர்தலிங்கத்தை சந்தித்தார் ஜே.ஆர். ஜெயவர்த்தன. அதன்போது " இந்தச் சட்டத்தை எதிர்த்தால் உடனடியாக நாடாளுமன்றத்தைக் கலைத்து சர்வசன வாக்கெடுப்பை நடத்துவேன்" என்று மிரட்டினார் எனவும், அதனாலேயே தமிழர் விடுதலைக் கூட்டணி பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு எதிராகக் குரல் கொடுக்கவில்லை என்றும் கூறப்படுகின்றது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்காமல் விட்டதன் மூலம் தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ் மக்களுக்கு துரோகமிழைத்திருந்தது. இப்போது ஆனந்த சுதாகரன் உள்ளிட்ட அரசியல்கைதிகளின் பிள்ளைகள் அநாதைகளாக அலைவதற்கும் இன்னும் பல தமிழர்கள் பல்வேறு இன்னல்களை அனுபவிப்பதற்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் காரணமாக இருந்துள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டம் நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது தமிழர் விடுதலைக் கூட்டணி எதிர்ப்பு தெரிவித்திருந்தாலும் அது நாடாளுமன்றத்தில் இலகுவாக நிறைவேற்றப்பட்டிருக்கும். ஏனென்றால் ஐக்கிய தேசியக் கட்சியிடம் அப்போது ஆறில் ஐந்து பெரும்பான்மைபலம் இருந்தது' என யாராவது வாதிடக்கூடும். ஆனால் இங்கே முக்கியமான விடயம் என்னவென்றால் பயங்கரவாதத் தடைச்சட்டம் நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது, எதிர்க்கட்சி பதவியை அலங்கரித்த தமிழர் விடுதலைக் கூட்டணி இந்தச் சட்டம் தமிழர்களின் ஆயுதப்போராட்டத்தை ஒடுக்கும் நோக்குடன் கொண்டுவரப்படுகிறது என்று தெரிந்தும் அதை எதிர்க்காமல் விட்டதுதான்.

மூன்று மாத காலத்துக்குள் பயங்கரவாதத்தை (தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை) பூண்டோடு ஒழிக்கப்போகிறேன் எனக் கூறியே ஜே.ஆர் பயங்கரவாத தடைச்சட்டத்தை கொண்டுவந்ததுடன் பிரிகேடியர் லலித் வீரதுங்கவுக்கு விசேட அதிகாரங்களை வழங்கி யாழ்ப்பாணத்துக்கும் அனுப்பினார்.



அப்போது நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்த வீரசிங்கம் ஆனந்தசங்கரி, இராஜவரோதயம் சம்பந்தன் ஆகியோர் இப்போதும் உயிருடன் இருக்கின்றனர். இந்த கொடிய பயங்கரவாத தடைச்சட்டம் நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது அப்போது எதிர்க்கட்சியாக இருந்த தமிழர் விடுதலைக்கூட்டணி எதற்காக எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என தமிழர் விடுதலைக் கூட்டணியின் தற்போதைய தலைவர் வீரசிங்கம் ஆனந்தசங்கரியிடம் கேட்டபோது "அது கட்சியின் தீர்மானம் .கட்சி எடுத்த முடிவுக்கு கட்டுப்படவேண்டியது கட்சி உறுப்பினர்களின் கடமை" என பதிலளித்தார்.

இருபதாவது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்டபோது முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அதனை எதிர்க்கவில்லை. ஆனால் அப்படி எதிர்க்காமல் விட்டதன் பயனை இன்றளவும் தமிழ், முஸ்லிம் மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். ■

**பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்காமல் விட்டதன் மூலம் தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ் மக்களுக்கு துரோகமிழைத்திருந்தது. இப்போது ஆனந்த சுதாகரன் உள்ளிட்ட அரசியல்கைதிகளின் பிள்ளைகள் அநாதைகளாக அலைவதற்கும் இன்னும் பல தமிழர்கள் பல்வேறு இன்னல்களை அனுபவிப்பதற்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் காரணமாக இருந்துள்ளது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களே! நீங்களும் உங்கள் கைவண்ணங்கள், ஆக்கங்களை அனுப்பலாம்..

அனுப்ப வேண்டிய முகவரி!
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555

# உழைப்பே அதிர்ஷ்டம் தரும்



ஒரு விவசாயிக்கு வயது அதிகமானதால் இறக்கும் தருவாயில் இருந்தார். தம் பிள்ளைகள் பொறுப்பில்லாமல் இருப்பதை பற்றி கவலையாக இருந்தார். ஒரு நாள், அவர் தம் பிள்ளைகளை அருகில் அழைத்தார். தன்னுடைய நிலங்களை அவர்களுக்குப் பிரித்துக் கொடுத்தார். அது மட்டுமல்லாமல், அந்தநிலங்களில் ஓரிடத்தில், ஓரடி ஆழத்தில் புதையல் இருப்பதாகச் சொன்னார். அதைத் தேடி எடுத்துக்கொள்ளும்படி சொல்லிவிட்டு இறந்துபோனார்.

பிள்ளைகள் மூவரும் தந்தைக்குச் செய்ய வேண்டிய இறுதிக் காரியங்கள் அனைத்தையும் செய்தார்கள். அதன்பின், அவர் குறிப்பிட்ட புதையலை எடுப்பதற்காக நிலத்தைத் தோண்ட ஆரம்பித்தார்கள்.

முதலில் மூத்த மகனின் நிலம் முழுவதையும் ஒரு அடி ஆழத்துக்கு தோண்டினார்கள். புதையல் எதுவும் கிடைக்கவில்லை. ஒருவேளை, அப்பா "இரண்டடி" என்று சொல்வதற்கு பதிலாக "ஓரடி" என்று சொல்லிவிட்டாரோ என்ற சந்தேகத்தில் பிள்ளைகள் மூவரும் சேர்ந்து, மூத்தவனின் நிலத்தை இன்னும் ஓரடி ஆழமாகத் தோண்டினார்கள். அப்போதும் அவர்களுக்குப் புதையல் கிடைக்கவில்லை.

எப்படியும் புதையலைக் கண்டுபிடித்து விட வேண்டும் என்ற வெறியில், இரண்டாவது மகனின் நிலத்தையும் இரண்டடி வரை தோண்டினார்கள். ஏமாற்றம்தான் மிஞ்சியது.

'இவ்வளவு தூரம் வந்தபின் எப்படி விட முடியும்' என்று கடைசி மகனின் நிலத்தையும் இரண்டடி தோண்டினார்கள். மறுபடியும் ஏமாற்றமே!

அப்பா மேல் வருத்தம் வந்தாலும், அவர்கள் 'சரி.. தோண்டியது வீணாக வேண்டாம்' என்று எண்ணி, அந்த நிலங்களில் விதை விதைத்தார்கள். நீர் பாய்ச்சினார்கள். உரம் போட்டார்கள். உழைப்பு வீண் போகுமா? ஆண்டு முடிவில் அவர்கள் நிலத்தில் அமோக விளைச்சல். அறுவடை செய்து விற்றதில் அவர்களுக்குக் கொள்ளை லாபம். இப்படி உழைப்பால் வரும் பயனைத்தான் அப்பா 'புதையல் என்று குறிப்பிட்டார் என்று பிள்ளைகள் மூவரும் புரிந்து கொண்டனர்.






# பழமொழிகள்

1. அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது.
2. அலை மோதும் போதே தலை முழுகு.
3. ஆறின கஞ்சி பழங்கஞ்சி.
4. உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
5. சிறுதுளி பெரு வெள்ளம்.
6. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.
7. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.
8. போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து.
9. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.
10. விளையும் பயிரை முளையிலே தெரியும்.

**ஷஸ்டிகா.செந்துராஜ்**
அங்கத்துவ இலக்கம் 140
யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

# பொது அறிவு

1. பூச்சி இனங்களில் அறிவு மிக்கது?
**எறும்பு**

2. உலகில் அதிக அளவில் கப்பல் போக்குவரத்து நடைபெறும் இடம்?
**பனாமா கால்வாய்**

3.திரவத்தங்கம் என்றழைக்கப்படுவது –**பெற்றோலியம்**.

4. தபால்தலையை (ஸ்டாம்ப்) வட்ட வடிவமாக வெளியிட்ட நாடு?
**மலேசியா**

5.உடலில் இரத்தம் பாயாத பகுதி?
**கருவிழி**

6.உலகின் மிகப்பெரிய உயிரியல் பூங்கா?
**அமெரிக்காவிலுள்ள 'டொராண்டோ உயிரியல் பூங்கா'**

7.வரிக்குதிரை மட்டும் காணப்படும் கண்டம் எது?
**ஆப்பிரிக்கா கண்டம்**

8.ஆண்டுக்கு 365 நாள்கள் என்ற கலண்டர் முறையை முதலில் பயன்படுத்தியவர்கள்?
**எகிப்தியர்**

9.ஈபிள் ரவரின் உயரம்?
**300 அடி**

# பிஞ்சு தூரிகைகள்



**எஸ்.யாதவி,**
தரம்- 9
யா/ சாவகச்சேரி
இந்துக் கல்லூரி.




**கு. அபிநாஷ்**
யா/மகஜனாக்கல்லூரி
தெல்லிப்பளை
2023 A/L

# வழிகாட்டுவோம்



## எண்களை இணைத்து படம் வரைவோம்



# வாழை



வாழை, முக்கனிகளில் ஒன்று. உலகில், மர வகை தாவர வரிசையில் முதலில் தோன்றியது. செவ்வாழை, மொந்தன், பேயன், பச்சைநாடன், பூவன், ரஸ்தாளி என பல ரகங்கள் உள்ளன.

வாழைப் பழத்தில்...
* ஐந்து வகை விற்றமின் சத்துக்கள்
* கார்போஹைட்ரேட்
* பாஸ்பரஸ்
* பொட்டாசியம் ஆகிய சத்துக்கள் அதிகம் உள்ளன. ஒரு வாழை மரம் வைத்தால், பக்கத்தில் கன்றுகள் தோன்றும். அதனால் தான், சுப காரியங்களில் வீட்டு வாசலில் வாழையால் அலங்கரிப்பர். வாழை இலை, பூ, காய், தண்டு, பழம் என, அனைத்தும் உணவுப் பொருளாகின்றன. வாழைப்பூ, சர்க்கரை நோயை கட்டுப்படுத்துகிறது. வயிற்றில் புண் வராமலும் தடுக்கிறது. வாழைத் தண்டு, சிறுநீர்ப்பையில் தங்கும் கற்களை கரைக்கிறது, பித்த நீரை கட்டுப்படுத்துகிறது. மலச்சிக்கலையும் போக்குகிறது. உடலுக்கு தேவையான பல்வேறு சத்துக்களை தருகிறது வாழைப்பழம். வாழை இலையில் உணவு உண்டால் நோய் தடுப்பு ஆற்றல் பெருகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கி.பி அரவிந்தன்

# இனி...

தேன் கூடு

ம.பா. மகாலிங்கசிவம்

கடந்த இரு வாரங்களாக தேன்கூட்டில் தம்து கிராமத்தை இழந்த தமிழ், முஸ்லிம் கவிஞர்களின் துயரம் தோய்ந்த கவிதைகளைப் பார்த்தோம். இன்றைய தேன்கூட்டில் தனது வீட்டை இழந்துபோன தமிழ்க் கவிஞர் ஒருவரின் ஏக்கத்தை,வலியை காண இருக்கின்றோம்.

எலி வளையானாலும் தனி வளை வேண்டும் என்பது தமிழ்ப் பழமொழி. மிகச்சிறியதாக என்றாலும் ஒவ்வொருவருக்கும் தனித்து வாழத் தனியான வீடு அவசியம் என்பதை இம் முதுமொழி உணர்த்துகின்றது. வீடு என்பது மண்ணாலோ கல்லாலோ கட்டப்பட்ட வெறும் சடப்பொருள் அன்று .

அது ஒவ்வொருவரதும் வாழ்க்கையுடன் வளர்ச்சிப் பருவங்களுடனும் பின்னிப் பிணைந்தது. கூலி வேலைக்காரருடன் இணைந்து ஒவ்வொரு கல்லாக தாம் சுமந்து வந்து எப்படி வீட்டை படிப்படியாக கட்டி முடித்தோம் என கண்களில் கனவு விரியம் பல நாள்களாக விவரிக்கும் எத்தனையோ முதியவர்களை பார்த்திருக்கின்றேன். இத்தகைய வீட்டைப் போர் விமானங்களின் குண்டுவீச்சால் இழந்துபோவது என்பது தாங்கக் கூடிய விடயமா? வீடிழந்த தாங்க முடியாத துயரத்தை வெளிப்படுத்தும் கி.பி அரவிந்தனின் 'இனி' என்னும் கவிதை இன்றைய தேன்கூட்டில் இடம்பெறுகின்றது.

ஒரு நொடி;
ஒரு கணம்;
ஓரிமைப் பொழுது.
கண் மூடித்திறப்பதற்குள்
அது நிகழ்ந்தது.

குத்தென
சாய்ந்து சரிந்து
சட்டென
மேலெழ நிமிர்கையில்
எச்சமிட்டது.

யார் தலையில் விடியுமோ?
கண்களை உரசும்
சூரியத் தெறிப்பு;
முகிலுக்குள் மறையும்
உயிர்கொத்திப் பருந்து.

மனிதம் உறைந்து
உயிர்த்தது.

குடிமனைக்குள் போடுறானே
கோதாரியில் போவான்
கடவுளே....கண்ணில்லையா?

மண்ணை வாரி
வார்த்தைகளை விசிறி
காற்றைச் சபித்து.....
எங்கே
என் வீடு?
என் முற்றம்?
சின்னக் குருவிகள்
நம் வியர்வைக் குழையலில்
தொட்டிழைத்த கூடு;
தொப்புள் கொடியில்
பூத்த சிறுமலர்.
தத்தித் தத்தித்
தளிர்நடை நடந்து

விரித்த கனவுகளின் முற்றம்;
முற்றத்து விளிம்பில்,
மாலைக் காற்றுக்கு
மணம் சேர்த்த மல்லிகை;
காலை இளம் மலர்வுடன்
வணக்கம் சொல்லும் செம்பரத்தை ;
குலை தள்ளிக் கிடந்த
பச்சை வாழை;
எல்லாமே எல்லாமே
எங்குற்றது.....?
என்னவாயிற்று.....?

குண்டுகள்
சப்பித் தின்று
துப்பிய எச்சத்துள்
பால்மாப் பேணி
அலுமினியக் கோப்பை,
குழந்தையின் சூப்பி
எப்படித் தேட?
இந்தியச் சிப்பாயே
உனது நாட்களில்
என்னவாய் முனிந்தாய்?

ஆளுக்கொரு வீடு
வீட்டுக்கொரு கிணறு
கிணற்றுக்குள் தண்ணீர்....

வெந்து அவிந்து
பொசுங்கிக் கருகி
உடைந்து நொறுங்கி
சிதைந்து சிதிலமாய்ச்
சிதறிக் கிடக்குது.

எனக்கென்றொரு
வீடு;
இனி,
அதுவும் இல்லையென்றாயிற்று
இனி.......

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர் கி.பி அரவிந் தன். இவ்ரது இயற்பெயர் கிறிஸ்தோபர் பிரான்சிஸ். தமிழரின் விடுதலைப் போராட்டத்துடன் நெருங்கிய தொடர்புடையவர். புலம்பெயர்ந்து பாரிஸில் வசித்தவர் .

பி.பி.ஸி தமிழோசையின் பாரீஸ் நகர செய்தியாளராகப் பணியாற்றியவர்.

அப்பால் தமிழ் என்னும் இணையத்தளத்தை இயக்கியவர். சிறந்த கவிஞரான கி.பி அரவிந்தன் இனி ஒரு வைகறை, கனவின் மீதி, முகம் கொள் ஆகிய கவிதைத் தொகுதிகளையும் பாரிஸ் கதைகள் என்ற சிறுகதை நூலையும் வெளியிட்டவர்.

கி.பி அரவிந்தனின் பெரும்பாலான கவிதைகளைப் போலவே இக் கவிதையும் படிமங்கள் நிறைந்த நெஞ்சக்கிறையோடு தொடங்குகின்றது .

ஒரு நொடி
ஒரு கணம்
ஓரிமைப்பொழுது
கண்மூடித் திறப்பதற்குள்
அது நிகழ்ந்தது
குத்தெனச்
சாய்ந்து சரிந்து
சட்டென
மேல நிமிர்கையில்
எச்சமிட்டது
யார் தலையில் விடியுமோ?
கண்களை உரசும்
சூரிய தெறிப்பு
முகிழரண் மறையும்
உயிர் கொத்திப் பருந்து

என வீட்டின் மீது குண்டு வீசிய விமானம் உயிர் கொத்திப் பருந்தாகவும் குண்டு பருந்தின் எச்சமாகவும் படிமம் கொள்கின்றன. குண்டு வெடிக்கும் போது ஏற்படும் தீப் பிழம்பு கண்களை உரசும் சூரிய தெறிப்பாக கவிஞருக்கு தோன்றுகின்றது. விமானத் தாக்குதலை தடுப்பதற்கான எந்தவித ஆயுதங்களும் இல்லாத ஆற்றாமை பொதுமக்களிடம் எதிரியின் பரம்பரையையே அழிக்கக்கூடிய சாப வார்த்தைகளாக உருக்கொள்கின்றன. குடிமனைக்குள் போடுறானே கோதாரியிலை போவான். கடவுளே கண்ணில்லையா என மண்ணைவாரி வார்த்தைகளை விசிறி காற்றைச் சபிக்கும் தமிழ்ப் பண்பாட்டின் ஒரு நிலை இங்கு காட்சிப்படுத்தப்படுகிறது.

குண்டு வீச்சால் இடிந்துபோனது வெறும் கற்களால் ஆன கட்டிடம் அன்று. ஒரு குடும்பத்தின் நினைவுகள் கனவுகள் அனைத்தையும் சுமந்த வாழ்வுடன் ஒன்றித்த உணர்வுக் குவியல்.

சின்னக் குருவிகள்
தம் வியர்வைக் குழையலில்
தொட்டிழைத்த கூடு
தொப்புள் கொடியில்
பூத்த சிறுமலர்
தத்தித் தத்தித்
தளிர் நடை நடந்து

விரித்த கனவுகளின் முற்றம். குடும்பக் கூடு இங்கு குருவிக் கூடாகவே படிமம் செய்யப்படுகிறது. சின்னக் குருவிகள் வியர்வை சிந்தி உழைத்ததன் பயனாகச் சேர்ந்தது. அந்தக் குருவிகளின் சிறு குஞ்சு, பூத்த சிறுமலர் தத்தித் தத்தித் தளிர் நடை நடந்த இடம். குருவிக் குடும்பத்தின் கனவுகள் யாவுமே விரித்து வைக்கப்பட்டிருந்த முற்றம். மாலை நேரத்தின் மகிழ்வான பொழுதுகளுக்கு மணம் சேர்த்த மல்லிகை அனைத்தையுமே இழந்த துயரம் கவிதையில் வெளிப்படுகிறது. குண்டுகள் சப்பித்துப்பிய எச்சத்துள் அவர்கள் பயன்படுத்திய பழைய பொருள்களை நினைவுகளை எப்படித் தேட முடியும் எனக் கவிஞர் ஆற்றாமையுடன் வினாவுகின்றார்.

“இந்தியச் சிப்பாய்
உனது நாட்களில்
என்ன வாய் முனிந்தாய்?
ஆளுக் கொரு வீடு
வீட்டுக் கொரு கிணறு
கிணற்றுக்குள் தண்ணீர்....!

என்னும் அடிகள் சிந்தனைக் கிளறலை ஏற்படுத்துகின்றன. குண்டு வீசி வீட்டை அழித்தது இலங்கை இராணுவம். இவர் இதற்காக இந்திய இராணுவத்தை விளிக்கிறார். இதற்கு பின்புலமாக மிகச்சுவையான வரலாற்றுப் பின்புலம் உள்ளது. வறிய, வரண்ட பிரதேசங்களிலிருந்து வந்த இந்திய இராணுவத்தினர் வடபகுதித் தமிழர்கள் வளமாக வாழுவதைக் கண்டு பொறாமைப்பட்டனர். கேரளா, கர்ஷ்மீர் பகுதிகளை நினைவூட்டும் செழிப்பான நிலம். ஒவ்வொரு குடும்பத்துக்கும் தனித்தனியான வீடு. நீண்ட தூரம் குடங்களுடன் அலைந்து இந்தியாவைப் போல நீர் பெறுகின்ற நிலைக்குப் பதிலாக ஒவ்வொரு வீட்டிலும் நீர் நிறைந்த கிணறு இவ்வளவும் இருக்க உங்களுக்கு என்ன குறை? எதற்காக போராடுகிறீர்கள் எனக் கோபத்துடன்-இந்திய இராணுவத்தினர் கேள்வி கேட்ட வரலாற்றுச் சம்பவுங்கள் இதன் அடியில் பதிந்துள்ளன.

“ஒரு நாட்டில் வாழுகின்ற ஓர் இனத்திலுள்ள ஓர் அகதியின் அவலத்தை இனத்தின் அவலமாக நாட்டின் அவலமாக உலகின் அவலமாகக் காட்டுகின்ற திறமை அரவிந்தனுக்கு கைவந்தது" எனப் பேராசிரியர் கா. சிவத்தம்பி கனவின் மீதி கவிதைத் தொகுதி முன்னுரையில் கூறுகின்றார். இவ்வகையில் எனக்கென்றொரு வீடு இனி அதுவும் இல்லை என்றாயிற்று" என்ற வீடிழந்த தமிழனின் துயரம் தமிழனின் துயரமாக மட்டுமன்றி இஸ்ரேலின் குண்டு வீச்சால் வீடுகளை இழந்த பாலஸ்தீனியனின் துயரமாகவும் மாறுகின்றது. இவ்வாறான நிலை பேராசிரியர் கா. சிவத்தம்பியின் கூற்றின் பொருத்தப்பாட்டை ஏற்கின்றது. அதுமட்டுமன்றி ஈழத்துத் தமிழ் இலக்கியம் உலக இலக்கிய வாசற்படிகளைத் தட்டத் தொடங்கியுள்ளது என்ற பேராசிரியரின் கருத்தும் இங்கு நிதர்சனமாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திரிகாவின் 'அரசியல் ரோபோ'!



மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக பதவி வகித்த காலப்பகுதியில் சுதந்திரக்கட்சியின் முக்கிய புள்ளியாகவும், அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராகவும் வலம்வந்தவர்தான் குமார வெல்கம. ராஜபக்சக்களுக்கு தூரத்துச் சொந்தமும்கூட.

மஹிந்த ராஜபக்சவைக் கைவிட்டு சு.க. உறுப்பினர்கள் பலரும், மைத்திரிபக்கம் தாவியபோதுகூட 'பல்டி' அடிக்காமல் மஹிந்தவுடன் இணைந்து கூட்டு எதிரணியை உருவாக்கினார். சுதந்திரக்கட்சியை பலப்படுத்தவும் முயற்சித்தார். எனினும், 2019 ஜனாதிபதித் தேர்தல் ராஜபக்சக்களையும், வெல்கமவையும் பிரித்தது.

இராணுவப் பின்னணியுடைய கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதி வேட்பாளராக பெயரிடப்பட்டதற்கு எதிராக போர்க்கொடி தூக்கிய வெல்கம, கூட்டு எதிரணியில் இருந்து வெளியேறினார். ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டணி அமைத்து சஜித்துக்கு ஆதரவு வழங்கினார்.

அதுமட்டுமல்ல சந்திரிகா அம்மையாருடன் மீண்டும் அரசியல் உறவுகளை ஏற்படுத்திக்கொண்டார். சுதந்திரக்கட்சியை மைத்திரியிடமிருந்து பிடுங்குவதற்காக தருணம்பார்த்து காத்திருக்கும் சந்திரிகா, வெல்கமவை அதற்கானதொரு அஸ்திரமாக பயன்படுத்திவருகிறார்.

'அபி ஸ்ரீலங்கா' (எங்கள் இலங்கை) எனும் அமைப்பை நிறுவியுள்ள வெல்கம ஏற்கனவே சு.கவின் கீழ்மட்ட அரசியல் செயற்பாட்டாளர்களை தன்பக்கம் இழுந்துவருகின்றார். அண்மையில் அதிரடி அறிவிப்பொன்றைக்கூட அவர் விடுத்தார்.

சந்திரிகா அம்மையாரின் 76 ஆவது பிறந்தநாள் நிகழ்வின் பின்னர், புதியதொரு அரசியல் இயக்கத்தை ஏற்படுத்துவது தொடர்பில் தகவல் வெளியிட்டார். சில கட்சிகளும், அமைப்புகளும் இதில் இணையவுள்ளன. இதன் பின்னணியில் சந்திரிகா அம்மையாரே செயற்படுகின்றார் என அரசியல் களத்தில் பேசப்படுகின்றது.

அதாவது சந்திரிக்காவின் அரசியல் நகர்வுகளை செயற்படுத்தும் அரசியல் ரோபோவாக வெல்கம தற்போது மாறியுள்ளார்.

# பஸிலின் பாவக்கதைகள்



இலங்கை அரசியல் களத்திலும், ஊடக மட்டத்திலும் கொரோனாவுக்கு அடுத்தபடியாக பரவலாக அடிபடும் பெயர்தான் பஸில் ராஜபக்ச என்பதுதான், தனிப்பட்ட பயணமொன்றை மேற்கொண்டு அமெரிக்கா சென்றிருந்த அவர் கடந்த 24 ஆம் திகதி நாடு திரும்பினார். பஸிலின் வருகைக்காக வழிமீது விழிவைத்து காத்திருந்த அவரின் சகாக்கள், அவரின் சாதாரண வருகையைக்கூட பிரதான செய்தியாக்கும் விதத்தில் அரசியல் நகர்வுகளை திறம்பட மேற்கொண்டிருந்தனர்.

குறிப்பாக "பஸில் ராஜபக்ச நாட்டில் இருந்திருந்தால் எரிபொருள்களின் விலையை அதிகரிப்பதற்கு இடமளித்திருக்கமாட்டார், அவர் வந்ததும் நிச்சயம் நிவாரணம் வழங்கப்படும்" எனவும் அறிவிப்புகளை விடுத்துவந்தனர்.

இப்போது பஸில் வந்துவிட்டார். தனிமைப்படுத்தல் காலம் நிறைவடைந்த பின்னர் மீண்டும் செயற்பாட்டு அரசியலை ஆரம்பிக்கவுள்ளார். அவருக்காக அமைச்சரவை கூட மறுசீரமைக்கப்பட்டு, பொருளாதார விவகார மற்றும் நிதி இராஜாங்க அமைச்சு பதவி கையளிக்கப்படவுள்ளது. பஸில் எம்.பியாவதற்காக மொட்டுக் கட்சி உறுப்பினர் ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை தியாகம் செய்யவுள்ளார். அத்துடன், நிதி இராஜாங்க அமைச்சராக செயற்படும் அஜித் நிவாட் கப்ராலிடமிருந்து அந்தப்பதவி பறிக்கப்பட்டு பஸிலிடம் ஒப்படைக்கப்படவுள்ளது. கப்ராலுக்கு மற்றுமொரு அமைச்சு பதவி காத்திருக்கின்றது.

பஸில் ராஜபக்ச பதவியேற்ற கையோடு பொருளாதார விவகார அமைச்சர் என்ற வகையில் மக்களுக்கான சில நிவாரணத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டாலும், சரிந்துள்ள பொருளாதாரத்தை ப்ஸிலால் மீட்க முடியுமா என்ற வினாவும் எழுகின்றது. அதற்காக அவர் பல வலிகளையும் சுமக்க வேண்டியேற்படும்.

அமைச்சர்களான விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார ஆகியோருக்கும், பஸிலுக்குமிடையில் நல்லுறவு இல்லை. எனவே, பஸிலால் முன்வைக்கப்படும் சில திட்டங்களை மேற்படி தலைவர்கள் எதிர்க்கக்கூடும், அதற்கு மொட்டுக் கட்சிக்காரர்கள் பதிலடி கொடுக்கக்கூடும். அதன்மூலம் அரச கூட்டணிக்குள் அவ்வப்போது பிரச்சினைகள் எழலாம். விமல் தரப்புக்கு சார்பான தேரர்களும் பஸிலை வெளுத்து வாங்கக்கூடும்.

தமிழ் பேசும் கட்சிகளை அரவணைத்துக்கொண்டு பயணிக்கக்கூடிய அரசியல் தலைவராக பஸில் கருதப்படுகின்றார். இதனால் சிங்கள தேசியவாத அமைப்புகளிடமிருந்தும் எதிர்ப்பலைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். சிலவேளை அத்தியாவசிய பொருள்களின் விலையை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டால் மக்கள் தரப்பில் இருந்தும் போர்க்கொடிகள் தூக்கப்படும். கட்சிகளுக்கான ஒதுக்கீடு, கூட்டணி உள்ளிட்ட அரசியல் சார்ந்த பிரச்சினைகளையும் சமாளிக்க வேண்டிய பொறுப்பு மொட்டுக் கட்சியின் ஸ்தாபகர் என்ற வகையில் பஸிலிடமே இருக்கின்றது.

இவ்வாறான அரசியல் நெருக்கடிகளுக்கு, பாவக்கதைகளுக்கு மத்தியில் பஸிலின் அரசியல் பயணம் வெற்றிநடை போடுமா என்பது கேள்விக்குறியே!

# அறிந்தும் அறியாமலும்

சுழியன்

## மஹிந்தவின் மச்சானா ரணில்?

அரசியலில் ராஜபக்சக்களுக்கும், ரணில் விக்கிரமசிங்கவுக்குமிடையில் 'டீல்' இருக்கின்றது என்ற குற்றச்சாட்டு நீண்டகாலமாகவே இருந்துவருகின்றது.

மஹிந்த ஆட்சியின்போது, ஐ.தே.க. தலைமைப் பதவியில் இருந்து ரணிலை நீக்குவதற்கு கட்சிக்குள் பல போராட்டங்கள் இடம்பெற்றிருந்தாலும் அவை எவையும் கைகூடவில்லை. சவால்களை ரணில் சமாளித்தார். மஹிந்தவின் ஆசியும் அவருக்கு இருந்தது என்றே சொல்லப்பட்டது.

சிறிகொத்தவுக்கு முன்னால் ரணிலுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு முயற்சி எடுக்கப்பட்டபோது, வீதி அபிவிருத்தி என்ற போர்வையில் அந்தப் போராட்டம் மஹிந்த அரசால் தடுத்து நிறுத்தப்பட்டது. இதைப்போல ரணிலைக் காப்பாற்றும் பல வேலைகளை மஹிந்த செய்திருந்தார்.

அதேபோல் நல்லாட்சியின்போது ராஜபக்சக்களை ரணில் பாதுகாத்தார். ரணிலின் தலையீட்டால்தான் மஹிந்தவின் மனைவியான ஷிராந்தி ராஜபக்சவிடம், சிஐடியினர் வீட்டுக்கு சென்று வாக்குமூலம் பெற்றனர். இதன்மூலம் ஷிராந்தி சி.ஐ.டியில் முன்னிலையாவது தடுத்து நிறுத்தப்பட்டது.

இருதரப்புக்குமிடையிலான அரசியல் 'டீல்' தொடர்பில் இப்படி பல தகவல்கள் அவ்வப்போது கசிவது வழமை. ஆனால் அண்மையில் மற்றுமொரு தகவலும் வெளியாகியுள்ளது. அதாவது ஷிராந்தி ராஜபக்ச, ரணில் விக்கிரமசிங்கவுக்கு தங்கை முறை, எனவே, மஹிந்தவின் மச்சான்தான் ரணில் என்ற உறவுமுறையை சிலர் வெளிப்படுத்தியுள்ளனர். ரணில் மீண்டும் நாடாளுமன்றம் வருவதற்குகூட மஹிந்தவே காரணம் எனவும் சொல்லப்பட்டது.

இந்நிலையில் மஹிந்தவின் மச்சானா? நீங்கள் என ஊடகர் ஒருவர் அண்மையில் ரணிலிடம் வெளிப்படையாகவே கேட்டார். நாட்டில் பல விக்கிரமசிங்கக்கள் இருக்கக்கூடும். அதனால் அவர்கள் எல்லாம் எமது உறவினர்களா? மஹிந்த எனது மச்சான் அல்லன். அந்த தகவல் பிழையானது என சிரித்தபடியே பதிலளித்தார்.

## வேட்டும் நோட்டும்!




மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாட் சம்பளமாக ஆயிரம் ரூபாவை பெற்றுக்கொடுப்பதற்கு தொழிற்சங்க பேதம் மறந்து மலையகத்திலுள்ள அனைத்து தொழிற்சங்கங்களும் போராடின. அதன் பலனாக தற்போது ஆயிரம் ரூபா கிடைத்திருந்தாலும் ஆயிரம் பிரச்சினைகளும் தலைதூக்கியுள்ளன. வழமையைவிடவும் தொழிலாளர்கள்மீது தொழில் சுமைகள் திணிக்கப்பட்டுள்ளதுடன், வேலை நாள்களும் குறைக்கப் பட்டுள்ளன.

தொழிலாளர்களுக்கு மட்டுமல்ல தொழிற்சங்கங்களுக்கும் ஆயிரத்தால் நெருக்கடி – தலையிடி – கஷ்ட காலம் என்றே கூறவேண்டும்.

ஆயிரம் ரூபா விடயத்தில் கம்பனிகளின் அழுத்தங்களுக்கு பணியாமல் தொழிற்சங்கங்கள் சமராடின. இதனால் தொழிற்சங்கங்களுக்கு எதிராக பழி வாங்கும் படலத்தை பெருந்தோட்டக் கம்பனிகள் கட்டவிழ்த்துவிட்டுள்ளன எனக் கூறப்படுகின்றது.

இதன்படி தொழிலாளர்களின் சம்பளத்திலிருந்து மாதாந்தம் சந்தாவை அறவிட்டு, தொழிற்சங்கங்களின் வங்கிக்கணக்கில் வைப்பிலிடும் நடைமுறையை கம்பனிகள் இடைநிறுத்தியுள்ளன. இனிமேல் தாம் அந்தப் பணியை செய்யப்போவதில்லை எனவும் அறிவித்துள்ளன. இதனால் வருமானம் முடங்கி, வழிதெரியாமல் தொழிற்சங்கங்கள் விழிபிதுங்கி நிற்கின்றன. மலையக தொழிற்சங்கங்களுக்கு தொழிலாளர்களின் சந்தா பணமே பிரதான வருமானம். நூற்றுக்கணக்கான அலுவலக பணியாளர்கள் உள்ளனர். அவர்களுக்கு சம்பளம், அலுவலக வாடகை என்பவையெல்லாம் சந்தா ஊடாகவே சமாளிக்கப்படுகின்றன. கடந்த இரு மாதங்களுக்கு மேலாக பாதி சம்பளமே பணியாளர்களுக்கு வழங்கப்படுகின்றது. இந்நிலையில் தொழிலாளர்கள் ஊடாக, சந்தாவை அறவிடுமாறு தோட்டக் கம்பனிகளுக்கு மனு கொடுக்கும் முயற்சியில் தொழிற்சங்கங்கள் இறங்கியுள்ளன.

தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா உரிய வகையில் கிடைப்பதில்லை. வேலை நாள்கள் குறைக்கப்பட்டுள்ளன. நாளொன்றுக்கான பெயருக்கு பறிக்கப்படும் கொழுந்தின் அளவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. மறுபுறத்தில் கூட்டு ஒப்பந்தமும் அமுலில் இல்லை. ஆக ஆயிரம் ரூபாவென்பது இஞ்சி கொடுத்து மிளகாய் வாங்கிய கதையாக மாறிவிட்டது.

## தப்புமா தலை?

வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்படும்போது ஆளுங்கட்சியிலுள்ள பஸிலின் சகாக்கள் எத்தகையதோர் அரசியல் முடிவை எடுப்பார்கள் என பலரும் கேள்வி எழுப்புகின்றனர்.

எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டதையடுத்து, அதற்கான பொறுப்பையேற்று வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில பதவிவிலக வேண்டும் என மொட்டுக் கட்சியின் செயலாளர் அதிரடியாக அறிக்கை விடுத்தார். இதற்கு கம்மன்பில பதிலடி கொடுத்தார். இதனால் அரச கூட்டுக்குள்ளும் குழப்ப நிலை உருவானது. இதனையடுத்தே பிரதான எதிர்க்கட்சியும் நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைத்தது. அதனை நிறைவேற்றிக்கொள்வதற்கான பெரும்பான்மை பலம் தம்வசம் இல்லாவிட்டாலும்கூட, அரசுக்குள் ஏற்பட்டுள்ள விரிசலை அதிகரித்து, கூட்டணியை உடைப்பதும் இதன் ஓர் நோக்கம். அதேபோல அரசின் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்துக்கும் விடுக்கப்பட்ட சவால்.

அரசுமீது மக்கள் கடும் அதிருப்தியில் உள்ளனர். இந்நிலையில் பிரிந்துநின்றால் அது ஆட்சி அதிகாரத்துக்கு ஆப்பாக மாறும் அபாயம் இருப்பதால், கம்மன்பிலவுக்கு எதிரான பிரேரணையை எதிர்க்கும் முடிவை பஸிலின் சகாக்கள் எடுத்துள்ளனர் எனக் கூறப்படுகின்றது. எனவே, எதிரணியால் முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை மண்கவ்வும். கம்மன்பிலவின் தலை தப்பும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆதவன்



சிறுகதை

# புது றோட்டு



உன்னைப் போல் ஒருவன்" திரைப்படத்தைப் பார்க்க தியேட்டர் சென்று நேற்று இரவு தாமதமாக படுக்கைக்குச் சென்றதனால் இன்று காலை நேரம் தாமதமாக எழும்பும் எண்ணத்துடன் படுக்கையில் அசதியுடன் புரள்கின்றேன். இந்த அசதியிலும் தேசிய விருதுகள் குவித்த இரு பெரும் நடிப்பு இமயங்கள் கமல்ஹாசன், மோகன்லால் இருவரதும் அசத்தலான நடிப்பும் நினைவுக்கு வந்து கொண்டிருந்தன. திடீரென வீட்டுக்கு வடக்குப் புறமான திசையிலிருந்து ஒப்பாரி போன்ற அழுகுரல்களின் சத்தம்.

"இஞ்சையப்பா, அங்காலே அழுகைச் சத்தம் கேட்குது, என்னெண்டு போய்ப்பார்த்துட்டு வாங்கோ" என பதற்றத்துடன் மனைவி கூறினாள். நானும் படுக்கையிலிருந்து எழுந்தோடி குரல் கேட்ட பக்கத்துக்குச் சென்றேன். சுந்தரம் வீட்டிலிருந்தே சத்தம் வந்து கொண்டிருந்தது. சுந்தரம் வீட்டுக்கு ஓடிப்போன எனக்கு, அங்கு கண்ட காட்சி நிலைகுலையச் செய்தது.

சுந்தரம் வீட்டின் வடகிழக்கு மூலையிலுள்ள மாமரத்தைச் சுற்றி ஒரே சனத்திரள். மரத்துக்கு கீழே யாரோ ஒருவர் படுத்திருக்க, அவரைச் சுற்றி ஆள்கள் பலரும் சூழ்ந்தி ருந்தனர். அந்தக்கூட்டத்துள் ஒருவனாக நானும் தலையை உட்புகுத்தினேன். சுந்தரத்தின் மனைவி தலையிலும் நெஞ்சிலும் அடித்து அழுகின்றாள். அவளருகே வெள்ளைத் துணியால் ஒரு உடல் மூடப்பட்டிருந்தது. சுந்தரத்தின் பிள்ளைகளும் தாயைச் சுற்றி வாடி வதங்கி அழுத வண்ணமே இருக்கின்றார்கள். வெள்ளைத் துணியால் போர்த்தப்பட்டிருக்கும் உடலின் நீளத்தைப் பார்க்கும் போது சுந்தரம் போல் தான் எனக்குத் தோன்றியது. நான் நினைத்தது சரிதான் என்பதை, அயலவர் கிட்டிணரின் வாய்ப் பேச்சு உறுதிப்படுத்தியது.

"விசர்ச்சுந்தரம் தூங்கிச் செத்துப்போனான்"

ஒரு குடும்பத்தலைவரின் இழப்பு என்றால் சொல்லவா வேண்டும். உற்றார், உறவினர்கள், அயலவர்கள் எல்லோரும் கூடி நின்று அழும்போதுள்ள வேதனையை யாரால் தான் தாங்க இயலும்? என்னாலும் அந்தக்காட்சிகளை பார்த்துக்கொண்டிருக்க முடியாத நிலையில் சற்று விலகிச் சென்று தொலைவில் உள்ளவர்களுடன் இணைந்துகொள்கின்றேன். ஒருவர் இயற்கையாக மரணம் எய்தினால் அடுத்த கட்டம் இறுதிச் சடங்கை எப்போது செய்வது என்பது பற்றியே அதிகம் கதைப்பார்கள். ஆனால் சுந்தரத்தின் மரண வீட்டில் அவனது இறுதி நிகழ்வு பற்றிக் கதைப்பதை விட அவன் ஏன் தற்கொலை செய்தான்? என்ற விடயமே எல்லோராலும் பேசப்படும் பொருளாக இருந்தது. ஒவ்வொருவரும் அதற்கான காரணங்களைத் தேடுபவர்கள் போல அவர்களது உரையாடல்கள் அமைந்திருந்தன. பெரும்பாலோனோர் கடன் நெருக்கடி காரணமாகவே சுந்தரம் தற்கொலை செய்தான் என தங்களுக்குள் கிசுகிசுத்தனர். உண்மையான காரணம் சுந்தரத்தைத் தவிர யாருக்குத் தெரியும்? என்று உரையாடுபவர்களும் அந்தக் கூட்டத்தில் இருந்தனர்.

குடும்பத்தினரின் கவலைக்குள் நாம் கதைக்கும் உரையாடல்கள் மேலும் அவர்களை கவலைக்குள்ளாக்கக்கூடாது என்று எண்ணி அமைதி காக்கும் என்னைப் போல ஒரு வகையினரும் அங்கு இருக்கத் தவறவில்லை. அந்தக் கூட்டத்தினுள் "நாளை காலை கோயில் கொடியேற்றம். ஆனால் சுந்தரத்தின் மரணச் சடங்கு குழப்பிவிடும் போலிருக்கே" என்றும் கவலைப்படுவோரும் அங்கே இருந்தனர். இன்று பிற்பகல் இறுதி நிகழ்வை நடத்தினால் நாளைய தினம் கோயில் கொடியேற்றத்தை சிறப்புற நடத்தலாம் என்பதே அவர்களின் குறிக்கோளாக இருந்தது. சுந்தரத்தின் பிள்ளைகளை விட அவனின் பெறாமக்கள் வயதில் மூத்தவர்களாக இருந்தமையால் அவர்களிடமே இறுதிச் சடங்கு பற்றி அநேகமானோர் கலந்துரையாடிக் கொண்டிருந்தனர். நானும் இறுதிச்சடங்கு நேரம் பற்றிய அறியும் ஆவலுடன் இருந்தேன். அயலில் ஒரு மரண வீடு நிகழும் போது அலுவலகத்துக்கு பொதுவாக நான் செல்வதில்லை. இன்றும் இதற்காக விடுமுறை எடுக்க வேண்டும். அத்துடன் காலை உணவும் இன்னும் அருந்தவில்லை. எனவே இறுதிச் சடங்கு நேரத்தை அறிந்தால் அதற்கேற்ற வகையில் என்னைத் தயார்ப்படுத்தலாம்.

சற்று நேரத்தில் பிற்பகல் 2 மணிக்கு இறுதிச்சடங்கு என்னும் உறுதிப்படுத்தப்பட்ட தகவல் கிடைத்தது. தகவலை உறுதி செய்த பின் அலுவலகத்துக்கு விடுமுறை அறிவிப்பதற்காகவும், காலை ஆகாரத்தை எடுத்துக் கொள்வதற்காகவும் எனது வீடு நோக்கி விரையலானேன்.

வீட்டுக்குள் குளிக்காமல் செல்லக்கூடாது. எனவே வாசலில் நின்ற வண்ணமே மனைவியை அழைத்தேன். சுந்தரத்தின் மரணம் காட்டுத்தீயாக ஊருக்குள் பரவிக் கொண்டிருப்பது எனது மனைவியின் நடத்தையிலும் உணர்ந்துகொண்டேன். "நில்லுங்கோ, தலைக்கு வார்க்க தண்ணீர் கொண்டு வாறேன்" என்ற வண்ணம் கிணற்றடியை நோக்கி மனைவி சென்றாள். தண்ணீருடன் திரும்பி வரும் போது "சுந்தரம் அண்ணை தூங்கியோ செத்தவராம்?" என்கின்றாள். "ஓம்" என்று தலையாட்டிவிட்டு தலையில் நீரை வார்த்துவிட்டுக் நீராடுவதற்காகக் கிணற்றடி நோக்கிச் சென்றேன்.

எந்த ஒரு மனிதர் என்றாலும் "இறந்துவிட்டார்" என்றால் அவர் மீதான நினைவுகள் எமக்குள் சுற்றி வருவதே இயல்பு. இது தவிர்க்க முடியாத ஒன்று. அது போலவே எனக்கும் குளிக்க ஆரம்பிக்கும்போதே சுந்தரத்தின் நினைவுகள் வந்து போகின்றன.

சுந்தரத்தை நான் முதன்முதலில் எங்கள் ஊரின் சனசமூகநிலையத்தில் தான் சந்தித்தேன். தினப்பத்திரிகை தவறாது படிக்கும் பழக்கமுள்ளவர்களில் சுந்தரமும் ஒருவர். பிரதேச சபை ஒன்றில் காவலாளியாகக் கடமையாற்றும் அவர் தன்னை ஒரு அறிவாளி என்று காட்டிக்கொள்வதில் வல்லவர். மற்றவர்களின் கருத்துக்கு எப்போதும் எதிர்க்கருத்துக் கூறுவதில் அவருக்கு அலாதியான பிரியம் . கோயில் கூட்டங்கள், சனசமூக நிலையக் கூட்டங்கள் என்றால் அதிக நேரமாக விதண்டாவாதம் செய்யும் குரல் என்றால் அது சுந்தரத்தின் குரலாகத்தானி ருக்கும். தான் சொல்லும் கருத்தை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகவும்,எப்பொழுதும் தன்னை உயர்வாக நினைத்து தனக்கு கௌரவக்குறைவு நிகழக்கூடாது என்பதற்காகவும் குரலை உயர்த்திப் பேசும் ஒரு கௌரவப் பேர்வழிதான் சுந்தரம். அரச ஊழியராக இருந்தபோதும் தனக்கு "வன்னி இடப்பெயர்வு நிவாரணம்" வழங்கவேண்டும் எனக் கோரியும், கிராம அலுவலர் அதனை வழங்காததால் அவரையும் திட்டித்திரிந்தவர்.

அவர் வீட்டுக்கு வடக்கு, தெற்கு இருபக்கமும் பாதைகள் உண்டு. அவர் வழமையாக வடக்கு வீதியைப் பாவிப்பதே வழமை. தெற்குப் பாதை சரிவர அமைக்கப்படாது மண் பாதையாகவே இருந்து வந்தது. அந்தப் பாதையைப் புனரமைத்தால் ஊரில் எல்லாப்பகுதியும் வீதிகளால் இணைக்கப்பட்டிருக்கும். அந்தப்பாதை குண்டும் குழியுமாக இருப்பதால் அதனை புனரமைத்து தருமாறு அந்தப்பாதையிலுள்ள மக்கள் சனசமூகநிலையம் ஊடாக கோரிக்கை விடுத்திருந்தனர். அந்தக்கோரிக்கையை சுந்தரம் பெரிதாக விரும்பவில்லை. இந்தக் கோரிக்கை பற்றி அறிந்த உடனேயே அந்தப்பாதைப்பக்கமாகவுள்ள தனது வேலி எல்லையை எவ்விதமாற்றம் செய்யாது இரவோடு இரவாக தனது பெறாமக்களின் உதவியுடன் மதிலாக மாற்றிய பெருமையும் சுந்தரத்துக்குண்டு. தெற்குபக்க பாதையில் உள்ள பொது மக்கள், சனசமூகநிலையத்தின் ஊடாக தொடர் முயற்சி செய்தமையால் அந்தப்பாதையை தார் இட்டு . தரமான வீதியாக மாற்றும் திட்டத்துக்கு வெற்றிகரமாக அனுமதி கிடைத்தது. இந்த அனுமதி கிடைத்ததும் பிரகாரம் சனசமூகநிலையத்தில் இந்தத் திட்டம் தொடர்பான முன்னாயத்தக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. எல்லோரும் புது றோட்டு போடுவது பற்றி தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்த, வழக்கம் போல சுந்தரம் அதை எதிர்த்துக் குரல் கொடுத்தார்.

"புதிய றோட்டு வேலைகள் ஆரம்பிக்க முன்னர் பாதை வழியே வசிக்கும் அனைவரும் தமது வேலி, மதில் எல்லைகளை உட்பறமாக எடுத்து புதிய றோட்டு விசாலமானதாக அமைப்பதற்காக ஒத்துழைக்க வேண்டும் " என்று சனசமூக நிலையத் தலைவர் சொல்லி முடிக்க முன்னரே வெகுண்டெழுந்த சுந்தரத்தார் " நான் ஒரு அடி கூட விட்டுக் கொடுக்க மாட்டேன்" என தலைவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். இடையிடையே தகாத வார்த்தைகளையும் கொட்டினார். இதற்கு இருவாரங்களின் பின் பாதையை மேற்பார்வை செய்ய வந்த தொழில்நுட்ப உத்தியோகத்தர் குழாமுடனும் சுந்தரத்தார் முரண்பட்டார். இவ்வாறான முரண்பாடுகளுடனும் றோட்டு வேலைகள் இருவாரங்கள் தாமதமானபோதும், ஒருவாறு ஆரம்பித்தன.

(11 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# அரசியல் கைதிகள் விடயத்தின் பின்ன

## கூட்டமைப்பு விட்ட தவறு: ஒத்துக்கொ

நேர்கண்டவர் : சங்கேதன்

**கே: 16 தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்துள்ளார் என்று அரசாங்கம் கூறுகின்றது. உண்மையில் இந்தக் கைதிகளின் விடுவிப்பை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?**

ப: 16 தமிழ் அரசியல் கைதிகளுக்குத் திடீரென ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கியமை பற்றி சொல்ல முன்னர் இதன் பின்னணியைப் பார்ப்பது அவசியம்.

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி 2009 ஆம் ஆண்டின் பின்னர் மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்து குரல் கொடுத்து வந்தது. இந்த நிலையில் 2020ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் பின்னர் வடக்கு, கிழக்கிலிருந்து நாடாளுமன்றத்துக்கு தெரிவுசெய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகள் மட்டுமின்றி வடக்கு, கிழக்குக்கு வெளியேயும் மலையகத்திலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசியல் கைதிகளின் விடுதலை விடயம் தொடர்பாக ஒரேகுரலில் தம் எண்ணத்தை வெளிப்படுத்தினர்.

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி நீண்ட காலமாக தமிழ்த் தலைமைத்துவங்களால் தொடர்ச்சியாக குரல் கொடுக்கப்பட்ட விடயம் வரவேற்கத்தக்க விடயம். எனினும் அதனைப்பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளாத அரசாங்கம், திடீரென 72 மணித்தியாலங்களுக்குள் 16 தமிழ் அரசியல் கைதிகளை பொது மன்னிப்பில் விடுதலை செய்துள்ளது. இதற்கு சர்வதேசத்தால் ஏற்படுத்தப்படுகின்ற பொருளாதார அழுத்தம் முக்கிய காரணம். அத்துடன் அரசாங்கம் தான் விடுதலைசெய்ய எதிர்பார்த்திருந்த சிங்கள அரசியல்வாதிக்கும் ( துமிந்த சில்வா) இந்தச் சந்தடியோடு பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்வதன் மூலம் தெற்கிலிருந்து வரும் எதிர்ப்புக்கள் பேசுபொருளாவதை தவிர்க்க திட்டமிட்டிருக்கலாம். இதனாலேயே திடீரென 16 தமிழ் அரசியல் கைதிகளும் பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்ற வாதமும் முன்வைக்கப்படலாம்.

ஐரோப்பிய நாடாளுமன்றத்தால் கொண்டுவரப்பட்ட பொதுப் பயன்பாட்டுக்கான விசேட 'ஜி.எஸ்.பி' சலுகையை இரத்துச்செய்யும் பிரேரணை கீழ்க் காணும் விடயங்களை முன்நிறுத்தி கொண்டு வரப்பட்டது

1. ஐரோப்பிய பாராளுமன்றத்தால் இலங்கைக்கு வழங்கப்படும் 'ஜி.எஸ்.பி' சலுகையை தற்காலிகமாக இடைநிறுத்தும் தீர்மானம்
2. மனித உரிமைகள் சட்டத்தரணி இயாஸ் இஸ்புல்லர், முன்னாள் பணிப்பாளர் ஷானி அபயசேகர தொடர்பிலான பிரேரணை
3. மிகக் கடுமையான பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இல்லாதொழித்தல்
4. அரசாங்கப் பதவிகளுக்கு இராணுவப்படையினரை நியமிக்கும் நடைமுறையை இல்லாதொழித்தல்

இலங்கை அரசாங்கம் மனித உரிமைகள் தொடர்பான சீர்திருத்த சட்டங்களை இயற்றுவதற்கு தொடர்ச்சியாகத் தவறியமை தொடர்பிலும் கடுமையான சட்டமான பயங்கரவாதச் சட்டத்தை இல்லாதொழிக்க தவறியமை தொடர்பிலும் இலங்கைக்கு ஜி.எஸ்.பி சலுகையை வழங்குவதை தற்காலிகமாக இடை நிறுத்தம் செய்வதற்கு ஐரோப்பிய நாடாளுமன்றம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. இந்தத் தீர்மானத்தால் 'ஜி.எஸ்.பி ' சலுகை அடிப்படையிலான ஏற்றுமதிகள் மூலம் இலங்கைக்கு 2.3 பில்லியன் யூரோக்கள் கிடைக்கப்பெறும். அத்தோடு ஐரோப்பிய யூனியனே இலங்கையின் இரண்டாவது பெரிய ஏற்றுமதி சந்தையும் கூட. அதனை இழந்தால் சமாளிக்க முடியாத பொருளாதார நெருக்கடி இலங்கையில் ஏற்படும்.தென் கிழக்கு ஆசியாவில் உள்நாட்டு உற்பத்தியில் இலங்கை இறுதியிடத்தில் உள்ளது .

அத்துடன் உள்நாட்டு யுத்தத்தின்போது நிகழ்ந்த கொடூரமான செயல்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்கத் தவறிய காரணத்தால், சர்வதேச அரங்கில் எழுந்த அழுத்தத்தின் நிமித்தம் ஐக்கிய அமெரிக்க நாட்டின் காங்கிரசில் கொண்டுவரப்பட்ட பிரேரணையும் இலங்கை அரசுக்கு சவாலாக அமைந்தமை போன்ற சர்வதேச அழுத்தங்களும் கைதிகள் விடுதலைக்கு காரணங்களாகலாம்.

**கே: தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படுவதற்காக எவ்வாறான சாத்தியமான பொறிமுறைமைகளைக் கையாள வேண்டும்?**

ப: .தமிழ் அரசியல் கைதிகளை மூன்று விதமாகப் பார்க்கவேண்டும்.

1. தண்டனை வழங்கப்பட்ட அரசியல் கைதிகள்
2. மேல் நீதிமன்றங்களில் வழக்குகள் நடைபெற்றக் கொண்டிருக்கும் கைதிகள்
3. விசாரணைக்காக தடுப்பு முகாம்களிலும் விளக்கமறியலிலும் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகள்

என்பவை அந்த மூன்று வகையாகின்றன.

### தண்டனை வழங்கப்பட்ட அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு

அரசமைப்பு சட்டத்தின் 34(1) ஆம் உறுப்புரையின் கீழ் தண்டனை வழங்கப்பட்ட கைதிகளை பொது மன்னிப்பு அல்லது நிபந்தனையுடனான பொது மன்னிப்பில் மட்டுமே விடுதலை செய்யும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சட்டமா அதிபரால் மேல்நீதிமன்றங்களில் வழக்குக்கள் தாக்கல் செய்யப்பட்டவர்களில், வழக்கு விசாரணைகள் நிறைவடைந்து தண்டனை அனுபவிக்கும் கைதிகள் 43 பேர். தண்டனை விதிக்கப்பட்ட 43 கைதிகளில் 15 கைதிகளின் மேன்முறையீடுகள், மேன்முறையீட்டு நீதிமன்றிலும் உயர்நீதிமன்றிலும் நிலுவையில் உள்ளன.

தண்டனை விதிக்கப்பட்டு மேன்முறையீடும் முடிவடைந்த 28 கைதிகளில் 16 கைதிகளுக்கே கடந்த மாதம் 24 ஆம் திகதி ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்துள்ளார். மிகுதியாக உள்ள 12 கைதிகள் ஜனாதிபதியின் பொது மன்னிப்பால் மட்டுமே விடுதலை செய்யப்படலாம்.

மேல் நீதிமன்றால் தண்டனை விதிக்கப்பட்டு மேன்முறையீட்டு நீதிமன்றிலும் ,உயர்நீதிமன்றிலும் மேன்முறையீட்டு மனுத்தாக்கல் செய்த 15 கைதிகளின் மேன்முறையீட்டு மனுக்களை மீளப்பெற்று, பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்யலாம்

2009 ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட ஊடகவியலாளரான திசநாயகத்துக்கு மேல்நீதிமன்றால், 20 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அந்தத் தண்டனைக்கு எதிராக

> உறுதியான அரசியல் தீர்மான

மேன்முறையீட்டு நீதிமன்றில் மேன்முறையீடு செய்யப்பட்டிருந்த பொழுது , முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஊடகவியலாளரான திசநாயகத்துக்கு பொது மன்னிப்பு வழங்கினார் . அந்த அடிப்படையில் 15அரசியல் கைதிகளதும் மேன்முறையீட்டு மனுக்களை மீளப்பெற்று பொது மன்னிப்பு வழங்க சட்டத்தில் இடமுண்டு.

### மேல் நீதிமன்றங்களில் வழக்குகள் நடைபெற்றக் கொண்டிருக்கும் கைதிகள்

பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் கீழ் 2009 ஆம் ஆண்டு வரை கைது செய்யப்பட்ட 34 அரசியல் கைதிகளதும், 2017ஆம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனை கொலை செய்ய சதித் திட்டம் தீட்டினர் எனக் கைது செய்யப்பட்ட நான்கு கைதிகளதும் வழக்குகள் உட்பட 38 கைதிகளின் வழக்குகள் கொழும்பு, காலி, அனுராதபுரம் , வவுனியா மேல் நீதிமன்றங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மேல் நீதிமன்றங்களில் வழக்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1979 ஆம் ஆண்டு பயங்கர வாதத் தடைச்சட்டம் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டு அதன் கீழ் அப்போதைய சட்டமா அதிப ரான சிவா பசுபதியால் குட்டிமணி, தங்கத்துரை, தேவன் ஆகிய அரசியல் கைதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட முதலாவது வழக்கான நீர்வேலி வங்கிக் கொள்ளையின்போது கொலையுண்ட பொலிஸ் உத்தியோகத்தர் சிவநேசன் வழக்கிலி ருந்து முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் கொலை வழக்கு வரை 40 ஆண்டுகளாக தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தை கையாண்டு வருபவர் ஜனாதிபதி சட்டத்தரணி கே. வி.தவசராசா. அண்மையில் 16 தமிழ்க் கைதிகள் அரசாங்கத் தால் விடுவிக்கப்பட்ட விடயம் தொடர்பான பின்னணி குறித்து அவர் உதயன் – சஞ்சீவி வாசகர்களுக்காக வழங்கிய பிரத்தியேக நேர்காணல் இது.

# ணி இதுதான்!!



## விமர்சனங்களுக்கு முற்றுப்புள்ளி

## ண்ட சுமந்திரன்

குகள் நடைபெற்றக் கொண்டிருக்கும் கைதிகள் மற்றும் விசாரணைக்காக தடுப்பு முகாம்களிலும் விளக்க மறியலி லும் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளை விடு விப்ப தற்கான பொறிமுறைகளைப் பார்ப்போம்.

1. அரசியல் கைதிகளுக்கு எதிராக சட்டமா அதிபரால் மேல் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டு நடை பெற்றுக் கொண்டிருக்கும் 38 வழக்குகளையும் சட் டமா அதிபர் மீளப்பெறும்பொழுது . தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படலாம். இவ்வாறு நல் லாட்சிக் காலத்தில் அரசியல் பிரபலங்களுக்கு எதிராக மேல்நீதிமன்றங்களில் தாக்கல்செய்யப்பட்ட பல குற்றச்சாட்டுப் பத்திரங்களை ஆட்சி மாற்றத்தின் பின்னர் சட்டமா அதிபர் மீளப்பெற்றார். இதனால் பல அரசியல் பிரபலங்கள், நாடாளுமன்ற உறுப்பி னர்கள், அமைச்சர்கள் விடுதலையாகியுள்ளனர் . (ஒரு நாடு ஒருநீதி)
2. மேல்நீதிமன்றங்களில் வழக்கு விசாரணைகள் நடை

## மே கைதிகள் விடுதலைக்கு வழி

பெற்றுக் கொண்டிருக்கும் 38 கைதிகளுக்கு சட்டமா அதிபரின் சம்மதத்துடன் மேல் நீதிமன்றங்கள் பிணை வழங்கலாம் அல்லது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட் டுக்கள் திருத்தியமைக்கப்பட்டு சட்டத்தில் குறிப்பிடப் பட்டுள்ள சிறியகால, குறைந்த தண்டனை விதிக்கப் படலாம் அல்லது ஒத்திவைக்கப்பட்ட தண்டனை வழங் கப்பட்டு விடுதலைசெய்யப்படலாம்.

3. பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளில் குற்றத்தை ஒத்துக் கொண்டு நீதிமன்றம் தண்டனை வழங்கும்பொழுது, கைதிகள் சிறைச்சாலையில் இருந்த காலம் கழிக்கப் படுமானால் சில கைதிகள் உடனடியாக விடுதலை செய்யப்படலாம். சில கைதிகள் சில காலத் தண்ட னையை அனுபவித்து விரைவில் விடுதலையாவர்.

### புலிகளை மீள் உருவாக்கம் செய்தனர் என்ற குற்றச்சாட்டுடையவர்கள்( 2017-202)

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனை கொலைசெய்ய சதிசெய்தனர் எனக் கைதுசெய்யப்பட்ட முன்னாள் போரா ளிகள் உட்பட 2020 ஆம் ஆண்டிலிருந்து கடந்த ஒரு வருடமாக மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தியவர்கள் சமூக வலைத்தளங்களில் விடுதலைப்புலிகளின் தலைவ ரது பெயரைப் பதிவிட்டமை, புலிகளின் தலைவரது புகைப் படத்தை முகநூல்களில் தரவேற்றி விடுதலைப்புலி களை மீள் உருவாக்கம் செய்தனர் எனக் குற்றம் சுமத்தப்பட்டு பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட 116 கைதி கள் தடுப்புக்காவலிலும் , விளக்கமறியலிலும் வைக்கப் பட்டுள்ளனர். பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் கைது செய் யப்பட்டு தடுப்புக்காவலிலும், விளக்கமறியலிலும் வைக் கப்பட்டுள்ள 116 கைதிகளும் விடுதலை செய்யப்படவேண் டுமெனில், சட்டமா அதிபரின் ஆலோசனைக்கமைய பயங்கரவாதத் தடைப்பிரிவுப் பொலிஸாரால் தண்டனைச் சட்டக்கோவை பிரிவு 120 இன் கீழ் அறிக்கை தாக்கல் செய்யப்படும் பொழுது நீதவான் நீதிமன்றால் பிணைச் சட்டத்தின் கீழ் சந்தேக நபர்களாக பெயர் குறிப்பிடப்பட் டுள்ள கைதிகளுக்கு பிணை வழங்கலாம். அரசியல் கைதிகளின் விடுதலையில் மேற்கூறப்பட்ட இந்தப்பொறி முறைகள் காணப்பட்டாலும் பயங்கரவாதத் தடைச் சட்டத் தின் கீழ் கைதுசெய்யப்பட்டு 10 வருடத்திலிருந்து 600 வருடங்கள் வரை தண்டனை விதிக்கப்பட்டுள்ள கைதிகள் உட்பட மரணதண்டனை இரட்டை ஆயுள் தண்டனை மற்றும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட் 12 கைதிகள் உள்ளனர். சகல அரசியல் கைதிகளதும் விடுதலையாக வேண்டு மெனில் அது தொடர்பில் ஒரு காத்திரமான அரசியல் தீர்மானமே அவசியமாகின்றது.



**கே: 2015 ஆம் ஆண்டு நாட்டின் சிறைச்சாலை களில் 217 தமிழ் அரசியல் கைதிகள் சிறைவைக்கப்பட்டிருந்தனர் எனவும், அவற்றில் நல்லாட்சி அரசால் பல அர சியல் கைதிகள் குறித்த பொறிமுறை மூலம் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் எனவும் கூறப்படுகின்றதே?**

ப: பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய் யப்பட்டு தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு மேல் நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல்செய்யப்பட்ட ஒரு அரசியல் கைதிகூட 2015 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசால் 2019 ஆம் ஆண்டுவரை விடுதலைசெய்யப்படவில்லை.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்படுவதானால் மேல் நீதிமன்றங்க ளிலேயே குற்றப்பத்திரங்கள் (வழக்கு) தாக்கல் செய்யப்ப டவேண்டும். அவ்வாறு குற்றப்பத்திரங்கள் தாக்கல் செய் யப்பட்டு விசாரணைகள் நடைபெற்ற கைதிகளோ அல்லது தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளோ ஒருவர் கூட நல்லாட் சியெனக் கூறப்பட்ட அரசுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தை களால் விடுவிக்கப்படவில்லை.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பிணை வழங்கும் அல்லது விசாரணைசெய்யும் மற்றும் விடுதலை செய் யும் அதிகாரம் நீதவான் நீதிமன்றுக்கு அதிகாரமின்மை யால் சந்தேகத்தின் அடிப்படையில் அவசரகாலச் சட்டத் தின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்களும் வழக்குத் தொடுக்க எந்தவித சான்றுகளும் இல்லாத சில கைதிகளும் பொதுச் சட்டத்தின் கீழ் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். இந்த கைதிகளில் சில கைதிகளுக்கு நிபந்தனை விதிக் கப்பட்டு விடுதலையளிக்கப்பட்டதுடன் சில கைதிகளுக்கு பிணையும் வழங்கப்பட்டது. அத்துடன் சில கைதிகளுக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட்டது . 2016 ஆம் ஆண்டு பிணை வழங்கப்பட்ட பல கைதிகள் இன்றும் நீதிமன்றம் வந்து செல்கின்றனர்.

**கே: தமிழ் மக்களின் வாக்குகளை எதிர்பார்க் காமல், தனிச் சிங்கள வாக்குகளால் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்ட கோத்தாபய ராஜபக்ச 16 தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கி யுள்ளார். ஆனால் தமிழ்த் தேசியக் கூட் டமைப்பின் ஆதரவுடன் ஜனாதிபதியாக ஆட்சிபீடமேறிய மைத்திரிபால சிறிசேன ஒரு அரசியல் கைதிக்கு கூட ஏன் பொது மன்னிப்பு வழங்கவில்லை?**

ப: "தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை ஒரு முக்கியமான விடயம். அதனை நாங்கள் செய் யாமல் தவறவிட்ட விடயங்களில் அது ஒரு முக்கி யமான விடயம் அதனை நான் ஒப்புக்கொள்கின்றேன்" என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப் பினர் சுமந்திரன் கடந்த 27 ஆம் திகதி தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் கூறியுள்ளார். " அப் பொழுது நீதி அமைச்சராகவிருந்த விஜயதாச ராஜபக்சஅர சியல் கைதிகளின் விடுதலை விவகாரத்தில் ஒரு முட்டுக்கட்டையாக இருந்தார். ஒரு தடவை சம்பந்தன் ஐயா ஜனாதிபதி மைத்திரியிடம் நேரடியாக இந்த விடயத்தை வலியுறுத்தினார். ஜனாதிபதி மைத்திரி அதற்கு மறுப்புத் தெரிவிக்கவில்லை . நீதி அமைச்சரின் பங்களிப்பு இந்த விடயத்தில் முக்கியமானது. ஆனால் இந்த விடயத்தில் அவர் பின்னடித்தரர் . இந்த விடயத்தில் அது எங்களது குறைபாடு. அதனை நான் ஏற்றுக்கொள்கின்றேன். அதனை நாங்கள் தலைகீழாக நின்றாவது செய்திருக்க வேண்டும். நாங்கள் செய்யாமல் தவறவிட்ட விடயங்களில் அது ஒரு முக்கியமான விடயம். அதனை நான் ஒப்புக்கொள்கின் றேன்" என வெளிப்படையாகவே சுமந்திரன் இதன்போது கூறியிருந்தார். பொதுமன்னிப்பில் நீதி அமைச்சரான விஜயதாச ராஜபக்சவின் பரிந்துரையின்மையால் அரசி யல் கைதிகளின் விடுதலை சாத்தியப்படவில்லையென நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கூறுகிறார். ஆனால்,

(1) நல்லாட்சி காலத்தில் 2015 ஆம் 2017 ஆம் ஆண்டு வரை தான் நீதி அமைச்சராக விஜயதாச ராஜபக்ச பதவி வகித்தார். அதன் பின்னர் நீதியமைச்சராக தலதா அத்துக் கொரள நியமிக்கப்பட்டார் . 2018 ஆம் ஆண்டிலும் அரசி யல் கைதிகளின் விடுதலை தொடர்பாக பல பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. விஜயதாஸ தான் தடைக்கல் என்றால் ஏன் தலதா அத்துக்கொரள நீதியமைச்சரான பின்னர் கூட அர சியல் கைதிகளை கூட்டமைப்பால் விடுவிக்க முடியவில்லை என்பதை சுமந்திரன் தான் சொல்லவேண்டும்.

(2) பொது மன்னிப்பில் விடுதலையான "துமிந்த சில் வாவின் விடுதலைக்கும் எனக்கும் எதுவும் தொடர்பில்லை. எனக்கு எதுவும் தெரியாது "என்று நீதி அமைச்சர் அலி சப்ரி கைவிரித்துள்ளார் . அவ்வாறெனில் சட்டப்படி பெற வேண்டிய நீதி அமைச்சரின் பரிந்துரையைப் பெறாமல் பொது மன்னிப்பு வழங்கப்பட்டதா? என்ற கேள்வி எழுகின் றது.

(15 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேதகு, மாடத்தி படங்களை முன்வைத்து ஒரு பார்வை



## மேதகு
### ஒரு தலைவன் உருவான கதை

○ எஸ்.எஸ்.லெனின்

இதர மொழிகளோடு ஒப்பிடுகையில் 'ஓ.டி.டி' தளங்களில் வெளியாகும் தரமான தமிழ்ப் படங்கள் மிகவும் குறைவு. இந்த ஆதங்கத்தை நேர்செய்யும் வகையில் அண்மையில் இரண்டு திரைப்படங்கள் வெளியாகி ரசிகர்களை ஈர்த்திருக்கின்றன. ஈழத்தமிழர் போராட்டம் பற்றிய பொதுப்புத்தியின் அலட்சியத்தை உலுக்கிய 'மேதகு', ஆதிக்க வெறியர்களைச் சாடும் 'மாடத்தி' என கனமான உள்ளடக்கத்துடன் வெளியாகி, விவாதங்களையும் பற்ற வைத்திருக்கின்றன அந்தப்படங்கள்.

# ஒடுக்குதலும் திருப்பியடித்தலும்

'ஃபமிலிமேன்' வலைத்தொடரின் இரண்டாம் சீஸன், 'ஜகமே தந்திரம்' திரைப்படம் என அண்மையில் ஓடிடியில் வெளியான இரண்டு படங்களிலும் ஈழப்போராட்டம் குறித்த கருத்தாக்கம் பொறுப்பின்றி கையாளப்பட்டதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்தன. நிஜத்தில், ஈழத்தில் நடந்தது என்ன? ஈழ மக்களின் தரப்பு நியாயங்கள் எவை ? என்பவை பற்றிய புரிதலில் தற்போதைய தமிழ்நாட்டு தலைமுறைக்கும் பிற இந்திய மாநிலத்தினருக்கும் நிறையவே போதாமைகள் உண்டு. அவற்றுக்கு விடை தரும் முயற்சியாக மேதகு திரைப்படம் அமைந்திருக்கிறது.

சிங்களவர் தமிழர் இடையிலான இனவாத மோதலில், திருப்புமுனையான ஒரு முக்கியமான போராளி இயக்கத்தின் விதை எப்போது விழுந்தது. வேலுப்பிள்ளை பிரபாகரன் என்கிற போராளி எப்படி உதயமானார். அறவழியிலிருந்த தமிழர்களின் போராட்டம் எந்தப் புள்ளியில் ஆயுதமேந்திய மறவழிக்கு மடைமாறியது என்பதையெல்லாம் ஆழமான விவரணைகளோடு ஓர் உயிர்ப்புமிக்கத் திரைப்படத்துக்குரிய எளிய மொழியில் சொல்லியிருக்கிறது 'மேதகு'.

பிரபாகரன் பிறந்ததில் தொடங்கி, கையில் 'துவக்கு' ஏந்தி அவர் களமாடிய முதல் சம்பவம் வரையாக 'மேதகு' முதல் பாகம் விவரிக்கிறது. பிரபாகரன், யாழ்ப்பாண மேயர் துரையப்பா, இலங்கை பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க என முக்கிய கதாபாத்திரங்களுக்கான நடிகர் தேர்வு சிறப்பாகவும் தோற்றப் பொருத்தத்துடனும் அமைந்துள்ளது. அதிலும் இளவயது பிரபாகரனாக தோன்றும் குட்டிமணியின் ஆழமான பார்வையும் உடல்மொழியும் அபாரம்!

ஏராளமான விவரிப்புகள், சம்பவங்கள் நிறைந்த கால் நூற்றாண்டுக் கதையை சுருங்கச்சொல்வதற்கு மதுரை தெருக்கூத்து உத்தியை உபயோகித்திருப்பது ரசிக்க வைக்கிறது. அழிவின் விளிம்பிலிருக்கும் கூத்துக் கலை 'மேதகு' மூலம் மீண்டும் உயிர்பெறவும் வாய்ப்பாகலாம். திரைப்படம் பேசும் அரசியலுக்கு அப்பால், கலை வடிவிலும் மேதகு பாய்ச்சல் காட்டியுள்ளது. சுமார் அறுபது லட்சம் ரூபா பட்ஜெட்டில் சவால்கள் மிக்க கதையை, பெரிதாகக் குறைகாண முடியாத வகையில் சினிமாவாக உருவாக்கியிருப்பது வரவேற்புக்குரியது. அவ்வகையில் கதைகளைச் சுமந்துகொண்டிருக்கும் ஏராளமான இளைஞர்களுக்கு நம்பிக்கை அளித்திருக்கிறார் 'மேதகு' படத்தின் இயக்குநர் கிட்டு. ரியாஸின் ஒளிப்பதிவு, பிரவீன் குமாரின் இசை இரண்டும் திரைப்படத்தின் தூண்கள். பறையொலிப் பின்னணியில் 'தமிழுக்கு அமுதென்று பேர்..' எனும் பாவேந்தரின் பாடல் காதுகளில் இன்னமும் ரீங்கரிக்கிறது.

படத்தின் பட்ஜெட் காரணமாக ஆவணப் படத்தின் சாயல் சில இடங்களில் துருத்தலாகத் தெரிவதை சிறு குறையாகச் சொல்லலாம். ஆனால் ஈழ மக்களின் வலியையும் மொழியையும் திருத்தமாக சொன்ன அரசியல் பார்வையில், எளிமையும் செறிவுமான திரைக்கலையில் நிகழ்த்திக் காட்டியிருக்கும் முன்மாதிரிப் பாய்ச்சல் என 'மேதகு' படத்தைப் பாராட்டலாம். கூடவே அண்மைக்கால அரைகுறை சித்தரிப்புகளுக்கு முத்திரை வசனத்தின் பாணியிலே 'திருப்பி அடித்திருக்கிறார்கள்'. ■





## மாடத்தி:
### ஆதிக்கத்தின் பார்வைப் பறிப்பவள்

தமிழ் சினிமா சூழலில் கட்டுடைப்பு என்பது எப்போதாவதுதான் நிகழும். அண்மையில் அது 'மாடத்தி'யால் நிகழ்ந்திருக்கிறது.

கவிஞரும் ஆவணப்படப் படைப்பாளியுமான லீனா மணிமேகலையின் தயாரிப்பு, இயக்கத்தில் வெளியாகியிருக்கும் 'மாடத்தி', பார்த்து முடித்த பின்னரும் தொந்தரவு செய்யக்கூடியது. சாதியம், பெண்ணியம் என ஒன்றுக்கும் மேலான அடுக்குகளில் மடல் விரித்திருக்கும் 'மாடத்தி'யை உள்வாங்குவதற்கு தனி மனநிலை தேவைப்படுகிறது.

தொட்டால் தீட்டு என்கிற பெயரில் ஒடுக்கப்பட்டிருக்கும் சமூகங்களை அறிவோம். 'பார்த்தாலே தீட்டு' என்று அந்த ஒடுக்கப்பட்டோராலும் ஒதுக்கப்படும் சமூகமான சலவைத்தொழிலாளர் குலத்தின் மத்தியிலிருந்து மாடத்திக்கான கதையை நெய்திருக்கிறார் லீனா மணிமேகலை. ஊர்ச் சாதியினர் பார்வையில் விழாதிருக்க இரவில் மட்டுமே புழங்குவதும், ஊராரின் அழுக்குத் துணிகளை வெளுப்பதுவுமே பிறவிப் பயனாக பணிக்கப்பட்ட மக்கள் அவர்கள். நிலமற்று, தடமற்று வாழும் அந்த அவலச் சமூகத்தின் துயரங்களை, 'இப்பல்லாம் யாருங்க சாதி பாக்குறா..?' என்பவர்களின் முகத்திலறைந்து சொல்கிறாள் 'மாடத்தி'.

அழுக்கை வெளுக்கும் குடும்பத்தில் பதின்பருவத்து பட்டாம்பூச்சியாக வலம்வருகிறாள் சிறுமி யோசனா. கூட்டுக்குள் அடங்காத மகளை, கவலை நிரம்பிய வசவுகளால் அர்ச்சிக்கும் தாய் வேணி. இவ்விரு பெண்களைச் சுற்றி கதை நகர்கிறது. ஊர் விலக்கியபோதும் பரந்திருக்கும் காடும், அருவியும், வானமும், மழையும், பறவைகளும், விலங்குகளும் யோசனாவை ஆரத்தழுவிக் கொள்கின்றன. யோசனாவின் சிறகடிப்புகள் அனைத்துமே நிராகரிப்பின் மறுபக்கத்தில் பெருவெடிப்புகளாகின்றன.

சாதிய அடக்குமுறையை பேசுவதற்கு நிகராக ஒரு பெண்ணின் மலர்ச்சியை சொல்ல முயன்றதிலும் 'மாடத்தி' வித்தியாசப்படுகிறது. முழுதாக ஆணுடல் பார்த்த குறுகுறுப்பில் பதுங்கி சிலிர்க்கும் பருவப் பெண்ணின் உலகமும் அவளது தொடர் தவிப்புகளும் அதற்கு ஓர் உதாரணம்.


பார்த்தால் தீட்டு என்று ஆதிக்க சாதி ஆண் நிகழ்த்தும் பாலியல் வன்முறை, பாதிக்கப்பட்ட பெண்ணின் கோணத்திலிருந்து அவலங்களை கடத்துகிறது. அந்த நீண்ட காட்சி, நாகரீக சமூகத்தை குற்ற உணர்வுகொள்ளச்செய்யும். அதே போன்ற ஆதிக்க வெறிக்கு சிறுமியும் பலிகொள்ளப்பட்டு,பின்னர் சிறு தெய்வமாகும் மாடத்தி, பார்த்தாலே தீட்டு என்று பழித்த ஊராரின் பார்வையை ஒட்டுமொத்தமாக பறிக்கவும் செய்கிறாள்.

மேதகுவின் கூத்துக்கலை போலவே 'மாடத்தி'யின் கதை, வரைகலை சித்தரிப்புகளின் உத்தியை பயன்படுத்துகிறது. புழுக்கமூட்டும் கதையில் காடு, மலை என குளிர்ச்சியான ஒளிப்பதிவும், அவசியமான இடங்களில் மட்டுமே ஒலிக்கும் கார்த்திக் ராஜாவின் பின்னணி இசையும் பெரும் பலம். ஆனால் அடுத்தடுத்து தொடரும் காட்சிகள் ஒன்றோடொன்று ஒட்டாத தன்மை தென்படுவதை தவிர்த்திருக்கலாம். மாடத்தியாக வரும் சிறுமி அஜ்மினா காசிம், தாய் வேணியாக தோன்றும் செம்மலர் அன்னம் ஆகிய இரண்டு முக்கிய பெண் கதாபாத்திரங்களும் நிறைவு தந்திருக்கிறார்கள்.

சிறு திரைப்படங்களுக்கு திரையரங்குகள் கிடைக்காதது போல, ஓடிடி வெளியீடு என்ற போதும் முன்னணி தளங்களின் புறக்கணிப்பை அடுத்து அதிகம் பிரபலமாகாத செயலிகள் மூலமே மேதகுவும் (BS Value), மாடத்தியும் (NeeStream) பார்வையாளர்களை சென்று சேர்ந்திருக்கின்றன. இரண்டுமே ஆதரிக்க வேண்டிய படைப்புகள் ■



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



முதுபெரும் எழுத்தாளர் கி.ராஜநாராயணனின் (கி.ரா.வின்) நண்பரும் எழுத்தாளருமான பேராசிரியர் அ.ராமசாமி, அவரின் 40 ஆண்டு கால நண்பர். அவரோடு கொண்ட நட்பை 'உதயன் – சஞ்சீவி' வாசகர்களுக்காக நினைவுக் குறிப்புகளாகத் தருகிறார்.

**பேராசிரியர் அ.ராமசாமி**
*தமிழ்த்துறை (பணி நிறைவு) மனோன்மணி சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, தமிழ்நாடு.*



# கி.ரா: நினைவுகள்

**22**

சங்கரதாஸ் சுவாமிகள் நிகழ்கலைப்பள்ளியில் கொண்டாடப்படும் உலக அரங்கநாள் கொண்டாட்டத்தில் கலந்து கொள்ளவேண்டும் என்று நானும் அப்போது துறைத்தலைவராயிருந்த கரு. அழ.குணசேகரனும் சென்று கி.ரா.வை அழைத்தோம். அப்போது முதல் துணைவேந்தர் இல்லை. அடுத்த துணைவேந்தர் பேரா.ஆ.ஞானம் வந்திருந்த ஆண்டு. அவரும் வருகிறார்; நீங்களும் வரவேண்டும் என்றோம். தேதியைக் கேட்டுக்கொண்டு வந்து அழைத்துச்செல்ல வேண்டும். இருசக்கர வாகனத்தில் வருவது இயலாது; ஒரு ஆட்டோ போதும் என்றார். சரியென்று சொல்லிவிட்டுக் கிளம்பும் போது நிறுத்தி "நேரம் சொல்லவில்லையே?" என்றார். மாலை 6.30. என்றபோது சிரித்துக் கொண்டே, அப்போ என்னையெ விட்டுடுங்க சாமிகளா.. என்றார். பகல்லெ நிகழ்ச்சின்னா எப்படியோ தட்டுத்தடுமாறி வந்து பார்த்துட்டு வந்திடலாம். ராத்திரி கதையெல்லாம் நமக்கில்ல. அதெல்லாம் முடிஞ்சு போச்சு" என்று சொல்லித் திரும்பவும் எங்களை உட்கார வைத்துவிட்டார்.

உட்காரவைத்தவர், நாங்கள் செய்யும்தலித் நாடகங்கள் பற்றிக் கேட்கத் தொடங்கினார். இதெல்லாம் தமிழ்நாட்ல இப்பத்தானே பேசத் தொடங்கிறோம். இலங்கையிலெ எப்பையோ ஆரம்பிச்சுப் பேசிட்டாங்க. மல்லிகையின்னு ஒரு பத்திரிகை, அதன் ஆசிரிய டொமினிக் ஜீவாதான் அதில் முன்னோடி. அப்புறம் கே.டேனியல். அவர்களோடு நட்புடன் இருந்து பேசிய தளையசிங்கம் என அரைமணி நேரம் தொடர்ந்தார். தலித் இலக்கியம், தலித் நாடகம் என்ற சொல்லாட்சி மட்டும் தான் நம்முடையது. தொடக்கமும் செயற்பாடுகளும் அங்கதான் என்று சொல்லி முடித்தார்.

இரவில் வரமுடியாது என்று சொன்னதால் அவர் இல்லாமல் உலக நாடக விழாவைத் தொடங்க விருப்பம் இல்லை. அதனால் குணசேகரன் நீங்கள் காலையில் 11 மணிக்கு வாங்க; உங்களுக்காக அப்போதே தொடக்கவிழாவை வைத்துவிடலாம். துணைவேந்தர் இரவில் சிறப்பு விருந்தினராக வரட்டும் என்று ஒத்துக்கொள்ள வைத்தார். அப்படியே அந்த விழாவுக்கு வந்தார் கி.ரா. நிகழ்கலைப்பள்ளி மாணவர்களின் ஒத்திகைகளின் பரபரப்புப் பின்னணியில் தொடங்கிவைத்தார்.

கரு. அழ. குணசேகரனின் குரல் "ஆக்காட்டி.. ஆக்காட்டி.. எங்கெங்கே முட்டையிட்டே" என்று ஆகாயத்தில் தேடிப்போனது. இப்போது கி.ரா.வும் இல்லை. கி.ரா.வை அப்படி நேசித்த நண்பர் குணசேகரனும் இல்லை. இன்மைகளின் பாரம் அழுத்துகிற காலமாக நமது காலம் மாறிக் கொண்டிருக்கிறது.

**23**

பாண்டிச்சேரி கம்பன் கலை அரங்கில் ஒரு கூட்டம். கூட்டம் முடிந்து வெளியேறும்போது பார்த்தால் கோமல் சுவாமிநாதன் நின்றிருந்தார். பக்கத்தில் கி.ரா. கூட்டம் ஆரம்பித்தபிறகு அவர்கள் வந்திருக்க வேண்டும். அப்போது கோமல் சுபமங்களாவின் ஆசிரியர். அவரோடு அவரது துணை ஆசிரியர்களும் புகைப்படக் காரர் ஒருவரும் வந்திருந்தார்கள்.

சுபமங்களாவில் ஒவ்வொரு இதழிலும் ஒரு எழுத்தாளரை நேர்காணல் செய்து விரிவாக வெளியிட்டுக் கொண்டிருந்த நேரம். கி.ரா.வை நேர்காணல் செய்ய வந்திருக்கலாம் என்று நினைத்துக்கொண்டேன். கூட்டம் கலைந்து கொண்டிருந்தது. இரவு ஒன்பது மணிக்கு மேலாகிவிட்டது. கடைசியில் கோமலைச் சுற்றிப் பத்துப் பன்னிரண்டு பேர் நின்றிருந்தோம். நிறப்பிரிகை ரவிக்குமார், பிஎஸ் என் எல் மதியழகன், எங்கள் கூட்டுக்குரல் நாடகக் குழுவைச் சேர்ந்த அருணன், கோமதி, பெருமாள், விஷ்ணுதாசன் ஆகியோரும் இருந்தார்கள். பாண்டிச்சேரியைச் சைக்கிளில் சுற்றிவரும் நாங்கள் எங்கே சுற்றினாலும் வீட்டுக்குப் போய் சாப்பிடும் பழக்கம் கொண்டவர்கள் . கி.ரா, வும் வெளியில் சாப்பிடுவதைத் தவிர்ப்பவரே. கோமலோடு பேசிக்கொண்டிருந்த நிலையில் எப்படி ஒன்றும் சொல்லாமல் கிளம்புவது என்று நினைத்துக் கொண்டு நின்றோம். "வாங்க சாப்பிடலாம்; ராம் இண்டர்நேசனல் பக்கத்திலெதான் இருக்கு" என்று சொன்னபோது. " பாண்டிச்சேரி ரோட்டுக்கடைப் புரோட்டோவும், போத்திக் குழம்பும் சாப்பிடணும்யா" என்றார்.

கம்பன் கலையரங்கத்தின் இடது மூலையில் தொடங்கும் அண்ணாசாலையின் வலதுபக்கம் அண்ணா திடல் ஓரத்தில் மூன்று பக்கமும் இரவுச் சாப்பாட்டுக்கடைகள் வரிசை கட்டும். புரோட்டா, இட்லி, ஊத்தப்பம் கிடைக்கும். இவற்றுக்குத் தரப்படும் சால்னாக்கள் விதம்விதமானவை. வெத்துச்சால்னா, வெஜ் சால்னா, மட்டன் சால்னா, சிக்கன் சால்னா, என்பனவற்றைத் தாண்டி குடல் குழம்பு ஒன்று தருவார்கள். அதற்கு போத்திச் சால்னா என்று பெயர். அதேபோல் இறால் சால்னாவும் தருவார்கள்.

கோமலின் ரோட்டுக்கடை ஆர்வம் அங்கிருந்த பலருக்கும் ஆச்சர்யம். இத்தனை பேர் சாப்பிட்டால் யார் பணம் தருவது என்ற தயக்கம் இருந்தது. பிஎஸ் என் எல்லில் வேலை பார்க்கும் நண்பர் மதியழகன் தான் தைரியம் ஊட்டினார். சாப்பிடட்டும் பணம் இல்லையின்னா சொல்லிக்கிடலாம்.

நாளைக்கு வந்து கொடுத்திடலாம். மதியழகன்கவிதைகள்எழுதுவார். ஆனால் மற்றவர்களோடு விவாதிக்கக் கொஞ்சம் யோசிப்பார். புதிய கோடங்கியில் வந்த அவர் கவிதைகள் வித்தியாசமாவை. அவை பின்னர் தொகுக்கப்பட்டு 2012 இல் ' வியூகம் கொள்ளும் காய்கள்' என்ற தொகுப்பாகக் காலச்சுவடு பதிப்பகம் வெளியிட்டது.

மதியழகன் தந்த தைரியத்தில் எல்லோரும் சாப்பிட்டு முடித்தோம். கோமல் போத்திக்குழம்பை விரும்பிச் சாப்பிட்டார். கி.ரா. பக்கத்தில் நின்ற ஸ்கூட்டரில் உட்கார்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார். கோமலை அவர் தங்கியிருந்த விடுதிக்கு ஆட்டோவில் ஏற்றி அனுப்பிவிட்டு வீடு திரும்பினோம். சில நாட்கள் கழித்துக் கி.ரா.வைச் சந்தித்தபோது ' பிராமணர்களிடமிருந்து கற்றுக் கொள்ள இன்னும் நிறைய இருக்கில்ல' என்று கேட்டார். கோமலின் எதார்த்தமான இணைக்கத்தையும் உணவு விருப்பத்தையும் தான் அப்படிக் குறிப்பிட்டார்.

*(நினைவுகளும் குறிப்புகளும் தொடரும்)*

(தொடர்ச்சி)



# புது ரோட்டு

புதுறோட்டு போட்டுமுடிந்தது. இப்போது எல்லோரும் சௌகரியாமாகப் பயணிக்கும் பாதையாக அது மாறிவிட்டது.

ஊர்ப்பொதுமக்களைவிட சுந்தரத்தார் பெரும் களிப்பில் மிதந்தார். ஒரு அடி கூட விட்டுக்கொடுக்காமல் தான் சாதித்து விட்டேன் என அவர் அனைவருக்கும் கூறத்தொடங்கிவிட்டார். அத்தோடு இந்தப்பகுதி றோட்டு இடப்பட்ட இரண்டு நாள்களின் பின்னர் சுந்தரத்தாரின் மூத்தமகனின் 21 வயது பிறந்த நாள் இதற்கு அனைவரையும் அழைத்து இறைச்சி விருந்து கொடுத்து "பிறந்தநாள் விருந்து மட்டுமில்லை. றோட்டுக்கு ஒரு அடி கூட விடாமல் போடச்செய்தன் பாருங்கோ. அதுக்கு வெற்றிவிழா" என்று பகிரங்கமாகக் கூறிப் பெருமிதமாகக் கொண்டாடினார்.

நண்பகல் 12 மணியளவில் கேட்ட பறை மேளச்சத்தங்களால் சுந்தர்த்தார் பற்றிய எனது நினைவுகள் கலைந்தன. "2 மணிக்கு பிரேதம் எடுக்கிறது. இப்பவே போவம்" என எனது மனைவியும் சுந்தரம் வீட்டுக்கு செல்வதற்கு என்னுடன் வந்தாள். சுந்தரம் தற்கொலை செய்தமைக்கான காரணத்தை அங்கு வந்தவர்கள் இன்னமும் தங்கள் கற்பனைக்கேற்ப தேடிக்கொண்டிருந்தனர்.

" கடன் தொல்லை"

" பிள்ளையள் பிரச்சினை"

" ஆளுக்கு வருத்தம். தனக்கேலாமல் இப்பிடி செய்திட்டுது"

[illegible]

[illegible] சுந்தரத்தின் பிள்ளைகள் தங்கள் தந்தைக்காக அழுது குளறிகொண்டிருந்தனர். அவர்களைப் பார்க்கையில், நெஞ்சு உருகத்தான் செய்தது.

நேரமும் பி.ப 2 மணியை நெருங்கியது. இறுதிச்சடங்குகள் யாவும் நடைபெற்று சுந்தரத்தின் பூதவுடல் தகனத்துக்காக மயானம் நோக்கிச் செல்ல ஆயத்தமானது. வீட்டிலிருந்து சுந்தர்த்தின் பூதவுடல் ஊர்வலமாக அவர்கள் வழமையாகப் பயன்படுத்தும் வடக்குப் பக்க றோட்டு ஊடாகச் செல்லாது புதிதாக இடப்பட்ட தெற்குப்பக்க புது றோட்டு ஊடாகச்சென்றது. நா[illegible]ம் புது[illegible]ோட்டு ஊடாகச் செல்லும் ஊர்வலத்தில் செல்கின்றேன். என்னருகே வந்த அயலவர் கிட்டிணர் "புது றோட்டால போற [illegible] முதல் பிரேதம் இதுதான் தம்பி" என எனக்குக்கூறிய வண்ணம் முன்செல்கின்றார். புதுறோட்டுக்காக ஒரு அடிகூட விட்டுக்கொடுக்காத சுந்தரம் இப்போது அந்தப்புது றோட்டில் முதலாவது பிணம் ஆக ஊர்வலம் சென்றுகொண்டிருந்தார்.

*(யாவும் கற்பனை)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண வரலாறு

## 1505-1948 வரை



○ ந.பரமேஸ்வரன்

இதன்பின் மீகாப்பிள்ளை மறுபடியும் நவம்பர் மாதம் புதிய படையுடன் வந்து தாக்குதல் நடத்தினான். இம்முறை போர்த்துக்கீசப்படை தமிழ்ப்படையை தரையிறங்கவிடாது தாக்குதல் நடத்தியது; தமிழ் வீரனொருவனின் ஈட்டித் தாக்குதலில் ஒலிவேரா காலில் காயமடைந்தான். ஒலிவேரா காயமடைந்ததைத் தொடர்ந்து தமிழ்ப் படைகள் வல்வெட்டித்துறையில் தரையிறங்கி உக்கிரமாகப் போரிட்டன. தமிழ்ப்படை வென்றுவிடுமோ என்ற அச்சத்தில் போர்த்துக்கீசப் பெண்கள் யாவரும் தேவாலயத்தில் தஞ்சமடைந்தனர். இறுதியில் போர்த்துக்கீசப்படை வெற்றியீட்டியது. இந்தச் சம்பவம் 1621 ஆம் ஆண்டு இடம்பெற்றது என பவுல் பீரிஸ் (Paul Pieris) என்ற வரலாற்றாசிரியர் குறிப்பிட்டுள்ளார்; இந்தத் தாக்குதல் 'கரையார் கலகம்' என சில நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### நல்லூர் கந்தசாமி கோயில் தகர்ப்பு

1621 ஆம் ஆண்டு பெப்ரவரி 21 ஆம் திகதி நல்லூர் கந்தசாமி கோயிலை அத்திபாரத்துடன் தகர்த்துவிட்டு , கோயில் இருந்த இடத்தை தனது வாசஸ்தலமாக்கினான் ஒலிவேரா. நல்லூர் கந்தசாமி கோயில் இடிக்கப்பட்டபோது யாழ்ப்பாண மக்களனைவரும் பெருங்குரலெடுத்து கதறி அழுதனர் என சுவாமி ஞானப்பிரகாசர் 'யாழ்ப்பாண வைபவ விமர்சனம்' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

சில தினங்களின் பின்னர் பருத்தித்துறையில் தமிழ்ப்படை ஒன்று வந்து இறங்கியிருக்கிறது என ஒற்றர்கள் மூலம் அறிந்த ஒலிவேரா புத்தூரில் வைத்து அவர்களை சுற்றிவளைத்து கைது செய்து சிரச்சேதஞ் செய்தான்.

நல்லூர் கந்தசாமி கோயிலை இடித்த போர்த்துக்கீசர் , தொடர்ந்து இலங்கையில் உள்ள இந்து பௌத்த ஆலயங்கள் அனைத்தையும் இடித்து தரைமட்டமாக்கினர். இவ்வாறு தரைமட்டமாக்கப்பட்ட இந்துக் கோயில்களுள் சீதாவாக்கை சிவன்கோயில் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. இந்தக் கோயில் சிங்களத்தில் பேராண்டி கோயில் என அழைக்கப்படுகிறது. இந்தக்கோயிலில் பல விலைமதிக்க முடியாத சிற்பங்கள் இருந்தன எனக் கூறப்படுகிறது.

முன்னேஸ்வரம் சிவன்கோயில் 1575 ஆம் ஆண்டு இடிக்கப்பட்டது. திருகோணமலை கோணேசர் கோயில் 1622 ஆம் ஆண்டு இடிக்கப்பட்டது என சிலரும் ,அதற்கு மாறாக 1624 ஆம் ஆண்டே இடிக்கப்பட்டது என இன்னும் சிலரும் எழுதி வைத்துள்ளனர்.

போர்த்துக்கீசர் கோயில்களை இடிப்பதைக் கேள்விப்பட்ட பூசகர்களும் , தர்மகர்த்தாக்களும் விக்கிரகங்களை எடுத்துச் சென்று கிணறுகளினுள்ளும் குளங்களுக்குள்ளும் போட்டுவிட்டுச் சென்றனர். இவ்வாறு இந்துக் கோயில்கள் அனைத்தையும் இடித்துத் தள்ளிய போர்த்துக்கீசர் கதிர்காமத்தை மட்டும் விட்டுவிட்டனர். கதிர்காமம் கோயிலை இடிப்பதற்காகச் சென்ற போர்த்துக்கீசப் படைகளுக்கு அந்தக் கோயில் இருக்குமிடம் தெரியவில்லை. இதனால் கதிர்காமம் கப்புறாளையைப் பிடித்து தமக்கு கோயில் உள்ள இடத்தைக் காட்டுமாறு அச்சுறுத்தினர். ஆனால் கப்புறாளை கோயிலைக் காட்டாமல், வேறு பாதைகளால் காட்டுக்குள்



நீண்டதூரம் போர்த்துக்கீசப் படைகளை அங்குமிங்கும் அலைக்கழித்தார். இதனால் ஆத்திரமடைந்த போர்த்துக்கீசர் கப்புறாளையைக் கொன்றுவிட்டு, கோயிலை இடிக்காமலே திரும்பினர்.

இவ்வாறு கோயில்களனைத்தையும் இடித்துத்தள்ளிய போர்த்துக்கீசர், கத்தோலிக்க மதம் தவிர்ந்த பிறமத வழிபாடுகளுக்குத் தடைவிதித்தனர். யாழ்ப்பாணத்தவர்கள் அனைவரும் சிலுவை அணியவேண்டுமென போர்த்துக்கீசர் உத்தரவிட்டனர். உலோகத்திலான சிலுவையை அணியத் தயங்கிய யாழ்ப்பாணத்தவர்கள் தமது தலைப்பாகையை சிலுவையாக அணிந்தனர். யாழ்ப்பாணவாசிகள் அனைவரும் கத்தோலிக்க மதத்தையே பின்பற்ற வேண்டுமெனவும் பூசை, வழிபாடுகள் செய்பவர்கள், விரதம் அனுஷ்டிப்போர் தண்டனைக்குள்ளாக்கப்படுவரெனவும் போர்த்துக்கீசர் பிரகடனம் செய்தனர். இந்தக் காலப்பகுதியில் மக்கள் வெளியே கிறிஸ்தவர்களாகவும் உள்ளே இந்துக்களாகவும் வாழ்ந்தனர். ஒற்றர்கள் மூலம் யாராவது பூசை, வழிபாடுகள் செய்கிறார்களா என வேவு பார்த்தனர் போர்த்துக்கீசர். இதனால் மக்கள் இரகசியமாக தமது வழிபாடுகளை மேற்கொண்டனர்.

விரதமிருந்து உணவு உட்கொண்டவர்கள் சாப்பிட்ட பின் வாழையிலையை கூரைக்குள் செருகிவைத்தனர். வாழையிலையை வெளியே வீசினால் ஒற்றர்கள் கண்டு விடுவார்கள் என்பதற்காகவே இந்தப் பழக்கம். இந்த வாழையிலையை கூரைக்குள் செருகி வைக்கும் வழக்கம் அண்மைக் காலம் வரை தொடர்ந்து இருந்தது. இதேபோல் வீதியோரங்களில் உலோகங்கலான சிலுவைகளை நட்டு வழிபட்ட மக்கள் போர்த்துக்கீசர் அந்த இடத்தைவிட்டு அகன்றதும் சிலுவையை சூலவடிவில் திருப்பிவிட்டு வழிபட்டனர் எனவும், இதன் காரணமாகவே யாழ்ப்பாணத்தில் வைரவர் வழிபாடு அதிகமாக காணப்படுகிறது எனவும் பேராசிரியர் சிவத்தம்பி கூறியுள்ளார்.

போர்த்துக்கீசர் ஆட்சிக்காலத்தில் கண்டி அரசன் இரு தடவைகள் யாழ்ப்பாணத்தின்மீது போர்தொடுத்தான். எனினும் போர்த்துக்கீசர் இந்தத் தாக்குதல்களை முறியடித்தனர்.

இந்துக் கோயில்களனைத்தையும் இடித்துத்தள்ளிய போர்த்துக்கீசர் இந்துக்கோயில்கள் இருந்த இடங்களில் எல்லாம் கத்தோலிக்க தேவாலயங்களை அமைத்தனர். கோப்பாயில் (கைதடிக்கு திரும்பும் மூலையில்) சங்கிலியனின் கோட்டை இருந்த இடத்திலும் ஒரு தேவாலயம் அமைக்கப்பட்டது. இந்த இடத்தில் பின்னாளில் யாழ்ப்பாணத்தின் முதலாவது அரசாங்க அதிபராக பதவி வகித்த 'பேர்சிவல் அக்லண்ட்டைக்' குடியிருந்தார். இந்து மதவழிபாட்டுக்குத் தடைவிதித்த போர்த்துக்கீசர் இறந்தவர்களின் பிணங்களை எரிக்கக் கூடாது எனவும் புதைக்கவேண்டுமெனவும் உத்தரவிட்டனர்.

(வரலாறு நீளும்)

# 'வரதர்' எனும் மறுமலர்ச்சி



○ ஐ.சாந்தன்

வரதர் என்கிற தி.ச. வரதராசன், ஈழத்தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு சகாப்தம். அந்தப்பெரு நீர்ப்பரப்பில் உடனடியாக என் மனதிற்பட்டவை என்ற அவசரத்தில் அள்ளிய ஒரு சிறங்கையே இந்தக்குறிப்பு.

வரதர் பெயர் சொன்னதும் எவர் மனதிலும் கூடவே மனதில் ஒலிப்பது, 'மறுமலர்ச்சி'.

வரதரை முதலில் நான் அறிந்தது 1950 களின் பிற்பாதியில் என் சிறுவயதில் அவரது 'வாழ்க நீ, சங்கிலி மன்ன!' என்கிற நாடக நூல் மூலம்.

முதலில் கண்டது அதற்கு ஓரிரு ஆண்டுகள் கழித்து திருநெல்வேலி இந்து வாலிபர் கழக மண்டபத்தில் ஒரு மாலை இடம்பெற்ற 'கலைச்செல்வி' இதழின் பரிசளிப்பு நிகழ்வொன்றில்.

நாடக நூலின் அட்டைப்படமும், திருநெல்வேலிக் கூட்டத்தில் வரதர் அமர்ந்திருந்த விதமும் இன்னமும் மனதில் படிந்துள்ளன. பிறகு, அவருடைய, கயமை மயக்கம், கற்பு போன்ற பல கதைகள். அவருடைய பல்வேறு வெளியீடுகள்.

தனிப்பட்ட முறையில் அத்துணை சஞ்சிகைகளையும், நூல்களையும் வெளியிட்டவர்கள் அவரைப் போல வேறெவருமில்லை என நினைக்கிறேன்.

அவர் வெளியிட்ட ,'வெள்ளி' இதழில் என் கதை ஒன்று வந்த நினைவு.

என்னுடைய முதலாவது சிறுகதைத் தொகுதியான 'பார்வை'க்கு அவரே முன்னுரை.

என் நாவல் 'ஒட்டுமா,' வரதர் வெளியீடாகவே வந்தது.


'அறிவுக் களஞ்சியம்' சஞ்சிகையின் ஆரம்பகால ஆலோசனைக் குழுவில் நானும் இடம்பெற்றிருந்தேன். 'செந்தமிழர் இயக்க'த்துடன் ஈடுபாடு கொண்டிருந்தார். வி.பி.யின் 'செந்தமிழர் ஆகிடுவோம்' நூலும் வரதர் வெளியீடே. அவர் வெளியீடுகளில் சிறப்பான ஒன்று என நான் கருதுவதும், பலரால் கவனிக்கப்படாது விடப்பட்டதும், 1990 இல் வெளியான 'வரதர் மாணவர் அகராதி' (ஆங்கிலம் தமிழ்). ஓரிரு தவறுகளைத் தவிர்த்தால், 'கொக்குவர்க்கிழான்' தொகுத்த இவ்வகராதி, இன்றும் க.பொ.த. உ/த கல்வியைத் [illegible] எம் மாணவர்க்குங் கூட மிக ஏற்றது. யாராவது அதனை மறுபதிப்புச் செய்வதையிட்டும் ஆலோசிக்கலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம.மயூரபாலன்

**நமது வாழ்விலும் ஆனந்தம், அமைதி, மகிழ்ச்சி என்பன நிரம்பி இருக்க வேண்டும் என்றால், அதற்குரிய அறிவையும் நாம் கற்றுக்கொள்ளவேண்டும். கற்றுக்கொள்வது மட்டுமன்றி, அதனைத் தினமும் பயிற்சி செய்ய வேண்டியதும் மிகவும் அவசியமாகின்றது.**



# நல்லதோர் வீணைசெய்தே...!



வானொலியில் பாடல் மெதுவாக ஒலித்துக் கொண்டிருந்தது. அதன் சத்தம் தான் மெதுவாக இருந்ததேயன்றி பாடலின் வார்த்தைகளிலே ஒரு கோபமும் அறிவும் கலந்த உணர்வு ஒன்றுதான் தென்பட்டது. அது பாரதியாரின் ஒரு பாடல். "நல்லதோர் வீணை செய்தே அதை நலங்கெட புழுதியில் எறிவதுண்டோ?" எனும் பாடல். இந்த வரிகளை எழுதுவதற்கு பாரதியாரது மனோநிலை எப்படி இருந்திருக்கும் என எண்ணிப்பார்த்தேன். ஏனெனில் அதிலே உள்ள வார்த்தைகள் தீப்பொறி போல பறப்பதை நான் உணர்ந்தேன். ஆழமான ஒரு உணர்வில் இருந்துமட்டும்தான் அவ்வாறான உறுதியான வார்த்தைகள் வெளிப்படமுடியும். பாரதியாரின் வாழ்க்கையில் நடைபெற்ற விஷயங்களின் தாக்கத்தால் தான் அந்த வார்த்தைகள் அவ்வாறு வெளிவந்துள்ளன என நான் எண்ணுகிறேன். மனிதவாழ்கையின் மகத்துவத்தை நன்றாக புரிந்துகொண்ட பாரதியார் அது வீணாகிப் போய்க் கொண்டிருப்பதைக் கண்டு பொறுக்க முடியாமல், இந்தக் கவிதையூடாக தனது ஆதங்கத்தை சகமனிதர்களுடன் பகிர்ந்து கொண்டுள்ளார்.

இது எப்படியென்றால் விலைமதிக்க முடியாத பெரிய வைரத்தை ஒருவன் மேசையின் மேலே ஒரு காகித எடையாக பாவிக்கின்றான். அதனை ஒரு வைர வியாபாரி பார்த்தால் அவரது மனதில் என்ன தோன்றும்? அந்த வியாபாரிக்கு வைரத்தின் பெறுமதி தெரிந்த கரரணத்தாலே, சிலவேளை அந்த மனிதனை அவர் திட்டவும் செய்யலாம். ஆனால் அந்த மனிதனுக்கோ ஒரே குழப்பமாக இருக்கும். "கடந்த 40, 50 வருடங்களாக இந்தக் கல்லை இதே மேசையில் இப்படித்தானே நான் பாவித்து வருகின்றேன். என்னிடமே வந்து எனது கல்லைப் பற்றி கூறுவதற்கு இவர் யார்? இவருக்கு என்ன தெரியும்?" என எண்ணுவார். ஆனால் சிறிதளவு திறந்த உள்ளத்துடன், அந்த வைர வியாபாரி கூறுவதைக் கேட்பாரேயானால் அது வெறும் கல் அல்ல அது பெறுமதிமிக்க வைரம், தனது வாழ்வையே மாற்றக்கூடிய ஒரு பொருள் என்பதைப் புரிந்துகொள்வார். பாரதியாரும் இந்த வாழ்க்கை வெறுமனே வந்தோம், நாளாந்த இன்ப துன்பங்களில் அழுந்தி, பின்னர் இறந்துபோகும் ஒரு நிகழ்வாக இருக்கக்கூடாது என எண்ணினார். எனவேதான் இந்த மனித உடலை ஒரு வீணை எனக் குறிப்பிட்டார்.

ஒரு பிரமாண்டமான இசை நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. மேடையிலே ஒரு பிரபலமான புல்லாங்குழல் வித்துவான் தனது இசைத் திறமைகளை வெளிக்காட்டிக் கொண்டிருக்கிறார். அவரிடம் பல்வேறு விதம்விதமான புல்லாங்குழல்கள் இருக்கின்றன. அவரது புல்லாங்குழலில் இருந்து வந்த இனிமையான ஓசை, அங்கிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களின் காதுகளில் தேன்போல பாய்ந்து கொண்டிருக்கின்றது. அவர்களும் தம்மை மறந்து அந்த இசையில் மூழ்கியிருக்கிறார்கள்.

இப்பொழுது அந்த இனிமையான புல்லாங்குழல் இசைக்கு யார் காரணம் அல்லது எது காரணம் என்பதுதான் கேள்வி. ஏனெனில் அதே புல்லாங்குழலை எடுத்து இசையறிவே இல்லாத ஒருவர் ஊதினால்," ப்பூ.. ப்பூ.." என காற்றின் சத்தம் மட்டுமே வெளிவரும். அது அந்த இனிமையான புல்லாங்குழல் ஓசைபோல் இருக்காது. மாறாக மிகவும் எரிச்சலூட்டும் ஒரு சத்தமாகத்தான் இருக்கும். ஆனால் புல்லாங்குழலை வாசிக்க பயிற்சி செய்தால், யாரும் அதிலிருந்து மிகவும் இனிமையான இசையை ஏற்படுத்த முடியும். அதற்கு தேவையானது எல்லாம் இசைபற்றிய ஞானமும் பயிற்சியும் மட்டும்தான்.

ஆனால் யாரிடமாவது புல்லாங்குழலின் ஓசை இனிமையாக இருக்குமா அல்லது வெறுப்பேற்றும் விதமாக இருக்குமா எனக் கேட்டால், அவர் என்ன விடை கொடுக்கப்போகின்றார்? இனிமையான இசையைக் கேட்டவர் அது இனிமையாக இருக்கும் என்பார். வெறும் காற்றின் சத்தத்தை மட்டும் கேட்டவர், அது நன்றாக இருக்காது எனக் கூறுவார். ஆனால் உண்மை என்னவென்றால் எந்த ஒரு இசைக்கருவியாக இருந்தாலும், அந்தக் கருவியைப் பற்றிய ஞானமும் பயிற்சியும் இருந்தால், அதிலிருந்து இனிமையான இசையை யாரும் வெளிக்கொணர முடியும் என்பதுதான்.

மனித வாழ்வின் மகத்துவத்தைப் பற்றி பாரதியார் மட்டும் கூறவில்லை. பல ஞானிகளும் மகான்களும் கூறியுள்ளார்கள். மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் திருமூலர் எனும் ஞானி" உடம்பினை முன்னம் இழுக்கென்று இருந்தேன். உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன். உடம்பின் உள்ளே உத்தமன் கோயில் கொண்டானென்று, உடம்பினை யானிருந்து ஓம்புகின்றேனே" எனக் கூறியுள்ளார். இந்த உடலை நான் அழுக்கான ஒன்று என முதலில் கருதியிருந்தேன்.

அதன் உள்ளே என்ன உள்ளது என்பதைக் கண்டு கொண்ட பின்னர், இந்த உடல் மிகவும் மகத்தானது என்பதைப் புரிந்துகொண்டேன். என் உடலின் உள்ளே இறைவன் கோயில் கொண்டு இருப்பதனாலே, இதனை நான் மிகவும் அவதானமாக காத்து வருகிறேன் எனக் கூறினார் திருமூலர்.

நமக்கும் இந்த மனித உடல் எனும் ஒரு அற்புதமான கருவி தரப்பட்டுள்ளது. ஆனால் இதனை நாம் எதற்காக உபயோகிக்கின்றோம்? இதில் இருந்து ஆனந்தம் அமைதி மகிழ்ச்சி என்பவற்றை எவ்வாறு வெளிக்கொணர்வது எனும் வழியை நாம் கற்றுக்கொள்ளாவிட்டால், நமது வாழ்க்கையில் அவற்றை நாம் எதிர்பார்க்கமுடியாது. ஒரு புல்லாங்குழல் வித்துவான், எந்த துவாரங்களை மூடினால் எந்த சுரம் கேட்கும் என்பதை முதலில் கற்றுக்கொள்கிறார். பின்னர் அதனை தினமும் பயிற்சிசெய்கின்றார்.

எவ்வளவுதான் மிகப்பெரிய வித்துவானாக இருந்தாலும் சரி, எத்தனை பட்டங்கள் பெற்றிருந்தாலும் சரி, அவர் தினமும் அந்த இசைஞானத்தை பயிற்சிசெய்ய வேண்டும் ஞானமும் பயிற்சியும் மிகவும் முக்கியமானவை.

நமக்கு இந்த வாழ்க்கை துன்பக் கடலில் மூழ்கி தவிப்பதற்காக தரப்படவில்லை. நாம் ஒரு உன்னதமான வாழ்க்கையை அனுபவிப்பதற்காகத்தான் தரப்பட்டுள்ளது. நமது வாழ்விலும் ஆனந்தம் ,அமைதி, மகிழ்ச்சி என்பவை நிரம்பி இருக்கவேண்டும் என்றால், அதற்குரிய அறிவையும் நாம் கற்றுக்கொள்ளவேண்டும். கற்றுக்கொள்வது மட்டுமன்றி, அதனைத் தினமும் பயிற்சிசெய்ய வேண்டியதும் மிகவும் அவசியமாகின்றது.

அதைவிடுத்து நாம் இதுவரை செய்து வந்ததையே தொடர்ந்து செய்துகொண்டு இருப்பதால் எந்தவித மாற்றமும் ஏற்படப்போவதில்லை. இதனைத்தான் ஐன்ஸ்டீன் எனும் விஞ்ஞானி "செய்வதையே தொடர்ந்து செய்துகொண்டு, வித்தியாசமான விளைவை எதிர்பார்ப்பது பைத்தியக்காரத்தனம்" எனக் கூறியுள்ளார். நாமும் நமது வாழ்விலே தினமும் பல வேலைகளைச் செய்கின்றோம். ஆனால் அவற்றில் எத்தனை விஷயங்கள் நமக்கு உதவி செய்கின்றன, எத்தனை விஷயங்கள் நமக்கு தொந்தரவு கொடுக்கின்றன என்பதை நாம் எண்ணிப் பார்ப்பதில்லை. நம்மில் சிலர் நாங்கள் விரும்பும் எதையும் செய்வோம், எங்களுக்கு அந்த சுதந்திரம் உள்ளது எனக் கூறுவார்கள். அது உண்மை என்பதை மறுக்கமுடியாது. ஆனால் நாம் செய்யும் செயல்களால் ஏற்படும் விளைவுகள் நமது கட்டுப்பாட்டில் இருப்பதில்லை என்பது நமக்கு தெளிவாக தெரியவேண்டும்.

நமது வாழ்விலே ஆனந்தம் மலரவேண்டுமென்றால் நாம் செய்யும் செயல்களின் மேலே கவனம் செலுத்த வேண்டியது இன்றியமையாததாகின்றது. இந்த உலகத்திலே ஆனந்தமாக வாழ என்ன செய்யவேண்டுமென ஒரு சூத்திரத்தை உருவாக்கி வைத்துள்ளார்கள். கடினமாக படிக்கவேண்டும், அப்பொழுது நல்ல வேலை கிடைக்கும், நல்ல குடும்பம் அமையும், அப்பொழுது நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள் என்பதுதான் அந்தச் சூத்திரம். இது உண்மையா இல்லையா என்பது நம் எல்லோருக்கும் தெரிந்த விடயம் ஆகும்.

ஒரு ஆசிரியர் பிள்ளைகளுக்கு வீட்டுப் பாடம் கொடுத்தார். நீங்கள் பெரியவனாகி என்ன செய்ய விரும்புகிறீர்கள் என எழுதி வருமாறு பணித்தார். ஒவ்வொரு பிள்ளையும் ஒவ்வொரு விதமாக எழுதினார்கள். சிலர் மருத்துவராக வரவேண்டும் என எழுதினார்கள், சிலர் சட்டத்தரணியாக வரவேண்டும் என்று எழுதினார்கள். ஆனால் ஒரு பிள்ளை மட்டும் " நான் வளர்ந்து ஆனந்தமாக இருக்க விரும்புகிறேன்" என எழுதி இருந்தது. அதனைப் பார்த்ததும் ஆசிரியர் மிகவும் கோபமடைந்து "உனக்கு நான் கூறிய வீட்டுப் பாடம் புரியவில்லை" எனக் கூறினார். அதற்கு அந்தப் பிள்ளை ஆசிரியரைப் பார்த்து "உங்களுக்கு வாழ்க்கையைப் பற்றி புரியவில்லை" என அமைதியாகக் கூறியதாம். அடிப்படையில் இதுதான் விஷயம். நாம் எதைச் செய்தாலும் நமது வாழ்வில் ஆனந்தம் இருக்க வேண்டும். இல்லையென்றால் வாழ்க்கைப் பயணம் மிகவும் பாரமாகவும் கடினமாகவும் அமைந்துவிடும்.





உங்கள் படைப்புக்களும் சஞ்சீவியில் பிரசுரமாக வேண்டுமா?

- சிறுகதை
- பத்தி எழுத்து
- கட்டுரை
- கவிதை
- ஓவியம்

எதுவானாலும் அனுப்பி வையுங்கள்.
தரமானவற்றை பிரசுரிக்க காத்திருக்கிறோம்.
உங்கள் படைப்புக்களை அனுப்ப வேண்டிய முகவரி

சஞ்சீவி
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



0773155555


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிப்புக்குரிய மாவை ஐயாவுக்கு...

## அவசரமா ஒரு கடுதாசி

போன 19.06.2021 அண்டு பேப்பர் கடையிலை ஒரு பெருஞ்சண்டையாப் போச்சு. உங்கடை கட்சி விசுவாசி ஒராளின்ர அட்டகாசத்தைப் பற்றி உங்களுக்குத் தெரியப்படுத்திறதுக்குத்தான் இதை எழுதிறன். ஏனெண்டால் உங்கடை கட்சித் தொண்டர்கள் எண்டு சொல்லுற கனபேருக்கு உங்கடை கட்சியின்ரை கொள்கை என்னெண்டு தெரியாது. உங்கடை கட்சிப் பத்திரிகை எது எண்டும் தெரியாது. உங்கடை கட்சியின்ரை பேச்சாளர் ஆர் எண்டும் தெரியாது. அது போலை கன விசயம் இன்னும் விளக்கமில்லாமல் இருக்கு. அது போலைதான் அந்த விசுவாசிக்கும் விளக்கமில்லை.

அண்டைய உதயன் பேப்பரைக் கையிலை தூக்கிப் பிடிச்சுக்கொண்டு " எப்பிடி உதயன் கூட்டமைப்பை எதிர்த்து எழுதலாம்? எப்பிடி இந்தியாவுக்கு எதிரா எழுதலாம்? சீனாக்காரன் ராஜபக்சவின்ரை ஆளெல்லோ? எப்பிடிச் சீனாக்காரனுக்குச் சப்போர்ட் பண்ணி எழுதலாம்? மாவை ஐயா ஒரு நாளும் பிழையாக் கதைக்க மாட்டார்" எண்டு அந்த விசுவாசி காதடைக்கக் கத்தினார்.

அப்ப நான் அவருக்குக் கிட்டப் போய் "அண்ணை சும்மா சத்தம் போடுறதை விட்டிட்டு விசயத்தைச் சொல்லு. அப்பிடி உதயனிலை என்ன எழுதியிருக்கினம்?" எண்டு கேட்டன்.

"இல்லை. கூட்டமைப்புக்காரர் இந்தியத் தூதுவரைச் சந்திச்சவை எல்லே? அண்டு அவை தூதுவரோடை கதைச்சதை வைச்சுக்கொண்டு என்ன எழுதியிருக்கினம் எண்டு பாருங்கோவன்." எண்டு உதயன்ரை அண்டைய ஆசிரியர் தலையங்கத்தை எனக்குக் காட்டினார்.

அதை நானும் வாசிச்சுப்போட்டு "அவை எழுதினதிலை என்ன பிழை ?" எண்டு அவரிட்டைக் கேட்டன்.

"இராஜதந்திரம் எண்டது ஒரு நாட்டை இன்னுமொரு நாட்டிட்டை மாட்டிவிடுகிறதில்லை. எங்கடை எதிரியின்ரை நண்பன் சீனாக்காரன் எண்டதுக்காக ஏன் நாங்கள் அவனை எதிர்க்க வேணும்? ஒரு சர்வதேசம் சம்பந்தமாக மேசையிலை இருந்து கதைக்கேக்கை வலு நுணுக்கமா புத்திசாலித்தனத்தோடை கதைக்கிறதுதான் இராஜதந்திரம். இது அதை விட்டிட்டு நேசரிப் பிள்ளையள் மாதிரி ஆளையாள் கொளுவி விடுகிறமாதிரிக் கதைக்கிறது அவ்வளவு அழகில்லை. இதைத்தானே உதயன் பேப்பரில எழுதியிருக்கு. அதில என்ன பிழை? " எண்டு சொல்லிப்போட்டு, அந்த ஆசிரியர் தலையங்கத்தில இருந்த சில விசயங்களை ஆளுக்கு வாசிச்சுக் காட்டினன்.

"ராஜதந்திரம் என்பது அணிசேர் கொள்கை அல்ல. அது கன்னை பிரிந்து அடிபடும் விளையாட்டும் அல்ல. அதிலும் சிறுபான்மை இனமாகிய நாம், சீனா போன்ற சர்வ வல்லமையும், வீட்டோ அதிகாரமும் உள்ள நாடுகளை மறந்தும் பகைத்துவிடக் கூடாது. அதற்காக இந்தியாவை விட்டு வெளியே வந்து சீனாவுடன் சங்கமியுங்கள் என்று சொல்வது இந்தப் பத்தியின் நோக்கமல்ல"

நான் வாசிக்க அந்த விசுவாசிக்கு அதின்ர அர்த்தம் அப்பதான் விளங்கிச்சு.

உடன அவரிட்ட இன்னொரு கேள்வியைக் கேட்டு அதுக்கு நானே பதிலையும் சொன்னன்.

"அது சரி உதயன் பேப்பர் தமிழ் அரசுக் கட்சியின்ர இல்லாட்டி கூட்டமைப்பின்ரை உத்தியோகபூர்வப் பத்திரிகை எண்டு உனக்கு ஆர் சென்னது? அவையின்ரை உத்தியோகபூர்வப் பத்திரிகை சுதந்திரன் எல்லோ. ஆனால் அது இப்ப உள்ள கனபேருக்குத் தெரியாது. ஆனால் உதயன் பத்திரிகை நிறுவனத்தின்ரை உரிமையாளர், கூட்டமைப்பின்ரை எம்.பி யா இருந்தவர். அதாலை நீ மட்டுமில்லை, கனபேர் உதயனைக் கூட்டமைப்பின்ரை பேப்பர் எண்டுதான் நினைக்கிறவை. ஆனால் கூட்டமைப்பும் உதயன் பேப்பரும் தமிழ்த் தேசியத்துக்காக நிக்கிறதால கூட்டமைப் பின்ரை செய்திக்கு உதயன் முன்னுரிமை குடுக்கிது. அதுக்காக பேப்பர் கட்சியின்ர உத்தியோகபூர்வ பத்திரிகை எண்ட கணக்கில நினைக்கிறதும், நடக்கிறதும் கட்சிக்காரருக்கு ஏற்ற செயலில்லை கண்டியோ.

நீ சொல்லுற மாதிரி உதயன் கூட்டைப்பின்ரை பேப்பர் எண்டால் போன எலக்சன் நேரத்திலை சுமந்திரன் உதயனைப் பற்றிக் கேவலமாகக் கதைச்ச நேரத்திலை மாவை அண்ணையும் அதைக் கண்டுகொள்ளேல்லை. மற்றக் கூட்டமைப்புக்காரரும் வாய் திறக்கேல்லை. அதோடை எலக்சனுக்கப் பிறகு நடந்த மத்திய குழுக்கூட்டத்திலை சுமந்திரன்ரை ஆக்கள் தமிழரசுக் கட்சியின்ரை தேர்தல் பின்னடைவுக்கு உதயன் தான் காரணம் எண்டு பப்பிளிக்காக் குற்றஞ்சாட்டி னவை. அப்பவாச்சும் மாவை அண்ணை வாய் திறந்து ஒரு சொல்லுச் சொல்லி இருக்கலாம். அப்பவும் அவர் ஊமைத்துரை மாதிரி பம்மிக்கொண்டு இருந்திட்டார்.

பிறகு போன மாவீரர் தினத்தில பிரபாகரனின்ர பிறந்தநாளுக்கு உதயன் அவரைப் பற்றிச் செய்தி ஒண்டைப் போட்டிட்டுது, எண்டதுக்காக யாழ்ப்பாணப் பொலிஸ் மாத்தையா ஒரு வழக்குப் போட்டவர். அப்ப கட்சி பேதமில்லாலம் எல்லாரும் பொலிஸையும், அதை ஏவின அரசாங்கத்தையும் கண்டிச்சவை. ஆனால் மாவை அண்ணை அப்பவும் "இது நீதிமன்றப் பிரச்சினை.எனக்கேன் வம்பு" எண்ட மாதிரி வாயே திறக்கேல்லையாம். அப்பவெல்லாம் உங்களுக்கு உதயன் கண்ணுக்க தெரியேலை. இப்ப தங்கட பிழையை சுட்டிக்காட்டின உடனதான் உங்கள மாதிரி கட்சிக்காரருக்கு உதயன் கட்சிப் பேப்பரெண்டு கனவு வருகுது" என்று நான் பொரிஞ்சு தள்ளிப்போட்டன். அவ்வளவு தான், அந்த விசுவாசி கப்சிப்.

அப்பவும் எனக்கு மனம் கேக்கேலை. உடனை உதயன் பேப்பர் கொம்பனிக்கே போன் பண்ணி" இப்பிடி போட்டதுக்கு , தமிழரசுக் கட்சிக்காரர் அதுவும் மேல்மட்டங்கள் குழம்புது , அப்பிடி நீங்கள் போட்டது சரியா?" எண்டு கேட்டன்.

அவை சொல்லிச்சினம் "அன்னமுத்து அண்ணை, தமிழரசுக் கட்சியும், தமிழ் தேசியக் கூட்டமைப்பும் தமிழ்த் தேசியத்தின் பாதையிலை போற வரைக்கும் ஒரு தமிழ்த் தேசியத்துக்குச் சப்போர்ட்டான பேப்பர் எண்ட வகையில் உதயனும் அவைக்கு துணையா நிக்கும். அவை மட்டுமில்லை பிற தமிழ்க் கட்சியளெண்டாலும் சரி, தமிழ்த் தேசியத்துக்கும் மக்களுக்கும் விரோதமா இறங்கினால், அதை எல்லாத்தையும் அம்பலப்படுத்துவம், அவையின்ரை பிழையளையும் சுட்டிக்காட்டுவம். அதோடை அவையளை சரியான வகையிலை திசைப்படுத்துவம்" எண்டு சொல்லிச்சினம். அதில ஒரு பிழையும் இருக்கிறதா எனக்குப் படேல. அதால தான் நாட்டு நடப்பை உங்களுக்கு தெரியப்படுத்துவம் எண்டும், உதயன் உங்கட உத்தியோகபூர்வ பேப்பர் இல்லை, சுதந்திரன் தான் அப்பிடி கட்சியின்ர பேப்பர் எண்டதை உங்களுக்கு நினைவுபடுத்தவும் தான் இந்தக் கடிதத்தை அவசரமா எழுதினன்.

ஏனெண்டால் இனியாவது கட்சிக்காரருக்கு ஆர் கட்சியின்ர பேச்சாளர், ஆருக்கு பவர் இருக்கு? ஆர் முடிவெடுக்கிறது? எது உங்கட கட்சிப் பேப்பர் ? எண்டெல்லாம் ஒழுங்காச் சொல்லிக் குடுக்கப் பாருங்கோ. இல்லாட்டி அந்த விசுவாசி மாதிரி ஒண்டும் தெரியாம வாய்க்கு வந்ததை புசத்திக் கொண்டு கட்சிக்காரர் திரிய வெளிக்கிட்டிடுவினம். சொல்லிக் குடுப்பியள் எண்டு நம்பிறம்,

இப்படிக்கு
அப்பாவி [illegible]



# மாண்டிடர் பேரிடர்

## (கொரோனாக் காலப் பதிவுகள்)

○ வேலணையூர் சுரேஷ்

01.
கண்ணால் வடியும் கண்ணீர், எழுதும்
கையால் வடிந்து நாளும் நனைய,
அண்ணாந் திந்த உலகைப் பார்த்து,
ஓவென்று அழுது, எதைநான் எழுத?
உண்ணாது உறங்காது உயிர்வாழ்ந்திடுவார்!
'உயிர்ப்பலி' நோய்க்கு யார் வாழ்ந்திடுவார்?
எண்ணிலாத் துயர்த் தீ என்னுள் எரிய,
எப்படிப் பாடுவேன் இப்பேரிடரை?

02
பேரிடர் பரப்பி பேயென உலுப்பி
பித்துப் பிடித்து ஆட்டுமே கொரோனா!
வேரொடு பாறிய விருட்சம் போல
வாழ்வையே புரட்டிப் போட்டதே கொரோனா!
ஊருலகு அடங்கி ஊமையாய்ப் போயும்;
உறுநோய் 'கொரோனா' அடங்குதே யில்லை!

03
விண்ணிலு மற்று மண்ணிலு மற்று
வீட்டில் நிறுத்துது கொரோனா வைரஸ்!
கண்ணிலும் சொட்டுக் கண்ணீருமின்றி
கலங்க வைக்குது கொரோனா வைரஸ்!
அண்டவும் முடியாது அசையவும் முடியாது,
அலங்கோல வாழ்க்கை கொரோனா வந்து!
கண்ணாடிப் பெட்டி பொம்மையைப் போல
நிற்க வைக்குது கொரோனா வைரஸ்!

04
மனவெளி பெருக்கி மனிதரை மனிதர்
மதியா நிலையில் வந்ததே கொரோனா!
தனிவழியென்று தன்னலம் கருதும்
தருக்கரினாலே விழைந்ததே கொரோனா!
பனிப்போர் முறுகி பகைப்போர் ஆகி
பதில்போர் நடத்த எழுந்ததே கொரோனா!
இனிப் போர் உலகில் அணுப்போர் அல்ல;
அதற்கு அடி எடுத்து வைத்தது கொரோனா!

05
உள்ள நோய் போதா தென்றா; உலகை
உலுப்புது கொரோனா வந்து? இந்த
கொள்ளை நோய் பல்கிப் பெருகி; நெஞ்சம்
கனக்குதே துயரில் வெந்து! ஐயோ!
பல்லி தேள் பாம்பை உண்ணும் சீனாப்
பக்கமாய் வந்த கொரோனா! இன்று
உள் நாடெல்லாம் இந்நோய்த் தொற்று!
ஊமையாய் போனோம் உணர்திற னற்று!

– தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அருண்டவன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பலகை நடப்பட்டிருக்கிறது.

எனவே கிழக்கு அரியாலை, கல்முனையில் பந்தலடி, நெடுந்தீவு உட்பட மூன்று தீவுகள் ஆகியவற்றை இணைத்து குடாக்கடல் உள்ளடங்கலாக பாக்கு நீரிணையில் நெருக்கமான ஒரு வலைப்பின்னலை உருவாக்கலாம். அப்படிப் பார்த்தால் இதை வெறுமனே கடலட்டை விவகாரமாக மட்டும் பார்க்கலாமா என்று சந்தேகிப்பவர்களும் உண்டு.

ஆனால் சீனர்கள் உலகம் முழுவதும் தாங்கள் சந்தைகளைத்தான் திறக்கின்றனர் எனக் கூறுகிறார்கள். தங்களுடைய பிராந்தியத்துக்கு வெளியே உலகில் எந்த ஓரிடத்திலும் தாங்கள் போர்முனையைத் திறக்கவில்லை என்றும் கூறுகிறார்கள். சீன விரிவாக்கம் எனப்படுவது முழுக்க முழுக்க முதலீட்டு விரி வாக்கம்தான். உட்கட்டுமான அபிவிருத்திதான். இந்த உட்கட்டுமான அபிவிருத்திகள் அனைத்தும் சீனாவை நோக்கி மூலப்பொருள்களை கொண்டு செல்லும் அதே சமயம் சீனாவில் இருந்து உற்பத்திசெய்யப்பட்ட பொருட்களை வெளிச்சந்தைக்கு கொண்டுவரும் நோக்கிலானவை. எனவே சீனா உலகம் முழுவதும் முதலீடுகளை மட்டுமே நகர்த்தி வருவதாக கூறிக் கொள்கிறது.

மாறாக மேற்கு நாடுகள் படைகளை நகர்த்துகின்றன. உலகின் பல்வேறு இடங்களில் மேற்கு நாடுகள் படைத்தளங்களைப் பேணி வருகின்றன. ஆனால் சீனா பொதுவாக முதலீடுகளைத்தான் நகர்த்தி வருகிறது. அது ஆக்கிரமிப்பு நோக்கிலானது அல்ல என்று சீனாவை ஆதரிப்பவர்களும் சீன முதலீடுகளை ஊக்குவிப்பவர்களும் கூறிவருகிறார்கள். சீனா பல்வேறு நாடுகளின் படையெடுப்புக்கு உள்ளாக்கியதே தவிர சீனா ஒருபோதும் பிறநாடுகள் மீது படையெடுக்கவில்லை என்று அண்மையில் மகிந்த ராஜபக்ச உரையாற்றியிருந்தார். சீனக் கொமியூனிஸ்ட் கட்சியின் நூறாவது ஆண்டு நிறைவையொட்டி நடந்த வைபவத்தில் காணொலித் தொழில்நுட்பமூடாகக் கலந்துகொண்டு அவர் அவ்வாறு உரையாற்றினார்.



சீனாவுக்கு எதிராக தேவையற்ற பயம் ஒன்றை உலகம் முழுவதிலும் உள்ள ஒரு பகுதி விமர்சகர்கள் மற்றும் ராஜதந்திரிகள் கட்டியெழுப்பி வருகின்றனர் என சீனாவின் ஆதரவாளர்கள் குற்றம் சாட்டுகிறார்கள். இது ஒருவித அச்ச நோய். அதாவது 'சீனா போபியா' என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

ஆனால் இது தனியே முதலீடு மட்டுமல்ல இதுவும் ஒரு ஆக்கிரமிப்புத்தான் என்று சீனாவை சந்தேகத்தோடு பார்ப்பவர்கள் கூறுகிறார்கள்.

பலமான ஒரு பொருளாதாரம் நிதி ரீதியாக நலிவுற்ற பொருளாதாரங்களின் மீது மேற்கொள்ளும் ஆக்கிரமிப்பு இதுவென்றும், தேவைகளை அடிப்படையாக வைத்து இயலாமையைச் சுரண்டி ஒரு சந்தை ஆக்கிரமிப்பு முன்னெடுக்கப்படுகிறது என்றும் அவர்கள் கூறுகிறார்கள். அதை சீனாவின் கடன் பொறி அல்லது சந்தை குண்டு என்றும் அவர்கள் அழைக்கிறார்கள்.

மேலும் சீனப் பெருந்தலைவர் மாவோ சே துங், முன்பு கூறிய ஒரு கதையை அவர்கள் நினைவுபடுத்துகிறார்கள். பெரிய மீனும் சிறிய மீனும் வசிக்கும் ஒரு கடலில் பெரிய மீன் சிறிய மீன்களை தனக்கு உணவாகச் சாப்பிட்டு வந்தது. ஒரு கட்டத்தில் சிறிய மீன்கள் பெரிய மீனிடம் போய் முறையிட்டன. அப்பொழுது பெரிய மீன் கூறியது "இங்கு எல்லோருமே சமம். அவரவர் அவரவருக்கு விருப்பமானதை சாப்பிடலாம்" என்று.

ஆனால் சிறிய மீன்களால் அவற்றின் சிறிய வாயால் எப்படி பெரிய மீனைச் சாப்பிடுவது ?

நாடுகளுக்கிடையே நிதி ரீதியாக ஏற்றத்தாழ்வுகள் இருக்கும் பொழுது, அல்லது பலம் தொடர்பில் ஏற்றத்தாழ்வுகள் இருக்கும்பொழுது "எல்லோரும் ஒன்றுதான் எல்லாருக்கும் சம வாய்ப்பு "என்று கூறுகையில், பலமானது பலவீனமானதை தின்றுவிடும். வறிய நாடுகளை நோக்கிய சீனாவின் முதலீடுகளும் அப்படிப்பட்டவைதான் என்று சீன முதலீடுகளை விமர்சிப்பவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

இவ்வாறான வாதப்பிரதிவாதங்களின் பின்னணியில்தான் இலங்கைத் தீவிலும் சீன முதலீடுகள் அதிகரித்து வருகின்றன. அவை தென்னிலங்கையை தாண்டி தமிழ்ப் பகுதிகளுக்கும் பரவத் தொடங்கி விட்டன. குறிப்பாக தென்னிந்தியாவுக்கு அணுக்கமாக வந்துவிட்டன. இதன் விளைவாக ஒரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரின் அருண்ட கண்களுக்கு இருண்டதெல்லாம் வெளிச்சமாகத் தெரிந்ததா?

# அரசியல் கைதி



(08 - 09ஆம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் பொது மன்னிப்பு வழங்கிய விடயத்தில் கருத்துத் தெரிவித்துள்ள முன்னாள் மனித உரிமை ஆணையாளர் கலாநிதி பிரதீபா மகநாம றேவா 1978 ஆம் ஆண்டு இரண்டாவது குடியரசு யாப்பிலேயே குற்றவாளி ஒருவருக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்குவது தொடர்பான சரத்து உள்வாங்கப்பட்டுள்ளது. அந்தச் சரத்தின்படி தீர்ப்பளித்த நீதிபதி,சட்டமா அதிபர் மற்றும் நீதி அமைச்சரிடம் ஜனாதிபதி அறிக்கை கோரவேண்டும் . அதனைச் செய்யாமல் ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்க முடியாது என்று அரசமைப்பில் கூறப்ப டவில்லை . எனவே அரசியல் அமைப்பில் அது ஒரு கட்டாய நிபந்தனையாக உள்ளடக்கப்படவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்குத் தெரியாத அரசமைப்பு இருக்க முடியாது. அப்படியானால் துமிந்தவைப் போல அப்போதும் நீதியமைச்சரின் அனுமதியில்லாமல், ஜனாதிபதி மூலம் அரசியல் கைதிகளுக்கு பொதுமன்னிப்பை வழங்கி விடுவித்திருக்கலாமே.

## உண்மைகள் உறங்குவதில்லை

2015 ஆம் ஆண்டு நல்லாட்சி காலத்தில் சட்டமா அதிபரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு மேல் நீதிமன்றங்களில் , விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கும் கைதிகளின் விடுதலை மற்றும் தண்டனை வழங்கப்பட்ட அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கும் விடயத்தில் சரியான பொறிமுறைகள் கையாளப்படாமையால் அரசியல் கைதிகளில் ஒரு கைதிகூட விடுதலை செய்யப்படவில்லையென நான் பல தடவைகள் பல்வேறு ஊடகங்களில் வெளிப்படுத்தியிருந்தேன். ஆனால் அதன் போதெல்லாம் என் மீது பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. கைதிகளின் விடுதலை விடயத்தில் சரியான பொறிமுறைகள் கையாளப்படாமையால் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படவில்லையென நான் முன்வைத்த காரணங்களை காலம் கடந்து ஒப்புதல் வாக்குமூலமாக பகிரங்கமாக, திறந்தவெளி நேர்காணலில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் வெளிப்படுத்தியுள்ளமை வரவேற்கத்தக்கது. உண்மைகள் நீண்ட காலம் உறங்குவதில்லை.

**கே: பயங்கரவாதத் தடைச்சட்டம் சிறுபான்மையினருக்கு எதிரானதாகக் கொண்டுவரப்படவில்லையென வெளிவிவகார அமைச்சர் கூறியுள்ளாரே ?**

ப: இந்தச் சட்டம் தமது மொழி தமது நிலம் என்பவற்றின் உரிமைக்காக போராடிய தமிழ்ப் போராளிகளை கையாள்வதற்காகவே ஒரே நாளில் சட்டமாகக் கொண்டுவரப்பட்டது. 2009 ஆம் ஆண்டு உள்நாட்டு யுத்தம் மௌனிக்கப்பட்ட பின்னரும் இன்று வரை தொடர்ந்து சிறுபான்மை சமூகத்தின் மீது பாய்கின்ற நிலையில் இந்தச் சட்டம் சிறுபான்மையினருக்கு எதிராக கொண்டுவரப்படவில்லையென வெளிவிவகார அமைச்சர் கூறிய கருத்தை புரிந்து கொள்ளமுடியவில்லை.

> ஒரு சிறுபான்மைச் சமூகத்துக்கு எதிராக ஒரு கொடூரமான சட்டம் கொண்டு வரப்படும்பொழுது, மற்றைய சிறுபான்மைச் சமூகம் அந்தச் சட்டத்தை எதிர்க்காமல் அமைதி காத்தால், அதே சட்டம் அமைதி காத்த சமூகத்துக்கும் எதிராக ஒருநாள் கட்டவிழ்த்து விடப்படும் என்பதையே தற்பொழுது நடைபெறும் கைதுகளும் தடுப்புக்காவல்களும் வெளிப்படுத்துகின்றன.

எந்தவொரு பயங்கரவாதச் சட்டமும் பிரஜைகளுக்கெதிரானதாகும் என்பதோடு,'முற்போக்கானது' என்று அழைக்கப்பட முடியாததாகும். அவ்வாறான பயங்கரவாதத் தடைச் சட்டம் 1977 ஜூலை பொதுத் தேர்தலில் பதவிக்கு வந்த ஜே. ஆர் ஜெயவர்த்தன தலைமையிலான அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்டது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மற்றும் அதனை ஒத்த இயக்கங்களை தடை செய்யும் சட்டமே பயங்கரவாத தடைச்சட்டமாகும். அத்தகைய கடுமையான சட்டம் அவசரச்சட்டமாக ஒரே நாளில் 1979 ஆண்டு ஜூலை 19 ஆம் திகதி தற்காலிக சட்டமாக நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டு பின்னர் 1982 ஆம் ஆண்டில் 10 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் நிரந்தரச் சட்டமாக்கப்பட்டு 42 ஆண்டுகளை 2021 ஆண்டு ஜூலை 19 ஆம் திகதி கடக்கின்றது. இந்தச் சட்டம் இன்றும் நடைமுறையிலுள்ளது.

அத்தகைய கொடூரமான சட்டம் அவசர சட்டமாக கொண்டுவரப்பட்டதன் நோக்கம் தமது மொழி, தமது நிலம் என்பவற்றின் உரிமைக்காக போராடிய போராளிகளை அடக்குவதுதான். இந்தச்சட்டம் தமிழ்ச் சமூகத்துக்கு எதிராக கொண்டுவரப்பட்டபொழுது தமிழ் தலைமைத்துவங்களோ அல்லது முஸ்லிம் சமூகத்துவமோ எதிர்ப்புக்குரல் கொடுக்கவுமில்லை, நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடத்தப்படும் பொழுது இந்தச் சட்டத்தை எதிர்த்து வாக்களிக்கவுமில்லை.

ஒரு சிறுபான்மைச் சமூகத்துக்கு எதிராக ஒரு கொடூரமான சட்டம் கொண்டு வரப்படும் பொழுது மற்றைய சிறுபான்மைச் சமூகம் அந்தச் சட்டத்தை எதிர்க்காமல் அமைதி காத்தால், அதே சட்டம் அமைதி காத்த சமூகத்துக்கும் எதிராக ஒருநாள் கட்டவிழ்த்துவிடப்படும் என்பதையே தற்பொழுது நடைபெறும் கைதுகளும் தடுப்புக்காவல்களும் வெளிப்படுத்துகின்றன.

தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டதை நசுக்குவதற்காக கொண்டுவரப்பட்ட சட்டம் இன்று அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிசாட் பதியூதீன் , மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலி, மனித உரிமைகள் சட்டத்தரணி இயாஸ் இஸ்புல்லா மற்றும் சிவில் அமைப்பு ஆர்வலர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள் உட்பட 200 க்கும் மேற்பட்டவர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலிலும் சிறைச்சாலைகளிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலிலும் சிறைச்சாலைகளிலும் தடுத்தும் அடைத்தும் வைக்கப்பட்டிருக்கும் தமிழ்க் கைதிகளும், முஸ்லிம் சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்த 200க்கு மேற்பட்ட கைதிகளுமாக மொத்தமாக 400 க்கும் மேற்பட்டோர் இன்னும் விடுவிக்கப்படாமல் உள்ளனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் பயங்கரவாத தடைப் பிரிவுப் பொலிஸாரால் நீதவான் நீதிமன்றங்களில் விசாரணை அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டு , முன்னிலைப்படுத்தப்பட்ட கைதிகளுக்காகவும் சட்டமா அதிபரால் மேல் நீதிமன்றங்களில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட வழக்குக்களிலுமாக, ஆயிரத்துக்கும் மேற்பட்டஅரசியல் கைதிகளுக்காக வாதாடி அவர்களில் பலரை நான் விடுதலை செய்துள்ளேன்.

தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டத்தை நசுக்குவதற்காக கொண்டுவரப்பட்ட சட்டம் இன்று அரசியல் பழிவாங்கல்களுக்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது என்பதும் உண்மைதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு

ஆர்.லயனல்

## பரிஸில் ராமோஸ்!




ஸ்பெய்னின் ரியல் மட்ரிட் கழகத்துக்காக விளையாடி வந்த ராமோஸ் அந்தக் கழகத்துடனான ஒப்பந்தத்தை முடித்துக்கொண்ட நிலையில் அவர் தற்போது பிரான்ஸின் பிரபல கழகமான பரிஸ் செயின்ட் ஜேர்மனுடன் ஒப்பந்தமாகியுள்ளார்.

சுமார் கடந்த 15ஆண்டுகளாக ராமோஸ் ரியல் மட்ரிட்டுக்காக விளையாடி வந்தார். 22 கிண்ணங்களை மட்ரிட் கைப்பற்ற ராமோஸ் முக்கிய காரணமாக இருந்தார். எனினும் அண்மைக்காலமான தொடர் தோல்விகள் மற்றும் அணிக்குள் ஏற்பட்ட தன்முனைப்பு (ஈகோ) பிளவுகள் என்பk ராமோஸுக்கும் ரியல் மட்ரிட் நிர்வாகத்துக்கும் இடையில் சில மனக்கசப்புக்கள் ஏற்படக் காரணமாக அமைந்தன. காலப்போக்கில் மட்ரிட்டில் இருந்து ராமோஸ் பிரிந்து செல்லும் அளவுக்கு இந்த விவகாரம் சென்று முடிந்தது.

மட்ரிட்டில் இருந்து ராமோஸ் பிரிந்த பின்னர் அவர் வேறு எந்தக் கழகத்துடன் ஒப்பந்தமாகவுள்ளார் என்பது தொடர்பில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது. மன்செஸ்டர் யுனைற்ரெட், பரிஸ் செயின்ட் ஜேர்மன் அணிகள் அவரை வாங்குவதற்கு முனைப்புக் கொண்டிருந்த நிலையில் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு பரிஸ் செயின்ட் ஜேர்மனுக்காக ஒப்பந்தமாகியுள்ளார் ராமோஸ்.

பரிஸ் செயின்ட் ஜேர்மனில் மப்பே, நெய்மர் ஆகிய முக்கிய வீரர்கள் உள்ளனர். தற்போது இந்தக் கூட்டணியுடன் ராமோஸ் இணைவது அந்த அணியை நிச்சயம் பலமாக்கும். இன்னொரு விடயத்திலும் இந்தப் புதிய கூட்டணி பெரிதும் எதிர்பார்க்கப்படுகின்றது. அதாவது நெய்மர் பரிஸ் செயின்ட் ஜேர்மனுடன் ஒப்பந்தமாக முன்னர் ரியல் மட்ரிட்டின் பரம எதிரி என்று கருதப்படும் பார்சிலோனாவுக்காக விளையாடினார். அப்போது ராமோஸ், நெய்மர் இடையே கடும் வாக்குவாதங்கள் பிடுங்குபாடுகள் இடம்பெற்றன. தற்போது இவர்கள் இருவரும் ஒரே அணியில் விளையாடவுள்ளனர்.

**"நீயும் நானுமா நெய்மர் நீயும் நானுமா?"**




ஒரு வீரரின் தகாத நடவடிக்கைக்காக அந்த வீரர் தண்டிக்கப்படலாம். ஆனால், அந்த ஆட்டத்தில் நடுவராகக் கடமையாற்றியவர் தண்டிக்கப்படலாமா?. அவ்வாறானதொரு சம்பவம்தான் பங்களாதேஷில் இடம்பெற்றுள்ளது.

பங்களாதேஷ் பிறீமியர் லீக் அண்மையில் நடைபெற்றது. இந்தத் தொடரில் இடம்பெற்ற ஆட்டமொன்றில் நடுவரிடம் ஆட்டமிழப்புக் கோரிக்கை விடுத்தார் சகிப் அல் ஹசன். நடுவர் ஆட்டமிழப்பு வழங்க மறுத்ததை அடுத்து விக்கெட்டை கால்களால் தாக்கியும் பிடிங்கி எறிந்தும் ஆவேசத்தை வெளிப்படுத்தினார் சகிப் அல் ஹசன். இது அனைவரும் அறிந்ததே.

ஆனால், இதே தொடரில் இன்னுமொரு ஆட்டத்தில் நடுவர் ஆட்டமிழப்பு வழங்க மறுத்ததை அடுத்து ஆடுகளத்தில் படுத்துக்கிடந்து ஆட்டத்தை தொடர்ந்து நடத்த முடியாமல் செய்துள்ளார் மகமதுல்லா. இந்த விவகாரம் அவ்வளவாக பேசப்படவில்லை. இந்த இரு ஆட்டங்களுக்கும் நடுவராகக் கடமையாற்றிய மோனிருஸ்மன் என்பவரே தற்போது மனமுடைந்து தன் பதவியைத் துறந்துள்ளார்.

'எனக்கென சுயமரியாதை உள்ளது. அது இல்லாத இடத்தில் பணியாற்ற மாட்டேன்' என்று தனது பதவி விலகல் குறித்துத் தெரிவித்துள்ளார் நடுவர் மோனிருஸ்மன். இவ்வாறான குற்றங்கள் வேறு நாடுகளில் இழைக்கப்பட்டால் வழங்கப்படும் தண்டனை கடுமையாக இருக்கும். குறைந்த பட்சம் ஓர் ஆண்டுக்குத் தடை விதிக்கப்படும். ஆனால் சகிப் அல் ஹசனுக்கும், மகமதுல்லாவுக்கும் வெறும் அபராதங்கள்தான் விதிக்கப்பட்டன. இப்படியொரு கிரிக்கெட் சபையின் கீழ் பணிபுரிவதை விட விலகுவது ஒன்றும் மோசமான முடிவல்ல என்று மோனிருஸ்மனுக்கு பலரும் ஆதரவு வழங்கியுள்ளனர்.

**" மயிர் நீப்பின் உயிர்வாழாக் கவரிமா =மோனிருஸ்மன் பதவி நீப்பர் மானம் வரின்"**

## பேரதிர்ச்சி



யூரோ கிண்ணத் தொடர் அரையிறுதிச் சுற்றில் வந்து நிற்கின்றது. 24 அணிகளில் எந்த அணி கிண்ணத்தைக் கைப்பற்றும் என்ற நிலைமாறி இப்போது எம்முன் இருப்பது வெறும் 4 தெரிவுகள்தான். ஆனால் இதுவரை நடைபெற்ற ஆட்டங்களிலேயே பேரதிர்ச்சியான ஆட்டமென்றால் அது சுவிற்சர்லாந்தால் பிரான்ஸ் வெளியேற்றப்பட்ட ஆட்டம்தான். யூரோ கிண்ணத் தொடரில் களம்கண்ட அணிகளிலேயே மிகவும் பலம்பொருந்திய அணியாக அமைந்தது பிரான்ஸ்தான். அத்துடன் உலகச் சம்பியன் என்ற அந்தஸ்தும் பிரான்ஸ் மீதான எதிர்பார்ப்புக்கு முக்கிய காரணமாக அமைந்தது. இத்தகையதொரு பின்னணியில்தான் காலிறுதிக்குத் தகுதிபெறும் ஆட்டத்தில் சுவிற்சர்லாந்தை எதிர்கொண்டது பிரான்ஸ்.

இந்த ஆட்டத்தில் சுவிஸை பிரான்ஸ் ஊதித்தள்ளும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அதன்படியே ஆட்டத்தின் பெரும்பாலான நிமிடங்கள் அமைந்தன. 80 நிமிடங்களின் நிறைவில் பிரான்ஸ் 3:1 என்று முன்னிலையில் இருந்தது. அதன் பின்னர் திடீர் எழுச்சிகண்டு 90 நிமிடங்களின் முடிவில் 3:3 என்றாக்கியது சுவிஸ். மேலதிக நிமிடங்களிலும் 3:3 நிலை. இதையடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை. சுவிஸ் 5 வாய்ப்பையும் கோலாக்க பிரான்ஸின் இறுதி உதையை மப்பே தவறவிட்டார். 5:4 என்ற கோல் கணக்கில் சுவிஸ் பிரான்ஸை வெளியேற்றியது.

மப்பே, போக்பா, கிரீஸ்மன், டெம்பிலி, பென்சிமா என்ற சர்வ வல்லமையும் பொருந்திய இமாலயக் கூட்டணியை சுவிஸ் வெளியேற்றியமை உலகின் 8 ஆவது அதிசயம்தான். பிரான்ஸ் மட்டுமல்ல பிரான்ஸ் இடம்பெற்றிருந்த குழுவில் எந்த அணியும் தற்போது மிச்சமில்லை. நடப்புச் சம்பியன் போர்த்துக்கல், முன்னாள் உலகச்சம்பியன் ஜேர்மனி என்று அத்தனை முக்கிய அணிகளும் வெளியேற்றப்பட்டுவிட்டன. மொத்தத்தில் இம்முறை யூரோ கிண்ணத் தொடர் பேரதிர்ச்சிகளுக்குப் பஞ்சம் இல்லாமல் நகர்ந்துகொண்டிருக்கின்றது.

**"கால்பந்தே இது [illegible] காற்றிலே [illegible]"**



# நீ விதைத்த வினையெல்லாம்...

ஆர்.பிரகாஷ்

ஒட்டுமொத்த உலகமும் மனித வாழ்வுக்கு ஒவ்வாத பகுதியாக மாறிக் கொண்டிருக்கின்றது. அடுத்தடுத்த ஆண்டுகளில் வெப்பப்புயல்கள். அனல் காற்று என்பவை காரணமாக ஐரோப்பியா முழுவதும் கடும் பாதிப்புக்களை எதிர்கொள்ள வேண்டிவரும் என்ற எச்சரிக்கை கடந்த இரு ஆண்டுகளுக்கு முன்னர் புவியியல் வல்லுநர்களால் விடுக்கப்பட்டதுதான். ஆனால், அந்த எச்சரிக்கைகளுக்கு உரிய தாற்பரியத்தை, கனதித்தன்மையை உலக நாடுகள் கொடுக்கவில்லை. வழக்கம் போல தொழிற்சாலைகளையும் இமாலய இயந்திர உலைகளையும் வைத்து பூமியைச் சூடாக்கும் நடவடிக்கையை விடாது முன்னெடுத்தன.

தற்போது அதன் தாக்கத்தை - எதிர்வினையை அனுபவிக்க ஆரம்பித்திருக்கின்றது உலகம்.

தனக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்குத் தகுந்த பதிலடியைக் கொடுக்கும் நடவடிக்கையை கனடாவில் இருந்து ஆரம்பித்திருக்கின்றது இயற்கை.




### கனடாவில் மனிதப் பேரிடர்

கனடா என்றதும் உடன் நினைவுக்கு வருவதென்ன?. ஒட்டாவா பெருநகரம், வானுயர்ந்த கட்டடங்கள். அழகிய பூங்காக்கள் இவைதானே. ஆனால் கடந்த ஒரு வாரமாக நிலைமை தலைகீழ். உலகின் நிகழ்காலப் பெருந்துயராக கனடா மாறிநிற்கின்றது. இன்று அதிக வெம்மை நிலவும் நாடுகளில் முதலிடம் கனடாவுக்குத்தான். கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியாவின் லிட்டன் கிராமத்தில் 49.6 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியுள்ளது. இதுதான் சமீப நாள்களில் மனித வாழ்வுப் பகுதிகளில் நிலவிய உச்சபட்ச வெப்பநிலை. கடந்த ஒரு வாரத்துக்குள் சுமார் 600 பேர் இந்த அனல் நிலையால் இறந்துள்ளனர். இதை 'மனிதப் பேரிடர்' என்கிறது கனேடிய அரசு. வெப்பநிலைக்கு எதிராக மக்கள் தம்மைத் தகவமைத்துக்கொள்ள கனடா அரசு பல நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டிருக்கின்றது. நகரின் பல இடங்களில் செயற்கைக் குளங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தண்ணீரை தூமியாக வீசியெறியும் இயந்திரங்கள் வீதிகளில் பொருத்தப்பட்டுள்ளன. குளிரூட்டப்பட்ட பிரமாண்டமான வளாகங்கள் பிரிட்டிஷ் கொலம்பியாவில் ஆங்காங்கே திறக்கப்பட்டுள்ளன. எனினும் இயற்கைக்கு எதிரான இந்தப் போரில் மனிதனுக்குக் கிடைத்தது என்னமோ பெரும் பின்னடைவுதான்.

### கவனமெடுக்கும் துன்பேர்க்

கனடாவில் நிகழ்ந்திருக்கும் இந்த வெப்ப அலையின் தாண்டவத்தை அடுத்து, உலகத்தின் பேசுபொருளாக மாறியிருக்கின்றார் கிரைட்டா துன்பேர்க். சுவீடனைச் சேர்ந்த பதின்ம வயதுச் சிறுமிதான் கிரைட்டா. இவர் பூமியை வெப்பமாக்கும் செயற்பாடுகளுக்கு எதிராகக் குரல் கொடுத்துவந்த பருவநிலை செயற்பாட்டாளர். உலக நாடுகளின் கடும்போக்குக்கு எதிராகவும் அமெரிக்க அதிபர் ட்ரம்புக்கு எதிராகவும் குரல்கொடுத்து உலகத்தின் கவனத்தை ஈர்த்தவர். பிரான்ஸில் நடைமுறைப்படுத்தப் பட்ட பரிஸ் பருவநிலை ஒப்பந்தத்தை உலக நாடுகள் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதில் தீராத மோகம் உடையவர். ஆனால் கிரைட்டாவின் கோரிக்கைகள் உலக மக்கள் மத்தியில் அவரை ஒரு ஆதர்சமாக மாற்றியதே தவிர உலக நாடுகளின் அதிகாரப் பீடங்களின் இரும்பு இதயங்களை அசைக்கவில்லை. அதன் விளைவுதான் இன்று கனடா கண்டுகொண்டிருக்கும் காட்சிகள். பூமி வெப்பமாதலால் ஏற்படும் ஆபத்து கனடாவில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் சம்பவங்களுடன் முடிந்துவிட்டதா? என்றால் இல்லை என்பதுதான் பதில். அமெரிக்காவில் அடுக்குமாடிக் கட்டடம் ஒன்று அண்மையில் திடீரென நிலத்துக்குள் புதையுண்டது. பரப்பளவில் லண்டனை ஒத்த பனிப்பாறை துருவப் பகுதியில் இருந்து உடைந்து விடுபட்டு கரைய ஆரம்பித்திருக்கின்றது. இவையெல்லாவற்றையும் இந்தப் பேராபத்தின் இன்னபல சாட்சிகளாகக் கொள்ளலாம்.

எது எப்படியாக இருந்தாலும் இன்று கண் முன் நிகழ்ந்துகொண்டிருக்கும் இயற்கையின் இந்தக் கோரச் சம்பவங்களுக்கான விதை என்னமோ மனிதன் போட்டதுதான். இனியும் நாம் நல்லவற்றை விதைக்கத் தவறின் விளைவுகள் நாம் இன்னுமின்னும் அல்லல்படும் வகையில்தான் அமையும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org